துய்ய கேரளம்

(மூலமும் உரையும்)



லோட்டஸ் பப்ளிஷிங் ஹவுஸ்
சென்னை – 26.

துய்ய கேரளம்

(மூலமும் உரையும்)

உரையாசிரியர்
ஞானயோகி - டாக்டர் . ப. இசக்கி டி.ஐ.எஸ்.எம்.
பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

தொலை பேசி எண் - 23620249.
லோட்டஸ் பப்ளிஷிங் ஹௌஸ்
7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 600 026.

லோட்டஸ் வெளியீடு

முதல் பதிப்பு	:	நவம்பர் 2002
உரிமை பெற்றது.	:	
இரண்டாம்பதிப்பு		நவம்பர் 2022

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	தூய்ய கேரளம் (மூலமும் உரையும்)
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
உரையாசிரியர்	:	டாக்டர் . ப. இசக்கி
வெளியிட்டோர்	:	லோட்டஸ் பப்ளிஷிங் ஹௌஸ் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	நவம்பர் 2022
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	121 + 5
பிரதிகள்	:	1000.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ. 75/-
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

91/4

துய்ய கேரளம்

முகவுரை

**ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைப் பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை முன்னாடு.**

சித்தர் பெருமக்களும், ஞானிகளும், மகிரிஷிகளும் இவ்வுலகில் மனித வர்க்கத்தினரின் உய்வுக்காக எடுத்துச் சொல்லப்பட்ட சாத்திரங்கள் எண்ணிலடங்கா.

இவற்றுள் மனித வர்க்கத்தின் நன்மை, தின்மைகளை எடுத்துக் கூறவல்லது ஜோதிட சாஸ்திரமாகும்.

இவை கடந்த கால, நிகழ்கால, வருங்கால மாகிய மூவகைப்படும்.

இத்திரி காலத்தையும் உணர்ந்து சொல்லவல்ல வழிமுறைகள் பல பிரிவுகளாய் இருப்பினும் துவாதச பாவகமாகிய 12 பாவக பலன்கள் மூலம் ஒருவருக்குப் பலாபலன்கள் கூறுபோமேயானால் அது மிகச் சரியான தொரு பலனைத் தரும்.

இவ்வகைச் ஜோதிட கிரந்தங்கள் பல இருப்பினும் காலத்தால் மிகப் பழமையானதும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பலன்களைக் கூறவல்லது மாகிய சிறந்த நூலே இங்கு சொல்லப்பட்டு உரை எழுதப்புகும் "துய்ய கேரளம்" எனும் நூலாகும்.

இந்நூலில் ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறந்து மறுமையில் அச் சாதகன் அடையும் நிலை என்ன என்பதையும் மிகத் தெளிவாகச் சொல்லி உள்ளது.

இதில் இலக்கினபாவகமானது உடல், உயிர், ஆன்மா, மனம், அழகு, தோற்றம் முதலான வற்றையும் இரண்டாம் பாவகத்தில் தனம், குடும்பம், வாக்கு, வித்தை, நேத்திரம் இவை முதலானவையும், மூன்றும் பாவகத்தில் சகோதரம், தொழில், யாத்திரை, காதணி, ஆடை, அணிகலன், ஆபரணம், தைரியம், வீரியம் போன்றவைகளையும், நான்காம் பாவகத்தில் தாய், சுகம், கன்று காலிகள், கட்டில் மெத்தை, மாட மாளிகை போன்றனவற்றையும், ஐந்தாம் பாவகமானது புண்ணியம், புத்திரன், பிரபுத்துவம், மனம் முதலான வற்றையும், ஆறாம்பாவகம் எதிரி, நோய் நொடி முதலான நிலைகளையும்,

ஏழாம் பாவகம் மனைவி, தொழில், நட்பு முதலானவற்றையும், எட்டாம் பாவகம் ஆயுள், கெண்டம், தவறிவிழுதல், அரச தண்டனை முதலியனவும், ஒன்பதாம் பாவம் பிதா, பூர்வபுண்ணியம், தவம், தருமம் முதலியனபற்றியும், பத்தாம் பாவகத்தில் தொழில் பற்றியும், பதினொன்றில் மூத்தசகோதரம், இலாபம் முதலியனவும், பன்னிரண்டாம் பாவகத்தில் அரச, சயன, சுக, போக மோட்சம் பற்றியும் சிறப்பாக எடுத்துச் சொல்லுகிறது.

மொத்தத்தில் இந்நூல் ஜோதிடம் கற்றுணர்ந்தவர்களுக்கும், கற்றுக் கொண்டு இருப்பவர்களுக்கும் மிகவும் அவசியமான நூலாகும்.

இத்தகைய அருமை பொருந்திய நூலை உரை எழுதி வெளியிட வேண்டும் என்று தாமரை நூலகம் நிறுவனர் அமரர் எஸ்.பி. இராமச்சந்திரன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல அகராதிகளின் துணை கொண்டும், எமது 25 ஆண்டுகால ஜோதிட அனுபவத்தின் வாயிலாகவும் உரை எழுதியிருக்கிறோம்.

எனவே வாசக நேயர்களாகிய தாங்கள் இந்நூலைப் பெரிதும் போற்றி வாங்கி வாசித்து இதன் சாற்றை எடுத்துச் சக்கையை விடுத்து இறையருளால் சகலஇகபர நலன்களையும் அடைய வேண்டி வணங்கி விடை பெறுகிறோம்.

இவன்
உரையாசிரியர்

ஞானயோகி - ப. இசக்கி. டி.ஐ.எஸ்.எம்
மணி மந்திரவைத்திய ஜோதிடம்
25 பி/1 - புலவர்தெரு, கிருஷ்ணாபுரம்,
கடையநல்லூர், தென்காசி தாலுக்கா.
நெல்லைமாவட்டம் - 627759,
தொலைபேசி எண்: 04633 243029

உ

முருகக் கடவுள் துணை

தூய்ய கேரளம்

இலக்நபாவம்

திருந்துமோரிலக்கினத்தாற்கீர்த்தியுமூர்த்திமற்றும்
பொருந்துநற்பெலா பெலன்கள்புகலுறுதீர்க்கவாயுள்
வருந்துமோர்சிறிதுளாயுள் வாய்த்தலட்சணம்பெலன்க
ளிருந்ததுர்ப்பெலன் சுகங்களிவையிலக்கினத்தாற்சொல்லே.1

அவரவர் ஜனித்த ஜனன லக்கினத்தின் பலனால் புகழ், பொருள், நற்கன்மம், ஆயுள் தீர்க்கம், அற்பாயுள், அழகு, தோற்றம் ஆகியனவும் நற்பல, துர்ப்பலங்களையும் சொல்லுவாயாக.

இலகிய சுபக்கோளொன்றி லெய்திடலில்லையாகில்
னலனுற நோக்கமற்ற நட்பிலாக் கொடியதீக்கோள்
பலமுறநோக்கினாலும் பனியுமாதவனும்போலாய்க்
குலநலங்கீர்த்தியாயுள் குறைவிலாவாழ்வுங்கூறே. 2

ஜன்ம லக்கினத்தில் சுபக்கிரகங்களிருந்து பாபக்கிரகத்தால் இவ்விலக்கினமானது பார்வை பெற்றாலும் மஹாவிஷ்ணுவுக்கு ஒப்புடைய வராய் குலம் தழைத்தோங்க, ஆயுள் தீர்க்கமுடன் ஐஸ்வர்ய முள்ளவனாய் குறைவு இல்லாத வாழ்வு உண்டாம்.

கூறியவிலக்கினாதி ராசியாதிபனைக்கொண்டு
மாறியசரீரவண்ணம் வருநலந்தீமைசொல்ல
வேறிலாமதிநவாங்ச மேவுங்கோள்பிலத்தைநோக்கித்
தேறியசரீரவண்ணந் தீதொடுநலனுஞ்செப்பே. 3

ஒருவர் ஜெனித்த போது லக்கினாதிபதி இராசியாதிபதி ஆகிய கிரகத்தின் நிறத்தையும் நன்மை, திண்மையையும் கூற வேண்டும். நவாங்கிஷ சந்திரலக்கினாதிபதி இருந்த வீட்டாதிபதி எத்தகைய ஸ்திதி கதியில் இருக்கிறோரோ அதைப் பொறுத்து ஜாதகருக்கு நன்மை தின்மைகள் உண்டாகும்.

செப்பியலக்கினக்கோ டிரிகோணகேந்திரத்தி
னட்பர்தன்வீட்டிற்சார நன்மைக்கோள்கூட நோக்கத்
தப்பிலாச்சுபர்கள்ராசி தன்னிலேசேருமாகி
லொப்பிலாக்கீர்த்தியாயு ளுயர்ந்தவாழ்வுடையனாமே. 4

லக்கினாதிபதி 1,5,9 ஆகிய திரிகோண ஸ்தானத்திலோ அல்லது 1,4,7,10 ஆகிய கேந்திரஸ்தானத்திலோ இருந்து இவ்வீடு இவருக்கு பகை, நீச வீடாயிலாதிருந்து சுபக்கிரகத்துடன் பார்வை அல்லது சேர்க்கையாகில் சுபக்கிரகமாகிய வியாழன், சுக்கிரன், புதன், சந்திரன் இவர்கள் வீட்டில் இருந்தால் அளவற்ற ஆயுளையும், புகழ், அந்தஸ்து, பொன், பொருள், பூஷணாதிகளுடன் சுகமாய் வாழ்வன்.

மின்னியவிரண்டின் கோட்போய் மேவலக்நத்தின்மீது
மன்னிடைகீர்த்தியுண்டாம் வாக்குக்கோள்வாக்கிலுச்சந்
தன்னிகரில்லாக்கீர்த்தி தான்பனிரண்டாறெட்டி
லன்னவனிருக்கநோக்க வறிவில்சஞ்சலத்தனாமே. 5

இரண்டாம் அதிபதி லக்கினத்திலிருந்தால் புகழுண்டாம், இரண்டாம் அதிபதி இரண்டாமிடத்திலேயே உச்சம்பெற்றும் தனக்கு வேறொருவர் நிகரில்லாத அளவு புகழுடனும், அந்தஸ்துடனும் வாழ்வன். மாறாக 12, 6, 8 மிடத்தில் இருந்தாலும் இவர்கள் மூலம் பார்க்கப்பட்டாலும் சஞ்சலபுத்தியை உடையவனாவன். (மனக் குழப்பமுடையவனாவன்)

ஆனலக்கினத் தோனொன்பா னைந்தினிலமைய்வந்த
தானத்துக்கோளோடேனுஞ் சார்ந்திடக்குணவானாகு
மோனத்திற்றந்தைகீர்த்தி முருகனைவணங்குவோனா
மானொத்தவிழியினாளே மைந்தனால்வாழ்வுண்டாமே. 6

லக்கினாதிபதி 5, 9மிடத்திலிருந்தாலும் அல்லது 5,9ம்இடத்ததிபதி களுடன் கூடி வேறோரு ஸ்தானத்தமர்ந்தாலும் நல்ல குண முடையவனாவன். இவனது தந்தை புகழுடைய வனாகுவன், இவன் முருகன் வழிபடு கடவுளாகக் கொண்டவன், இவனது புத்திரனால் இச்சாதகற்கு நல்வாழ்வு உண்டாகும்.

வாழுமூன்றிடத்திற்கோட்போய் மருவிலக்நத்தின்மீது
மீளும்லக்கினத்தின்கோட்போய் மேவிடவன்றிநோக்கத்
தாழ்விலாதுடன்பிறந்த சகோதரங்கீர்த்திமானாய்
நாளுமிப்படிவாழ்வெய்து மென்றனர்நண்ணுங்காலே. 7

மூன்றாமிடத்ததிபதி ஆகிய கிரகம் ஜென்ம லக்கினத்திலிருக்க லக்கினாதிபதி இவருடன் கூட அல்லது பார்க்க இவருடன் சகோதர வர்க்கத்தினர் நல்ல சுகபோகமாய் புகழுடையவறாய் இனிது வாழ்வர்.

நண்ணியசனனக்கோளு நலங்கொளொன்பானிற்கோளு
மெண்ணியதலத்தேநிற்க வன்றெனின்மாறிநிற்கப்
புண்ணியமறையோன்பார்க்கப் பொருந்தியேபிறந்தசேய்க்கு
மண்ணிடைவருநாடெட்டு மரணமட்டுயர்ந்தவாழ்வே. 8

ஜென்ம லக்கினாதிபதியும், 9மிடத்ததிபதியும், அவரவரிடத்தில் இருந்தாலும் அல்லது இருவரும் பரிவர்த்தனை பெற்றாலும், (ஒருவர் வீட்டிலொருவர் மாறி இருப்பது பரிவர்த்தனை ஆகும்) இவரை வியாழன் பார்க்கவோ அல்லது கூடவோ செய்து பிறந்த குழந்தைக்கு இப்புவியில் ஜனித்த நாள் முதலாக ஆயுள் வரை நல்ல சுகபோக வாழ்வுடையவனாயிருப்பன்.

வாழ்விலக்கினத்தின்மீது வந்திடநாலின்கோளின்
றாழ்விலாநாலின்மேவிச் சார்கிலுந்தனிக்கோளோடே
வாழுமிவ்விரண்டுகோளு மிக்கதீக்கோணோக்காதே
லூழியுங்கணக்குந்தேர்ந்த வித்தையாலுயர்ச்சியாமே. 9

நான்காமிடத்ததிபன் ஜன்மலக்கினத்திலிருந்தாலும் அல்லது நான்காமிடத்திலேயே சுய கேஷத்ரம் பெற்று ஏதேனுமொரு கோளுடன் கூடிநிற்க இவர்களை சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது போன்ற தீய கிரகங்கள் பாராதிருந்தால் கல்வியில் மகா வல்லவனாகி உயர்வடைவன்.

உயர்ந்தலக்கினத்தோனின்ற வோரைக்கீராறிலுச்ச
நியம்பியநட்புக்கோளே ழிருக்கலக்கினத்தீராறி
னயங்கொளுமுச்சனேனு நட்புக்கோளேனுமண்ணிற்
றயங்கிடாதிருக்கநோக்கத் தரணியாளரசர்க்கொப்பே. 10

லக்கினாதிபதி இருந்த வீட்டிற்கு 12 மிடத்தான் உச்சம் பெற்று இருக்க, ஏழாமிடத்தில் நட்புப் பெற்ற கிரகமானது இருக்க, 12மிடத்தில் உச்சம் அல்லது நட்புப் பெற்று கிரகமானது இருக்க அல்லது இவர்களால் இத்தானமானது பார்க்கப்படுமாயின் இப்புவியில் ஜனித்த ஜாதகர் அரசனுக்கு ஒப்பாய் சகல சம்பத்துடனும் வாழ்வர்.

ஒப்பிலக்கிநத்தீராறி லோறாறுக்குடையகோளுந்
தப்பிலாவாக்குக்கோளுஞ் சார்ந்திடநீசத்தோடே
யிப்படிபெலவீனத்தை யிறையவனோக்கிப்பார்க்கி
னட்பிலாராசியந்த நல்கியவாழ்வுண்டாமே. 11

12மிடத்தில் 6மிடத்ததிபதி இருக்க இரண்டாமிடத்ததிபதியும் கூடி நீசம் பெற்றிருந்து இவர்களை வியாழன் பார்க்க நல்ல வாழ்வானது வந்து சேரும்.

உண்டாயச்சனனவீட்டுக் குடையவன்பார்த்தோன்மூன்று
விண்டோயுஞ்சரங்களாகில் வேறொருதேசஞ்சாரும்
வண்டாருங்குழலினாளே வருமூன்றுந்திரங்களாகிற்
பண்டாயுஞ்சுபமாம்வர்க்கம் பாக்கியமிகுதியாமே. 12

லக்கினாதிபதியும், இவர்இருந்த வீட்டாதிபதியும், இவரைப் பார்த்த கிரகமும் ஆகிய மூவரும் மேடம், கடகம், துலாம், மகரம் முதலிய சரராசிகளிலிருந்தால் அன்னிய தேசத்தில் வாசம் செய்வன். (வாழுவன்) இம் மூன்று கிரகமும் ஸ்திரராசிகளான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், இவற்றிலிருந்து சுபக்கிரகத்தின் பாதசாரத்திலிருந்தால் மிகுந்த பாக்கிய முடைய வானாயிருப்பன்.

ஆமெனும்லக்கினக்கோ ளதிகபாபக்கோளோடே
னாமமாறதனிற்சார ராசியுங்கொடியவீடாய்த்
தீயசேய்சனியுங்கூடிற் செய்யாதகிரிகைசெய்யு
மேன்மையிலரவுங்கூடின் மிக்கசண்ட ளனாமே. 13

லக்கினாதிபதி பாபக்கிரகங்களுடன் கூடி 6மிடத்திலிருக்க, இவ்விரு பாபக்கிரகத்தின் வீடாயிருந்து பாபக்கிரமாகிய செவ்வாய், சனி இவருடன் கூடி இருந்திருக்குமேயானரல் உன்மத்தம் (கிறுக்கு) உண்டாகும். ராகுவாயிருந்தால் அதிக சண்டாளத்துவமுடையவனாவன். (பாபகர் மங்களை உடையவன்.)

மிக்கலக்கினத்தானாறெட் டீராறின்மேவுமாகிற்
றக்கவேசரீரநோவாஞ் சார்ந்திடும்ராசிக்கோளை
யொக்கவேசனிபோய்நோக்க வுடலங்கணோவுமாகு
மைக்கருங்குழலல்லாளே வகுத்தனர்மறைவல்லோரே. 14

இலக்கினாபதி 6,8, 12 மிடத்திலிருக்க உடம்பில் நோயுண்டாகும் இந்த இலக்கினாபதி இருந்த வீட்டாதிபதியை சனிபார்க்க அங்கஹீனம் உண்டாவதோடு நோயு மேற்படும்.

வல்லிகேள்சத்துருக்கோண் மத்தியின்முதற்கோள்வாழிற்
சொல்லுவர்மரணமட்டுந் துயரஞ்சத்துருவினாலே
நல்லலக்கினத்திற்பாம்பாய் நாலிரண்டாறீராறா
மெல்லையின்முதற்கோளேகிற் றிசையங்கவீனமென்னே. 15

லக்கினாபதி 6மிடத்தின் அதிபதியுடன்கூடிட ஆயுள் பரியந்தம் எதிரியால் துன்பமுண்டாகும். லக்கினத்தில் ராகுகேதுவிருக்க லக்கினாதிபதி 6,8,12 மிடத்திலிருந்தால் அங்கஹீனமுண்டாம்.

என்னுமொன்றினிற்கோளாறா மிடத்துக்கோளுடனேகூடி
யுன்னியராகுகேது வோடொருதலத்தேநிற்கத்
தன்னுடல்சுகமில்லாமற் சஞ்சலமனத்தனாகி
மின்னனாய்வியாதியத்த னாமெனவிளம்பலாமே. 16

லக்கினாதிபதி 6மிடத் ததிபதியுடன் கூடிட. இவர்களுடன் ராகு, கேது சம்பந்தமுற்றால் உடற்சுகமின்றி, மனசஞ்சல முடையவனாகி நோயுடைய வனாயிருப்பன் என்பதாம்.

விளங்கலக்கினக்கோணின்ற ராசியாதிபனுமேலாய்த்
தளங்குகெந்திரத்திரிகோணஞ் சார்ந்திடிற்றம்மோடொப்ப
வளங்கிலக்கினத்தோன்பார்க்க வரிசைவீட்டுடையகோடான்
களங்குறப்பின்னாறெட்டிற் கரந்துறைபெலவான்காணே. 17

இலக்கினாதிபதி இருந்த வீட்டின் அதிபதி 1,4,7,10,5,9 ஆகிய கேந்திர திரிகோணத்திலிருந்து இவரை இலக்கினாதிபதி பார்க்க இவ்வீட்டின் அதிபதி 6,8மிடத்திலிருக்க நல்ல பலமுள்ளவனாவன்.

காணும்லக்கினக்கோள்பாபக் காரிகளுடனேகூடி
லாறுமெட்டொன்றினிற்கி னலமிலைசரீரமென்க
வீணுறுசெவ்வாயோடே மேவுபன்னிரண்டாறெட்டிற்
கோணமாறேனுஞ்சார்கிற் கொடியரோகத்தன்கோதாய். 18

இலக்கினாதிபதி பாபக்கிரகமாகிய செவ்வாய், சனி, ராகு, கேது, சூரியன் போன்றோருடன் கூடி 6,8,1ல் நிற்க உடலில் நோயுண்டாம், இலக்கினாதிபதி செவ்வாயுடன் கூடி 12,6,8,1,5,9ல் இருக்கக் கொடிய நோயுடைய வனாயிருப்பன்.

கோதிலக்கோட்டிறேறக் குழவிக்குப்பருத்தகோச
மோதியராகுசேயேல் ரோகமுண்டாகுமென்பார்
நீதியிற்சனிசேயொன்றி னின்றிடிலண்டவாதந்
தீதுறுபாபர்முன்னோன் சோந்திடக்கோபஞ்சேய்க்கே. 19

சுபக்கிரகங்கள் 12மிடத்திலிருக்க. பருத்த கோசமுடையவன் ஆவன். (ஆண்குறி) ராகுவும், செவ்வாயுமிருந்தால் நோயுண்டாகும். செவ்வாய், சனி கூடி நின்றிருந்தால் அண்டவாதம் ஏற்படும். செவ்வாய், சனி இவருடன்

பிற பாபக்கிரகங்கள் கூடி 12மிடத்திலிருந்தால் மிகுந்த கோபம் உடையவனாவன்.

சேயிலக்கினக்கோண்மாந்தி செய்யபன்னிரண்டிற்சாரிற்
காயந்துர்ப்பலந்தான்வேசைக் கலவியாலழிந்தகாம
னாயகன்பாபரோடே நண்ணிடிற்காந்தியில்லான்
றூயகோள்பெலமாய்ப்பின்னே தோன்றிடக்காந்திசொல்லே. 20

இலக்கினாதிபதி மாந்தி இவர்கள் கூடிப் பன்னிரண்டாம் இடத்திலிருந்தால் சரீரத்தில் பலமில்லாவனாய் இருப்பான். பரஸ்திரீ சேர்க்கையுடையவனாய், அதிகாமாந்தகனாகவும், இருப்பான். இலக்கினாதிபதி பாபக்கிரகங்களுடன் கூடி இருந்தால் அழகு இல்லாதவன். பிறசுபக் கிரகங்கள் இவர்களைப் பார்த்தாலோ அல்லது சேர்ந்து பலமுடனிருந்தாலோ அழகுடைய வனாயிருப்பான்.

சொல்லியவாறிற்கோளுந் தூயலக்கினத்திற்கோளு
மெல்லவேயாறினின்றான் மேனியில்வெள்ளையுண்டா
நல்லலக்கினக்கோளோடே ராகுவுங்கூடிநின்றாற்
பில்லிவஞ்சனையும்பாம்பாற் பிழைகளும்பேசலாமே. 21

6மிடத்ததிபதியும் இலக்கினாதிபதியும் கூடி 6மிடத்திலே இருக்க வெண் குட்டம் உண்டாகும், அல்லது உடம்பில் வெள்ளை விழும், இவ்விலக் கினாதிபதியுடன் ராகுகூடி 6மிடத்திலிருந்தால் பில்லி, சூனியம், ஏவல், பாம்பு, இவைகளால் இச்சாதகனுக்கு குற்ற மேற்படும்.

பேசுங்காலக்கினத்திற் பெருகியசுபக்கோணிற்கின்
மாசிலாநற்கோணோக்க மன்னவன்சுகவானென்ன
வீசியதீக்கோணிற்க மிக்கதீக்கோளுநோக்கிற்
றூசிலாமரணமட்டுந் துக்கவானென்றுசொல்லே. 22

இலக்கினத்திற் சுபக்கிரகமிருக்க, இவரைச் சுபக் கிரகமானது பார்க்க அரசனுக்கு சமானமானவனாய் சுக ஜீவியாய் வாழ்வன். பாபக்கிரகமானது இலக்கினத்திலிருக்க இவரைப் பாபர்கள் பார்க்க ஆயுள் பரியந்தம் துக்க முடையவ்னாவன்.

சொல்லியவெள்ளிதேவாந் தூயகேந்திரகோணக்கோ
ணல்லலக்கினக்கோணிற்கி னல்லவர்சுபமேயெய்த
வெல்லையிற்சிறிதுநற்கோ ளிலக்கினந்தன்னைநோக்க
வல்லியேமத்தியந்த வயதிலேவாழ்வுண்டாமே. 23

ஜென்ம லக்கினத்தால் சுக்கிரன், வியாழன், கேந்திர திரி கோணாதிபதிகள், இலக்கினாதிபதி இவர்களிருந்து சுபக்கிரகத்தால் பார்க்கப்படுமானால் நடுவயதில் பாக்கியமுண்டாம்.

வாழும்லக்கினத்தினற்கோண் மருவிடவாக்குகேந்திரத்
தாழ்வுறுபாபர்நிற்கச் சாதகலக்கினக்கோண்
மீளுநல்லுத்தமாங்ச மேவினான்மின்னேகேளாய்
நாளிலேவியாதிதுக்க நன்மையந்தியந்தானண்ணே. 24

ஒருவருடைய ஜன்ம லக்கினத்தில் சுபக்கிரகமிருக்க, 2,1,4,7,10 இத்தானங்களில் ஏதேனும் மொன்றில் பாபக்கிரகமானது இருக்க லக்கினாதிபதி சுபக்கிரகங்களின் அங்கிஷத்திலிருக்க (இலக்கினாபதி இருந்த நவாம்ஷாதிபதியே அங்கிஷத்தோனாகும்) வியாதி, துக்கம் முதலியன இருந்தாலும் கடைசிக் காலத்தில் நன்மையுண்டாகும்.

நண்ணியவிலக்கினக்கோ ணல்லோர்கள்ராசியேறப்
புண்ணியர்நோக்கவின்றேற் பொருகோபுராங்சமேறித்
திண்ணியமுதற்கோணிற்கச் சிறந்தசாதகர்க்குநன்மை
மண்ணினிற்பதினாறுக்கு மேலெனவகுக்கலாமே. 25

லக்கினாபதி சுபக்கிரகங்களின் வீட்டிலிருக்க, சுபர்பார்க்க கோபுராங்கிஷ (தசவர்க்க முறைப்படி கணக்கிடுவது) மேறிஇருந்தால் இச் சாதகர்க்கு மிகுந்த நன்மை தனது 16 வயதுக்கு மேல் உண்டாகும்.

வகுத்தலக்கினத்தைவெய்யோன் மற்றக்கோள்சிறிதுநோக்கில்
மிகுத்தசெல்வத்தன்றந்தை வீட்டினிற்செல்வஞ்சேரு
முகித்தயாபாரமற்று முடிமன்னர்சேவையுண்டாந்
தொகுத்தநற்கீர்த்திவாழ்வு மாயுளுமுண்டுசொல்லே. 26

ஒருவருடைய ஜென்ம லக்கினத்தைச் சூரியனும், மற்றக் கிரகங்களும் தனது உபபார்வையால் பார்க்க மிகுந்த செல்வமுடையவனும் இவன் தந்தை வீட்டிற்செல்வம் சேரும். வியாபாரம், மன்னர்களுடன் உறவு, சேவை (பணிபுரிதல்) புகழ், சுகவாழ்வு, ஆயுள்தீர்க்க முதலியன உடைய வனாயிருப்பன் என்பதாம்.

சொல்லியசனிதானோக்கிற் றோகைமுத்தாளைச்சேர்வ
னல்லலக்கினக்கோனோக்கில் ராஜாக்கள்பிரியனாவன்
மெல்லியசுபக்கோனோக்கில் வெகுசுகவானாமென்க
வெல்லையிற்பாபர்நோக்கி லேதுமில்லாதானென்னே. 27

ஜெனனலக்கினத்தைச் சனிபார்த்தால் தன்னைவிட வயதால் மூத்தவளைச் சேருவான் (அடைவான்). இலக்கினாதிபதி பார்த்தால் ராஜாக்களுக்குப் பிரியமுடையவனாயிருப்பான். சுபக்கிரகத்தால் பார்க்கப்படுமேயானால் மிகுந்த சுகபோகம் உடையவனாவன். பாபக்கிரகமானது பார்த்தால் பொன், பொருள், சுக, போகம் இல்லாதவனாயிருப்பான்.

என்னுமிக்கோட்கமெல்லா மிலக்கினந்தன்னைநோக்க
மன்னனாற்றனவானாவன் வலியதீக்கோட்கணோக்க
நன்னயமில்லான்றுக்கி நன்மைக்கோண்மூன்றுஞ்சாரி
லன்னவன்சுசீவியாக வாழ்குவனெனவிளம்பே. 28

முன் கூறப்பட்ட சூரியன், சனி, லக்கினாதிபதி இவர்கள் ஜன்மலக்கினத்தைப் பார்க்க இவன் அரசனுக் கொப்பமாய் தனவந்தனாவன். பாபக்கிரகமானது பார்க்க நலமில்லாதவனும், துக்கமுடையவனுமாவான். சுபக்கிரகமானது பார்க்க. (வியாழன், சுக்கிரன், சந்திரன்) அல்லது நிற்க சுக போகமாய் சம்பத்துடன் வாழுவன்.

விளங்கியகெந்திரத்தின் மிக்கலக்கினக்கோண்மேவக்
களங்குறுகோணோக்காமற் காரணச்சுபக்கோணோக்கில்
வளங்கியவருடமெல்லா மாய்ந்து போய்ச்சுகவானாகி
யிளங்கிளியனையாய் ராசலட்சுமிகாந்தனாமே. 29

ஜன்மலக்கினத்தின் அதிபதி 1,4,7,10 ஆகிய கேந்திரத்திலிருக்க, பாபக்கிரகமானது இவரைப் பாராதிருந்து சுபக்கிரகமானது இவரைப்பார்க்க லட்சுமிகடாட்சம் உள்ளவனாய் ஆயுள்வரை சுக, போகமாய் வாழுவன் என்பதாம்.

இலக்கினபாவம் – முற்றிற்று

இரண்டாம் பாவம்

சுகம்பெறுமிரண்டைநோக்கிச் சொல்வதுகுடும்பம்பொன்னை
முகங்களைக்கண்ணைவாக்கை மொழிந்திடும்வித்தைதன்னை
மகிழ்ந்திடும்சனத்தோடே வகையெலாமாய்ந்துவாட்கை
ணுகந்திடுங்கோதாயாரு முணர்ந்திடவுரைக்கலாமே.

துய்ய கேரளம்

ஜென்ன ஜாதகத்தில் சுகத்தைத் தரக்கூடிய இரண்டாமிடத்தைக் கொண்டு குடும்பம், பொன், முகம், கண், வாக்கு, வித்தை, சனம், வாழ்க்கை, இவைகளாகிய பலன்களை எடுத்துச் சொல்லலாம்.

உரைத்திடவொன்றுவாக்குக் குடையகோள்பதினொன்றுங்கோ
டிருத்தியமூவர்கூடிற் றிரவியவானாமென்க
வருத்துபன்னொன்றுவாக்கு வலியலக்கினத்தில்வாழப்
பொருத்தமாய்ராசியுச்சம் பொன்னுளன்புகன்றிடாயே. 2

இலக்கினாதிபதி வாக்காதிபதி, லாபாதிபதி ஆகிய மூவரும் கூடி 11மிடம், 2மிடம், ஜென்மலக்கினம் இவற்றில் ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் பொன், பொருள், பூஷணங்களையுடையவனும் தனவந்தனாயிருப்பன்.

திட்டமாம்வாக்கைப்பார்த்தோன் கேடிலாவிரண்டிற்கோளுந்
திட்டமாயத்தமைக்கிற் றிரவியந்திசையிற்சேத
நட்டமாங்கோசரத்தி னடக்குந்துட்டரினாலாகு
மட்டவிழ்குழலினாளே வருபலன்வகுத்தவாறே. 3

இரண்டாமிடத்தைப் பார்த்த கிரகமும், இரண்டாமிடத்தின் அதிபதியும் அஸ்தமனமடைந்தால் அக்கிரகங்களுக்கு உரிய திசையில் பொருட்சேதமுண்டாகும், மட்டுமல்லாமல் துர்ஸ்தானங்களில் மேற் சென்ன அஸ்தமனமடைந்து உள்ள கிரகம் கோசாரத்தில் வரும்போது திருடர்களாலும் துஷ்டர்களாலும் பொருட் சேதமுண்டாகும்.

வாறுகேள்சிறுதீக்கோட்கள் வாக்கினின்மருவவாக்கோன்
மீறியபெலமாயாட்சி யுச்சங்கண்மேவிநிற்கும்
பேறுடன்மரணமட்டும் பிசகாதுபாக்கியங்கள்
வேறுதீங்கில்லையென்றார் காலத்தைவென்றமேலோர். 4

ஜன்மலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்கள் இருக்க இத்தானமானதின் அதிபதிகள் ஆட்சி அல்லது உச்சம் பெற்றிருந்தால் ஆயுள் பரியந்தம் ஒருதீங்கும் இல்லாது சகல சுக போக பாக்கியங்களும் உடையவனாய் செல்வந்தானாயிருப்பன் என காலக்கணக்கினை அறிந்துள்ள ஞானிகள் சொல்லி உள்ளனர்.

வென்றிடுமூன்றிற்கோளு மேன்படுமிரண்டிற்கோளு
மொன்றினிற்சேருமாகி லுடற்பிறந்தாராற்பொன்னா
நன்றிசேர்நாலிற்கோளு நயம்பெறுமிரண்டிற்கோளு
நின்றிடலக்கினத்தி னிச்சயந்தாயானேரும். 5

மூன்றாமிடத்ததிபனும், இரண்டாமிடத்ததிபனும் ஒரு வீட்டில் கூடி இருந்தால் சகோதர வர்க்கத்தால் பொன் பொருள் உண்டாம். நாலாமிடத்ததிபனும், இரண்டாமிடத்ததிபனும் கூடி ஜன்மலக்கினத்திலிருந்தால் தாயினால் செல்வமுண்டாகும்.

நேர்பெறுமேழிற்கோளுநிலை பெறுமிரண்டிற்கோளுஞ்
சீர்பெறவேறிழிற்சேரிற் றிரவியமனைவியாலாங்
கோரியவைந்தொன்பானிற் கோட்களுஞ்சுபராய்க்கூடிச்
சாரிலக்கினத்தின்மைந்தன் றந்தையால்வாழ்வுசாற்றே. 6

ஏழாமிடத்ததிபதிபனும், இரண்டாமிடத்ததிபனும் கூடி ஏழிலிருந்தால் மனைவியின் வழியில் செல்வம் உண்டாம். 5,9 ம் இடத்ததிபர்களும் சுபக்கிரகமும் கூடி ஜனன லக்கினத்திலிருந்தால் பிதாவினால் (தந்தையால்) நல்வாழ்வும் செல்வமும் உண்டாம்.

சாற்றியவாக்குக்கோடான் றனித்துலக்கினத்தினிற்க
வாற்றியவிலக்கினக்கோ னலவனவனுஞ்சேரிற்
றோற்றியபாவமெல்லாஞ் சூரியன்பனியும் போலா
நாற்றிசைகீர்த்திமானாய் நற்பொருளாளனாமே. 7

வாக்காதிபதி லக்கினத்தில் இருக்க, இலக்கினாதிபதி சூரியன் உடன் கூடினால் சூரியனைக் கண்ட பனி போல் சகல கிரக பாவ தோஷமும் நீங்கி எத்திசையும் புகழ் உடையவனாய் செல்வந்தனாயிருப்பன் என்பதாம்.

ஆனலக்கினத்திற்கோளு மன்புடையிரண்டிற்கோளுந்
தானமூன்றினிற்போய்நிற்கிற் சகோதரத்தாற்பொன்னாச
மேனநாலைந்தேழொன்பா னிவைகளிற்சாருமாகி
னூனம்போமன்னைமைந்த ரொடும்பெண்டாறனத்தனாமே. 8

லக்கினாதிபதியும் இரண்டாமதிபதியும் கூடி மூன்றாமிடத்தில் இருக்க உடபிறந்த சகோதரவர்க்கத்தினரால் பொருட்சேதமுண்டாம். 4,5,7,9 இவற்றில் இவர்கள் கூடி இருந்தால் மனவி, மக்கள், தாய், தந்தையருடன். சுகபோகமாய் தனவானாயிருப்பன்.

பெண்டிருஞ்சுகமுமுண்டாம் பிரியமாய்வாக்கினிற்கோ
ளுண்டானபன்னிரண்டுக் குடையவன்வாக்கினிற்கக்
கொண்டாடும்பதினொன்றிற் கோள்குறுகவாறெட்டிலேனும்
விண்டோர்களீராறேனு மெய்ப்பொருணாசமாமே. 9

வாக்காதிபதி 12மிடத்திலிருக்க இவ்வதிபதி வாக்கில் இருக்கவும், 11மிடத்ததிபதி 6,8,மிடத்திலிருக்க அல்லது 12மிடத்திலிருக்க தனது பொன் பொருளை இழந்து போவான்.

மெய்ப்பொருளுடையோனான வியாழம்பன்னிரண்டின்மேவப்
பெட்புறுவாக்குக்கோடான் பெலவீனமாகிப்போக
நட்புறசுபக்கோள்சென்ம ராசியைநோக்காதாகிற்
கைப்பொருணாசமான தியம்பினர்கலைவல்லோரே. 10

தனகாரகனாகிய வியாழபகவான் 12மிடத்திலிருக்க, 2ம் இடத்ததிபதி பகை, நீச, மறைவிடத்தில் பலமற்று இருக்கவும், சுபக் கிரகங்களாகிய சுக்கிரன், வியாழன், புதன், சந்திரன் இவர்களால் ஜன்மலக்கினமானது பார்க்கப்படாதிருக்குமே யானால் இப்புவியில் பிறந்த ஜாதகனுக்கு தனது பொருள் இழந்து போகும்.

கலைதெரிந்துரைக்கும்வாக்கிற் கருதிலக்கினத்தோனிற்க
நிலைதருவாக்குக்கோட்போய் நிற்பதுபதினொன்றாகி
னலனுறுமிலக்கினத்தை லாபத்தானத்தோனண்ணிற்
குலவியநிதிநிட்சேபங் குபேரனைப்போலுண்டாமே. 11

ஜன்ம லக்கினத்தில் லாபாதிபதி இருக்க இரண்டாமிடத்தில் இலக்கினாபதி இருக்க இவ்வதிபதி 11மிடத்திலிருக்கப்பிறந்த ஜாதகன் பொருள் பொன், திரவியம் உடையவனாய் குபேரனைப் போல் வாழ்வன்.

குபேரனாமிரண்டொன்பானுங் குறித்தலக்கினத்தின்கோளு
முபாயமாய்வைசேசியாங்ச மல்லதுமுச்சவங்சம்
விபேகமாயிவர்கணிற்கின் மெய்ப்பொருள்கோடிதேடித்
தபோதனர்க்கெல்லாமன்ன தானங்களளிக்குந்தானே. 12

2,9,1 இவ்வதிபர்கள் வைசேடிகாம்ஷம், உச்சாம்சம் இவற்றிருலிருந்து வலுவடைந்திருந்தால் கோடிப் பொன் சம்பாதிப்பவனாயும் தவசிகளுக்கு அன்னதானம் செய்பவனாயும், தான, தர்மங்கள் உடையவனாயும் இருப்பான்.

அளிபெறுமிரண்டோ னீசமத்தமனங்களாக
வெளியிலாப்பாவ சட்டியங்கிசமேறுமாகிற்
களிவுறுபரத்தையாலே கைப்பொருளெல்லாந்தோற்கு
முழுவதுங்கடனுக்குள்ளாய் முடிபடுமொழியுங்காலே. 13

இரண்டாமிடத்ததிபன் நீசம், அஸ்தமனமடைந்து பாபக்கிரகத்தின் வீட்டில் சஷ்டியாங்கிஷமேறுமாகில் (தசவர்க்ககணித முறையில் ஒன்றாகும்) வேசிகளின் சேர்க்கையால் தனது பொருள் முழுவதும் இழந்து கடனுக்கு ஆளாகுவான்.

காலத்தில்வெள்ளிதிங்கள் கடியவாக்குடையோன்மூன்றின்
மேலுற்றெங்கேனுநிற்கில் விழிதெரியாதுராவின்
ஞாலத்தின்மழைக்கோணோக்கி னாதிபனருகதாக
நீலக்கண்சிறிதாய்நோக்கு நிலையொளிநெறிநில்லாதே. 14

சுக்கிரன், சந்திரன், வாக்காதிபதி கூடி எவ்வீட்டில் இருந்தாலும் கண் குருடாவர், (இரவில்) இவர்களைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் அரைக்கண் பார்வை உடையவனாயிருப்பான்.

நில்லாதபாபராசியங்ச நீசக்கோளேறப்
பொல்லாதவியமாறெட்டும் பொருந்தவீராறும்போக
நல்லோர்களுடையநேம ராசியைநோக்கினாலும்
வில்லாருநுதலினாளே விழியிவர்க்கிரண்டும்போமே. 15

நேத்திரஸ்தானாதிபதி பாபக்கிரகத்தின் வீட்டிலிருந்தாலும் நவாம்ச ராசியில் நீசம் பெறும் வீட்டின் அங்கிஷத்தைப் பெற்றாலும், 6,8,12 மிடத்திலிருந்தாலும் 2மிடத்தை சுபக்கிரகத்தால் பார்க்கப்படுமேயானாலும் இவர்களுடைய இரண்டு கண்ணும் தெரியாமற் போகும் என்பதாம்.

போமெனும்பிருகைந்தாறின் புண்ணியர்மூவர்கூட
மேன்மைலக்கினத்திற்சேர வேந்தனால்விழிபோமென்க
பூமனும்வாக்குக்கோளும் பொருந்துலக்கினத்திற்போகக்
காமனைவென்றகண்ணாய் காதினோயுண்டுகாணே. 16

சுக்கிரன், 5,6, மிடத்ததிபதிகள் கூடி ஜன்மலக்கினத்தில் இருந்தால் அரசதண்டனையால் கண் பறிபோகும். செவ்வாயும், வாக்காதிபதியும் கூடி லக்கினத்தில் இருந்தால் செவியில் நோயுண்டாகும்.

காணுஞ்சேய்குளிகன்வாக்கோன் காரியிந்நான்குகோளு
நீணுறவாக்கினிற்க னேத்திரரோகவானாஞ்
சேணுறுதீக்கோளாகிச் சிறிதுகோள்சேர்கின்றாலு
நாணுறநோக்கினாலு நயனரோகத்தனாமே. 17

செவ்வாய், குளிகன், இரண்டாமிடத்ததிபதி, சனி இவர்கள் நால்வரும் கூடி வாக்கில் இருந்தால் கண் வியாதியுண்டாம். இவ்விரண்டாமிடத்தில்

பாபக் கிரகங்களிருந்தாலும், பார்த்தாலும் கண் வியாதி யுண்டாகும்.

நாமமாயிரண்டிற்கோட்போய் நல்கிடச்சேரநற்கோண்
மேன்மையங்கிசங்களேற மிக்ககோணோக்கமேவக்
காமனாயழகின்மிக்கக் கண்ணனாய்க்கண்க்ணோக்கித்
தாமரைத்திருவேகேளாய் தரணியில்வாழ்வன்றானே. 18

இரண்டாமிடத்ததிபதி சுபருடன் கூடினாலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும், இவர்களது அங்கிஷ மேறினாலும் அதிகாமந்தகனும், அழகுடையவனும், நல்ல கண்களை உடையவனுமாய் வாழ்வன்.

தானமாமிரண்டினற்கோள் சார்நலமுகத்தைச்சார்ந்து
வானமென்னிரண்டுநற்கோ ளிருந்திடச்சுவர்க்கமேறிற்
போனகவாக்குநாதன் புண்ணியரிடத்திற்போகின்
மேனகுவாக்குச்சித்தி வித்தையுமிகவுண்டாமே. 19

இரண்டாமிடத்தில் சுபக்கிரகங்களிருந்தால் நல்ல அழகுடைய முகமுடையவனாயிருப்பான். இரண்டு நற்கிரகங்களாக இருந்து சுபக்கிரக்ங்களின் சாரத்தில் இருந்தாலும், இரண்டாம் இடத்ததிபதி சுபக்கிரகங்களுடன் கூடி நின்றாலும் வாக்குச் சித்தி, கல்விவிருத்தி இவை அதிகமாய் உண்டாகி மேன்மையடைவான்.

வித்தைசேரிடத்திற்செவ்வாய் வெய்யவனோக்கிப்பார்க்கிற்
கைத்தலஞ்சுடுவானெய்யிற் கடியராசிஉச்சராகச்
சுத்தியதீக்கோணோக்கத் தோன்றியகுழவிதப்பா
தித்திசையபகாரத்தி விடுவனெய்யிற்கையென்னே. 20

இரண்டாமிடத்தில் செவ்வாய், சூரியன் கூடிப் பார்த்தால் நெய்யிற்கையைவிட்டு (சுடுநெய்) வெந்துபுண்ணாகும். இவ்விடத்தை பாபக்கிரகமானது நோக்குமேயானால் இவர்களுடைய திசா புத்தியில் மேற் சொன்னதுபோல் சுடுகின்ற நெய்யில் கையை இடுவன் என்பதாகும்.

என்னுமாறெட்டேழ்ராசி யிவற்றினில்வெய்யோனிற்கத்
துன்னவனல்லாற்செவ்வா யாகிலுமங்கேநிற்கச்
சொன்னதிற்சிறிதுநோக்கத் தோன்றுவன்வசூரியாலும்
பின்னுநோய்த்தீயினாலும் பிழைவரும்பேசுங்காலே. 21

ஜென்மலக்கினத்திற்கு 6,8,7வது இராசியில் சூரியன் நின்றாலும் அல்லது செவ்வாய் நின்றாலும், பார்த்தாலும் வசூரிநோய், அக்கினி இவற்றால் துன்பம் உண்டாகும்.

பேசியவாக்கிற்றீக்கோ ணின்றிடப்பிச்சர்வாக்கை
மாசறுதீக்கோணோக்கின் மைந்தர்க்குப்பருத்தபல்லாந்
தூசொடுதுன்முகங்க டோறும்வாக்குடையோனோடே
காசுறுகுளிகன்கூடிற் கபடரைமுகத்திற்காணே. 22

இலக்கினத்துக்கு 2மிடத்தில் பாபக்கிரகங்கள் இருக்க, இத்தான மானது பாபக்கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் பிறந்த ஜாதகனுக்கு பெரிய பற்களை உண்டாயிருப்பான். வாக்கு நாதனுடன் குளிகன் கூடிநின்றால் கபடமான முகத்தை யுடையவனாவன்.

காண்பவரிரண்டிற்கோட்போய்க் கனிந்துகெந்திரங்களேறி
லாண்புகழ்கின்றவாக்கு மழகியமுகமுமான
னூண்பெறுவாக்குநாத னுச்சாட்சிவர்க்கமோடிச்
சேண்பெறநின்றகண்ணுஞ் செழுமதிமுகமாய்ச்செப்பே. 23

இரணடாமிடத்தின் கிரகமானது 1,4,7,10 ஆகியகேந்திரஸ் தானங்களிலிருந்தால் வாக்குச்சித்தியும், அழகுடைய முக வசியமும் உள்ளவனாவன், இவ்வாக்காதிபதி ஆட்சி, உட்சம் பெற்ற கிரகத்தின் வர்க்கமேறினால் (சாரம்) அழகிய கண்ணும், முகமும் உடையவனாவன்.

செப்பியராகுவோடே சிறந்தவாக்குடையோன்சேர்ந்து
தப்பிலாதீராறெட்டிற் றான்மாறிச்சார்ந்தாலு
மொப்பிலாவிராகுநின்ற வோரைகளேழுகோளுங்
கொட்புடனிருக்கினோக்கிற் குதலைசேர்நாவதாமே. 24

இராகுவோடு 2ம் அதிபன் சேர்ந்து 8,12ல் இருந்தாலும், ராகு இருந்த ஓராதிபனுடன் சேர்ந்தாலும் இவரது திசாபுத்திக் காலம் ஜாதகனுக்கு நோய் உண்டாகும்.

நாவினிற்கொடியதான ராகுமூன்றிரண்டுகோளு
மூவருங்கூடிநின்றான் முடமயிருண்டாமென்கத்
தாவியவாக்கில்வெய்யோன் சனியனின்றிடத்தரித்ரன்
மேவியசனிசேய்நிற்கில் வெகுரோகவானாமின்னே. 25

ராகு, 2, 3, மிடத்தின் அதிபதிகள் ஆகிய மூவரும்கூடி நின்றால் தொண்டையில் முடமயிர் உண்டாகும். இரண்டாமிடத்தில் சூரியன், சனி இருக்க தரித்திரமாகும். சனி, செவ்வாய் இவர்கள் இருந்தால் அநேக நோய் உடையவனாவன்.

மின்னியவாக்குநாதன் வியாழத்தினுடனேகூடி
முன்னிலாறெட்டீராறின் மொய்யமூக்கறையனாவன்
மன்னியவாக்கில்ரெண்டு வலியாட்சியுச்சமாகி
லன்னமேதேசத்துக்கோ ராலயவானாவானே. 26

இரண்டாமிடத்ததிபதி வியாழனுடன் கூடி 6,8,12ல் இருந்தால் மூக்கு பழுதுபட்டுப் போகும், வாக்காதிபதின் ஆட்சி உச்சம் பெற்று இருந்தால் இப்பரந்த தேசத்தில் ஜெனித்த ஒருவன் ஆலயம் போன்று விளங்குவான்.

ஆனதோர்புதன்வியாழ மடுத்தவாக்குடையோன்மூவர்
தானமாறெட்டீராறிற் சார்ந்திடவித்தைசாரான்
மேனகுமூன்றுகோளு மிக்ககேந்திரத்ரிகோணம்
போனதால்வாக்கில்வித்தைப் பொருந்துவன்பூவையன்னாய். 27

புதன், வியாழன், இரண்டாமதிபதி இவர்கள் 6, 8, 12 ல் இருந்தால் கல்வியிராது. மாறாக 1,4,7,10,5,9 ஆகிய இவ்விடங்களிலிருந்தால் கல்வி, கேள்விகளில் சிறப்பு உடையவனாயும் வாக்கு சித்தி உடையவனாயுமிருப்பான்.

பூவையேபுதன்போய்வாக்கிற் பொருந்திடப்பெலவீனத்தாற்
றாவியமல்லுகட்டு சண்டையாற்சாவுண்டாகுந்
தேவர்கள்குருவும்வாக்குச் செல்வனும்பெலன்சேராரோன்
மேவியபவுனரோகி யாமெனவிளம்பலாமே. 28

இரண்டாமிடத்தில் புதன் இருந்து வலுவடையாதிருக்குமேயானால் மல்யுத்தத்தாலும், சண்டையினாலும் இறந்து போவான். வியாழனும், வாக்குநாதனும், ஆறாமாதியும் கூடினால் மூலவியாதி உண்டாகுமாம்.

விளம்புமான்மறையோ னஞ்சமேறமேலுச்சராசி
வளங்கெழுகபக்கோணோக்க வல்லதுபராவதாங்ச
முளங்கெழுமாலுத்தானங் கூட்டத்தாயாதியாவன்
களங்கில்சொல்வழக்குந்தீர்க்குங் கண்ணனாங்கருதுங்காலே. 29

கருதியவாக்கின்மாலுங் கனகன்கெந்திரத்திரிகோணம்
பிருகதியுச்சமாகப் பிறந்தவன்வித்துவானாய்ப்
பருதியவாறுசாத்ரம் பாடவும்படிக்கவானோன்
பொருளுடைக்கெணிதமென்னும் புலவனாய்மேவுவானே. 30

இரண்டாமிடத்தில் புதன் இருக்க, வியாழன் கேந்திர திரிகோணத்தில் அமர சுக்கிரன் உச்சம்பெறப்பிறந்த ஜாதகன் வித்துவானாகவும், ஆறு

சாஸ்த்திரங்களையும் பாடப்படிக்க வல்லவனாயும், கணக்கில் கை தேர்ந்தவனாயும், புலவனாயும் இருப்பான்.

மேவியபுதனால்நோக்க மேதைகெந்திரத்திலாகப்
பாவியர்நோக்காதாகிற் பலகலைபடிக்கவல்லான்
றாவியபிருகுபொன்னன் றக்கநாவிடத்தைச்சார
வோவியமனையமாதே யுலகிலொப்பில்லனாமே. 31

புதன் நாலாமிடத்தைப்பார்க்கவும் இவர் இருக்கும் வீடு கேந்திர ஸ்தானமுமாக இருந்து பாபக்கிரகத்தில் பார்க்கப்படாதிருந்தால் பலகலைகளையும் படிக்க வல்லவனாய் இருப்பான், சுக்கிரன், வியாழன் இவர்கள் 4மிடத்தில் இருந்தால் ஒப்பில்லாத நல்ல கல்வி யுடையவனாய் இருப்பான்.

ஒப்பிலாக்கதிர்சேய்வாக்குக் குடையகோளிவர்கடன்னைச்
செப்பமாய்மறையோன்வெள்ளி தீங்கறநோக்கச்செல்வர்
தப்பிலபாராவதாங்சஞ் சார்ந்திடத்தக்கசாத்ர
மெய்ப்பினாற்படிக்கவல்ல வித்துவானாவன்மின்னே 32

சூரியன், செவ்வாய், வாக்காதிபன் இவர்கள் வியாழன், சுக்கிரன் பார்க்க பருவதாங்கிஷம் (தசவுர்க்க கணிதத்திலொன்று) பெற்றிருந்தால் தர்க்க சாஸ்த்திரத்தால் மிகவும் தேர்ச்சி உடையவனாயிருப்பான். (வக்கீல் தொழில்)

மின்னுநான்மறையோன் வாக்கோன்வெகுபெலமாகமேவச்
சொன்னகோடன்னை வெள்ளிசூரியன்றுடர்ந்துநோக்கப்
பன்னியதர்க்கசாத்திரம் படிக்கவும்பாடவல்ல
வின்னவன்புகழுக்கொப்பா யிசையவேறில்லையென்னே. 33

வியாழன், இரண்டாமாதிபதி வலுப்பெற்றிருந்து இவர்களைச் சுக்கிரன், சூரியன் பார்க்கத் தர்க்கசாஸ்த்திரத்தினைப் படிக்கவும், பாடவும் வல்லவனாய் புகழுடன் தனக்கு வேறொருவர் ஒப்பிலாத அளவுக்கு சிறப்புடன் வாழ்வன்.

இசைந்தகெந்திரத்திரிகோண மிவைகளின்மழைக்கேளேக
வசைந்தமால்பிருகைநோக்க வன்னவனிவனை நோக்கத்
துசங்கொளுஞ்சநியும் பாராவங்கிசந்தோன்றுமாகி
னிசம்பெறவேதாந்தத்தி னிலையெலாந்தெளிவனேரே. 34

சுக்கிரன் 1, 4, 7, 10, 5, 9 இவற்றில் ஏதேனுமொன்றில் இருக்க, புதன் பார்க்க (சப்தமபார்வையால்) சனி பருவதாங்கிஷம் ஏறி இருந்தால் வேதாந்தத்தில் வல்லவனாய்த் திகழ்வான்.

நேர்பெறுமேழிற்கோளு நிலையிலாவெள்ளியோடே
சீர்பெறுவாக்குநாதன் செப்பியமுக்கோடன்னைச்
சார்விலாப்பாவர்நோக்கச் சார்ந்திடவலதேற்றானே
யோர்பனிரண்டாறெட்டி லுயர்மனையாள்சாவுண்டே. 35

ஏழாமாதியும், சுக்கிரனும், வாக்காதிபனும் ஆகிய இவர்களைப் பாபக் கிரகங்கள் பார்த்தாலும் கூடினாலும் அல்லது 6,8,12ல் அமர்ந்தாலும் மனைவி இறந்து போவாள்.

உண்டுசொல்வாக்குக்கோளு முண்மையாமேழிற்கோளுந்
தண்டியேயதிபிலன்கள் சார்ந்திடவலதேற்றானே
கொண்டதீயுச்சமாகக் குலாவியேநிற்குமாகிற்
கண்டசாதகனுக்கேக களத்திரமென்னலாமே. 36

2மிடத்ததிபதியும், 7மாதியும், ஆட்சி, உச்சம் பெற்று வலுவடைந்தால் இப்பூவிற் பிறந்த ஜாதகனுக்கு ஒரு மனைவியே உண்டாகும்.

களங்குறுமதியும்வாக்குக் கதிபலுனும்பிருகுதானும்
விளங்குகெந்திரங்களேறில் வெள்ளிபாத்திரத்திற்றின்பன்
முழங்கியவாக்கோன்வேதன் முழுமதிபிருகுநான்கும்
வழங்கியெங்கேனுங்கூடின் மைந்தன்வெண்கலத்துண்பானே. 37

சந்திரனும், இரண்டாமதிபதியும், சுக்கிரனும், கேந்திரதிரிகோணம் பெற்றிருந்தால் வெள்ளிப்பாத்திரத்தில் உணவு அருந்துவன். 2மாதி, வியாழன், சந்திரன், சுக்கிரன் ஆகிய இந்நால்வரும் ஒருவருடைய ஜாதகத்தால் அவ்வீட்டில் கூடி இருந்தாலும் வெண்கலப்பாத்திரத்தில் உணவு அருந்துவான்.

ஆனலக்கின்த்தோன் வாக்கோனாகவீரிரண்டுபேரு
மீனவெஞ்சநியைச்சேரி லிரும்புபாத்திரத்திலுண்பன்
சேனைசேய்வாக்கினிற்கச் சேய்தனைப்பாவர்நோக்கின்
மானைநேர்விழியினாளே மதலைசட்டியிலுண்பானே. 38

இலக்கினாபதி, இரண்டாமதிபதி ஆக இரண்டு கிரகங்களும் சனியுடன் கூடினால் இரும்புப்பாத்திரத்தில் உணவு அருந்துவான் இரண்டாமிடத்தில் செவ்வாய் நிற்கினும் இவரைப் பாபக்கிரகங்கள் பார்த்திடினும் மண்சட்டியில் உணவு அருந்துவான்.

பானலஞ்சிறந்தவாக்கோன் பாவர்களுடனேகூடி
வேனராவாக்கினின் னட்பாட்சியுமுச்சமேனு
மானவன்புசிப்புமிஞ்சு மன்னவனீசமேறி
லீனனுமாகிப்பிச்சை யெடுப்பனென்றியம்பலாமே. 39

வாக்காதிபதி பாபக்கிரகத்துடன் கூடி 2மிடத்தில் நட்பு ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் உணவு பஞ்சமில்லாமல் கிட்டும், மாறாக இவ்வதிபாதி நீசமடைந்தால் பிச்சை எடுத்துன்ண்பவனாவன்.

இயம்பியவாக்கோனற்கோ ளெய்திடரெண்டின்கோட்போய்
நயம்பெறுகோளைச்சேர நன்மக்கோணோக்குமாகிற்
பயம்பெறுசுகத்தோடுண்பன் பகைநீசராசியேறி
மயங்கியநீசர்நோக்கில் வதிந்துண்பான்பலவீடெல்லாம். 40

2மிடத்தின்அதிபன் சுபக்கிரகத்துடன் கூடி, 2மிடத்தில் சுபக்கிரக மிருந்து, 2மிடத்தைச் சுபக்கிரகம் பார்க்க, சுகஜீவியாய் போஜனம் செய்பவனாவன். இதற்குமாறாக இவ்வதிபன் பகை, நீச ராசிகளிலோறி நீசக்கிரகத்தால் பார்க்கப்படுமேயானால் பலவீடுகளில் பிச்சை எடுத்துண் பவனாவன்.

எல்லையாமிரண்டினிற்கோ ளியம்பியநற்கோளாகச்
சொல்லியவுச்சராசி தோன்றிடச்சுபர்கணோக்கி
னல்லபோசனங்களாக நாவினாற்சிறுகவுண்பன்
வில்லெனுநுதலாய்கேளாய் மேலோர்களுரைத்தநூலே. 41

இரண்டாமிடத்தின் அதிபதி சுபக்கிரகமாகி உச்சவீட்டில் இருந்து சுபர்பார்வை பெற்றால் நல்ல விதமான சுக போசனங்களைத் தனது நாவின் சிறிது சிறிதாக ருசித்து உண்பவனாவான்.

மேலெழுவாக்குத்தானம் வீட்டுக்கோள்சநியதாகப்
பாலகன்வாக்குக்கோள்போய்ப் பகைசநியொன்றானாலுங்
கோலியநீசராசி குறுகிடவல்லோர்கோதாய்
சாலவுஞ்சநிபார்த்தாலுஞ் சவுண்டிசாதங்களுண்பான். 42

2ம் அதிபதி சனியாகினாலும் இரண்டாமிடத்ததிபதி சனியுடன் கூடி இந்நவர்கள் நீசராசிகளிலிருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டாலும் சவுண்டி (இறந்தவர்க்கு படைக்கப்படும்) சாதங்களையே உண்ணுவான்.

சாற்றியமறையோன் சிங்காசனமெனுமங்சமேற
வேற்றியபுகருங் கோபுராங்கிசமேறிநிற்க
வாற்றியவாக்குநாதன யிராபதாங்சமேறிற்
பார்த்திபன்வெகுசேனைக்கும் படிபோட்டிரட்சிப்பானே. 43

வியாழன் சிங்காசன மேற, சுக்கிரன் கோபுராங்கிஷமேற வாக்காதிபதி அயிராவதாங்கிஷ மேறி இருந்தால் அநேக சேனைகளுக்கு (படைகளுக்கு) அன்னமளித்து ஆதரிப்பான்.

படியிலோர்லக்கினக்கோள் பாலகன்வாக்குக்கோளைக்
கொடிதலானோக்கமற்றக் கொடியதீக்கோளுநோக்கி
லடிசிலுமேதானாலுமறவு மற்சிதங்கள் பண்ணான்
கடியதாய்ப்பசிக்குமுன்னே கண்ணிலெய்தியதுண்பானே. 44

இலக்கினாதிபதி இரண்டாமிடத்ததிபதியை பார்த்திருக்க, பிற தீக் கோள்களால் பார்வை யடைந்தாலும் ஆகாரம் புசிக்கு முன்னே பயபக்தியுடன் கண்ணில் வைத்து தெய்வத்தை நினைத்து உண்ணு பவனாகுவன் என்பதாம்.

சூரியற்கெட்டிலுள்ளோன் றோன்றிடுமோரையன்னோன்
காருமங்கிசத்திற்றீயர் சநிவருங்காலந்தன்னில்
வீரியமன்னனோடு மேவுங்கோடிசைகளுணி
லாருயிரிறப்பன்றந்தை மற்றகாரகர்க்குமாமே. 45

சூரியன் இருந்த வீட்டிற்கு 8க்குடையவன் இருந்த ஓராதிபன் நட்சத்திரக்காலில் சனி கோசாரத்தால் வரும்போது இவன் தந்தை மன்னர்களிடத்தில் பிணக்கு உண்டாகி மாண்டு போவான் என்பதாம். இதையே மற்றக்கிரக நாதர்க்கு உரியவர்க்கங்களுக்கும் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இரண்டாம்பாவம் – முற்றிற்று

மூன்றாம் பாவம்

காரகச்சேயுமூன்றோன் மூன்றினினிற்கப்பெற்றோன்
பாரவங்கிசமாயோரைப் பாராடுமுதலாயெண்ணிச்
சார்பகைநீசராசிதள்ளியே சதிராய்ப்பார்த்தே
யூர்துகையாகவிம்மாத்திரஞ் சகோதரமுண்டெனனே. 1

செவ்வாயும் மூன்றாமிடத்ததிபனும் 3ம் மிடத்திலிருந்த கிரகத்தின் அங்கிஷாபதியின் நிலையினைக் கொண்டும் இவர்கள் மேஷாதிமுதலாய் நின்ற பகை, நீசராசிகளைத் தவிர நின்ற நிலையினைக் கொண்டும் சகோதரவர்க்க பலனைச் சாதகருக்கு இயம்பல் வேண்டும் என்பதாம்.

உண்மையாமூன்றைநோக்கி யுரைப்பதுசகோதரங்க
டண்மையிற்பராக்ரமங்கள் சாகசந்தைரியங்கள்
பெண்கண்மார்போகம்வீரியம் பெருகுமாபரணப்பேறு
திண்மையாங்குரலினோசை செப்பலாந்தெளிந்துதானே. 2

ஜென்மலக்கினத்துக்கு மூன்றாம் இடத்தைக்கொண்டு சகோதர வர்க்கம், பராக்கிரமம், சாகசம், தைரியம், பெண்ணுடன் கூடிய போக நிலை, வீர்யம், ஆபரணம், குரலோசை ஆகியனவற்றைப் பற்றிச் சொல்லலாம்.

தெளிந்து சொன்மூன்றேழொன்பான் சிறந்தபன்னொன்றிற்செல்வர்
வளைந்துபின்னான்குகோளு மபகாரத்திசையிலாதல்
வழங்கியகோளைநோக்கி வருவதையாண்பெண்ணென்று
முளங்கொளுஞ்சகோதரங்க ளுண்மையாயுரைக்கலாமே. 3

3,7,9 மிடத்ததிபர்கள் 11மிடத்திலிருக்க, இம் 3, 7, 9, 11ம் இடத்ததிபர்கள் திசை அபகாரத்தில் ஆண், பெண் ஆகிய கிரகத்தினை பிரித்துப் பார்த்து அதற்கேற்ப வரப்போகின்றது ஆண் பெண் என்று சகோதிரவர்க்கத்தினை நிர்ணயம் செய்து கூறவேண்டும் என்பதாகும்.

உரைத்தனர்மூன்றின்கோள்போ யுயர்திரிகோணஞ்சார்ந்து
நிரைப்பிலமாகமூன்றி னின்றகோள்பிலத்துநிற்கத்
துரைத்தனரிரண்டுகோளுஞ் சுற்றியதிசையிற்றோன்றிக்
குரைத்தெழுஞ்சகோதரங்கள் கோட்பிலமறிந்துகூறே. 4

3மிடத்தின் அதிபதி 1,5,9 ஆகிய திரிகோணத்திலிருக்க, 3மிடத்தில் இருக்கும் கிரகம் ஆட்சி, உச்சம் பெற்று வலுத்திருக்க, இக்கிரகங்களின் திசா புத்தியில் சகோதர வர்க்கங்கள் உண்டாகும்.

கூறுங்காற்செவ்வாயானோன் கொடும்பிலமாகப்பார்க்கிற்
றேறுங்காற்சகோதரங்க டீர்க்காயுதானாமென்க
மீறுங்காவிலக்கினத்தில் வெகுபிலமாய்ச்சேய்மேவிற்
பேறுங்காற்குழவிமிக்கப் பிறவுமாமென்றுபேசே. 5

செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்று வலுத்திருக்க தனது உடன்பிறந்த சகோதர வர்க்கத்தவர்க்கு ஆயுள் தீர்க்கம் உண்டாம், ஜென்மலக்கினத்தில் செவ்வாய் வலுப்பெற்றிருக்க அநேக சகோதரர்கள் உண்டாம்.

பேசின்மூன்றுடையோன்சேயும் பிசகிலாறெட்டீராறே
னாசமாஞ்சகோதரங்க ணலனிலாப்பாபர்சாரில்
வீசினுந்தீக்கோளோடே மேவினும்வெறும்வீடாகத்
தாசனேசகோதரங்கள் சருவமுநாசந்தானே. 6

மூன்றுமிடத்ததிபதியும் செவ்வாயும் 6,8,12ல் இருந்தால் சகோதரர்கள் அழிந்து போவர். இவர்களுடன் பாபர்கள் சேர்ந்தாலும் சகோதர வர்கமானது அழிந்து போகும்.

தான்கொளுஞ்செவ்வாய்நீசந் தாவவத்தமனஞ்சாயப்
பாங்கினினீசர்சேரப் பதிந்திடநீசராங்சஞ்
சாங்கமாய்ப்பாவசட்டி யங்கிசஞ்செய்கின்றாலு
மாங்கிவன்சகோதரங்க ளடங்கலுநாசமாமே. 7

செவ்வாய் நீச அஸ்த்தமானம் அடைய, அல்லது நீசக்கிரகத்துடன் கூடினாலும், இவர்களது அங்கிஷம் பெற்றாலும் பாபர்களின் அங்கிஷத்தில் இருந்தாலும் இவன் உடன்பிறந்த சகோதர வர்க்கங்கள் அனைவரும் நாசம் அடைந்து போவார்கள்.

ஆமெனச்செவ்வாயேனு மந்தமூன்றுடையோனேனுந்
தீமைக்கோளுடனேகூடச் சேர்ந்தவர்நின்றவீட்டோ
னாமமும்பாபராகி னல்லவாலிபங்கடன்னிற்
றீமையாஞ்சகோதரங்கள் சேருமென்றுலகிற்செப்பே. 8

செவ்வாயாவது, 3க்குடையவனாவது பாபக்கிரகத்துடன் கூடி பாபர்கள் வீட்டிலிருந்தால் சிறுவயதிலேயே சகோதரங்களுக்கு தீமையுண்டாகும்.

செப்பியவாக்குநாதன் செல்லவாறெட்டீராறி
னற்பிலனாகச்செவ்வாய் நலமிலாக்கோளைநண்ணப்
பொற்புறுமதிபோயந்தக் கோளொடும்பொருந்துமாகி
யிப்படிப்பிறந்தசேய்க்கிங் கிரண்டுதாயுண்டென்பாரே. 9

2மிடத்ததிபதி 6,8,12ல் இருக்க செவ்வாய் வலுப்பெற்று இவருடன் கூடிட, சந்திரனும் சம்பந்தப்படுமேயானால், இச்சாதகனுக்கு இரண்டு தாய் உண்டு என்று சொல்லவும்.

இரண்டினிற்கடுத்தமூன்றி லிருப்பதுநற்கோளாகிற்
றிரண்டெழுஞ்சகோதரங்க டீர்க்காயுளென்றுசெப்பு
வரன்றியமூன்றிற்பாபர் வந்திடவலியதீக்கோள்
பிரண்டெழநோக்குமாகிற் பெண்சகோதரங்கள்பொன்னே. 10

3மிடத்தில் சுபக்கிரகங்களிருக்க சகோதரர்களுக்கு ஆயுள் தீர்க்கமுண்டாம். 3மிடத்தில் பாபக்கிரகமானது இருந்தால் பாபர் பார்வை பெறுமேயானால் உடன் பிறந்தவர்கள் பெண்சகோதர வர்க்கத்தவராவர்.

பொன்னனாய்ப்பருதிமூன்றாய்ப் பொலிவிலாத்தீக்கோணோக்கிற்
றன்னின்மூத்தோர்கள்சாவாஞ் சநிசெவ்வாய்மூன்றிற்சாரின்
மின்னியதீக்கோணோக்கில் வேந்தனுக்கிளையதேசா
மன்னமேதப்பாதென்றார் கணிதநூலாய்ந்தவல்லோர். 11

மூன்றாமிடத்தில் சூரியன் இருக்க, பாபக்கிரகமானது இவரைப் பார்க்க, மூத்த சகோதர்கள் இறந்து போவார்கள், சனி செவ்வாய் கூடி மூன்றாமிடத்திலிருந்து பாபக்கிரகமானது பார்த்தால் இளைய சகோதர வர்க்கம் மாண்டு போகும் என்று கணிதநூல் உணர்ந்த பெரியோர்கள் கூறுவர்.

ஆய்ந்தமூன்றுடையோனின்ற வரியகெந்திரத்திரிகோணஞ்
சாய்ந்ததிற்பாவராகிற் சகோதரநாசந்தானா
மேய்ந்தகெந்திரத்ரிகோண மிவைகளிற்சுபர்களேகிற்
றோய்ந்தவர்சுகமாம்பாபர் சுபருமேற்சமனாய்ச்சொல்லே. 12

மூன்றாமிடத்ததிபன் நின்றவிடத்துக்கு 1,4,5,7,9,10 ஆகிய ஸ்தனங்களில் பாபக்கிரகமானது இருந்தால் சகோதரநாசம் உண்டாம். இத்தானங்களில் சுபக்கிரகமானது இருந்தால் சகோதரசுகம் உண்டாம். இவைகளில் சுபரும், பாபரும் கலந்து இருந்தால் சிறது சுகபோகம் உண்டாகும்.

சொல்லியமதியாறெட்டிற் றோன்றமுன்னான்கிற்றோய
வெல்லுமூன்றுடையோன்கூடில் வேறுதாய்முலையையுண்ணு
மல்லநாளினிற்கோண்மூன்றோ னான்கினினண்ணுமாகி
லில்லையென்சகோதரங்க ளிவனைமிக்காருமென்னே. 13

சந்திரன் 6,8,12 ல் இருந்து இவருடன் 3க்கு அதிபன் கூடியிருந்தால் வேறு ஒரு தாயினிடம் பாலருந்துவன். 4மிடத்ததிபதி 3மிடத்திலிருந்தால் இவனை மிஞ்ச சகோதரர்கள் இல்லையாம்.

மிக்கமூன்றுடையோன்சேயு மேவிடவேற்றோர்தம்மை
யுட்கலந்தொருதாய்பெற்ற துடன்பிறப்பாக்கிக்கொள்வன்
றக்கமூன்றாமிடங்க டன்னிலேசநிபோய்ச்சாரி
லிக்கணந்தனக்குநேரே யிளையதைச்சாவுண்டென்னே. 14

மூன்றாமிடத்ததிபதினாம், செவ்வாயும் கூடிட ஒரு தாய் பெற்ற வர்க்கத்தின் சகோதரர்களாக்கிக் கொள்ளுவான் 3மிடத்தில் சனி இருந்தால் இவனுடைய இளைய சகோதரமானது மாண்டு போகும்.

இளைத்திடாமூன்றின்கோட்போ யெய்திடப்புருடராசி
வளைத்துநோக்கானேற்பின்பு வருஞ்சகோதரங்களாணா
முளைப்பதுந்திரியாயிந்து முதுபுகர்சாரினோக்கிற்
றழைத்தசாதகர்க்குப்பின்பு சகோதரம்பெண்ணாய்ச்சாற்றே. 15

3மிடத்ததிபன் ஆண் ராசியில் இருந்து இவனுக்கு பின்பிறந்த சகோதர வர்க்கமானது ஆணாகும். இவரை சந்திரன், சுக்கிரன் சேர்ந்தாலும் பார்த்தாலும் இளையது பெண்ணாகும்.

சாற்றியமூன்றின்கோட்போய்ச் சார்ந்திடச்சுபர்களோடே
யேற்றியசுபக்கோணோக்கி யிருக்ககேந்திரத்திரிகோணந்
தோற்றியசகோதரங்கள் சோர்விலாதாண்பெண்ணுண்டாங்
கீர்த்திமானாகிமிக்கக் கிளையொடும்சுகமுண்டென்னே. 16

மூன்றாமிடத்தினதிபதி சுபக்கிரகங்களோடு கூடிச் சுபர்பார்வை பெற்று 1,4,5,7,9,10 ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் இவனுடன் பிறந்தவர்கள் சகோதரர்களும், சகோதரிகளும் சுக ஜீவியாய் பொன், பொருள், புகழ் பூஷணாதிகளுடன் இனிதுவாழ்வர்.

சுகமுடன்மூன்றினிற்கோள் சுபருடன்பாபராகி
லகமகிழ்ந்திலக்கினக்கோ ளவருடன்கூடிநிற்கிற்
றகமையாந்தாய்க்குக்கெர்ப்பந் தங்கியல்லாதுதாழ்வாம்
புகலுங்காண்மேலோரெல்லாம் பொறித்தநூல்வழியிதாமே. 17

3ம் இடத்ததிபன் சுபர், பாவர் ஆகிய இவர்களுடன் கூடி லக்கினாதிபதியும் சம்பந்த முற்று இருந்தால் இவனது தாய்க்கு பின் தரிக்கும் கற்பம் தங்காது அழிந்து போகும்

பொறித்தபன்னொன்றிற்கோட்கள்போன்றதத்தனை முன்னோராஞ்
சிறந்தவாக்குடனேமூன்றிற் சிறந்ததெத்தனைக்கோளுண்டோ
பிறந்ததையெண்ணிக்கொண்டு பின்னோர்கடுகையைப்பேச
வறிந்தமேலோரகன்சொல்லு மடவிதுசகோதரற்கே. 18

11மிடத்தில் எத்தனை கிரகமிருந்ததோ அத்தனை மூத்த சகோதரம் உண்டென்று சொல்லவும். 3மிடத்தில் எத்தனை கிரகமிருந்ததோ அத்தனை இளைய சகோதரம் உண்டென்று சொல்லவும்.

அடவுடன்மூன்றோன்செவ்வா யவ்விடத்திருந்தோன்பார்த்தோன்
றிடமுடன்பிலவானாகச் சிறந்திடநாலுபேரு
முடனுறுங்கோளுமெண்ணி யுடன்பிறந்தாரைச்சொல்வாய்
நடமிடுநீசவத்த மனங்கண்டுநாசஞ்சொல்வாய். 19

மூன்றாமிடத்ததிபதி, செவ்வாய், மூன்றிலிருந்தவன், மூன்றைப் பார்த்தவன் இவர்களுடன் சம்பந்தமுற்ற கிரகம் ஆகியவற்றுடன் நீச, அஸ்தமனங் கழிந்த வலுத்தகிரகத்தின் மூலம் உடன் பிறந்த சகோதர வர்க்கத்தினை இவ்வுலகில் பிறந்த ஜாதகர்க்கு எடுத்து இயம்ப வேண்டும் என்பதாகும்.

நாசமிற்சகோதரத்தி னாதிபன்முதலாய்முக்கோள்
வீசியபிலன்களாக மிக்கிரண்டேனுமாகத்
தேசிகன்சகோதரத்திற் சிறிதுபோஞ்சிறிதுநன்றாம்
பேசிலுச்சாட்சிமற்றும் பிலன்கண்டுபிறப்பைப்பேசே. 20

சகோதர காரகனாகிய செவ்வாயும், 3மிடத்ததிபனும், 3ல் நின்றவருமாகிய கிரகங்களும் 2ம் வலுப்பெற்றிருந்ததால் சில சகோதர வர்க்கங்கள் இறந்து சிலது மிஞ்சும், இதுவும் ஆட்சி உச்சம் பெற்று வலுத்த கிரகத்தின் நிலையறிந்து சொல்லவேண்டும்.

பிறந்தமூன்றின்சேய்நிற்கப் பிரிந்தவங்கிசத்தைநோக்கிச்
சிறந்தமேடந்தொட்டஞ்சஞ் சேர்ந்தராசிகண்மட்டெண்ணி
மறைந்தசத்துருநீசங்கள் வரைந்ததின்மற்றராசி
யுறுந்தகையெண்ணிக்கொண்டேயுடன்பிறந்தாருண்டென்னே. 21

மூன்றாமிடத்தில் செவ்வாய் இருக்கவும், இவர் இருந்த அங்கிஷாதிபதியும் இருந்த வீட்டை மேடம் முதலாக எண்ணிக்கண்ட ராசியின் தொகை என்னவோ அத்தனை உடன் பிறப்புக்கள் உண்டென்று சொல்லவும். இதல் பகை நீசராசிகளைத் தவிர்த்து மீதமுள்ள ராசிகளின் எண்ணிக் கைபார்த்து பலன் சொல்லவும்.

உடன்பிறந்தாரிலாண்பெண் ணுரைத்திடமூன்றோன்செவ்வாய்
மடந்தைராசியிலேநிற்க மங்கையாங்கிரகநோக்கத்
திடம்படச்சேருங்கோளுந் தெரிவைகோளாகச்சேரிற்
றடங்கணாயெண்ணியாண்பெண் டன்னையித்துகையாற்சாற்றே22

செவ்வாய் பெண்ராசியிலே இருந்து பெண்கிரகமாகிய சுக்கிரன், சந்திரன் இவர்களால் பார்க்கப் பட்டாலும் அல்லது பெண்கிரகத்துடன் கூடினாலும் இத்தனை உடன் பிறந்த பெண்வர்க்கம் உண்டென்று சொல்லவும்.

சாற்றியமூன்றாம்ராசி தான்றிரராசியாகிற்
பார்த்ததுமூன்றைநோக்கிப் பதியதுந்திரிகோளாகிற்
றீர்க்கமாய்ச்சகோதரங்கட் டிரிவருஞ்சிறுவன்மன்னாங்
கூற்றழல்விழியினாளே குறிப்பிவையறிந்துகூறே. 23

3ம் இடமானது ஸ்திரராசியாகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம் கும்பம் ஆகியனவாயிருந்து இத்தானத்தில் 3கிரகமானது இருக்க இச்சாதகனுடன் பிறந்த சகோதரன் இருவர் எனவும் இவர்கள் இருவரும் சிறு வயதினை உடைய சிறுவர்கள் எனவும். கூறுவாயாக.

கூறின்மூன்றினிற்கோடன்னைக் குறித்தவச்சகோதரர்க்கு
மாறியதிரிகளாலே வரும்பலனுரைக்கமற்று
மீறிலக்கினத்தோன்செவ்வாய் மிக்கமூன்றுடையோனாலே
தேறியசகோதரர்க்குச் செய்பலனரிட்டஞ்செப்பே. 24

மூன்றுமிடத்தின் கிரகத்தினைக் கொண்டு சகோதரவர்க்கத்தவர்க்கு வருகின்ற பலாபலன்களைக் கூறவும். இலக்கினாதிபதி செவ்வாய், மூன்றாம் அதிபதி ஆகிய மூன்று கோள்களின் நிலையைக் கொண்டு சகோதரர் களுக்கு உண்டாகும் பலன்களையும் அரிட்டம் (துன்பம்) முதலியவை பற்றியும் கூற வேண்டும்

செப்புங்காலிலக்கினத்தோன் றெளிந்துமூன்றுடையோன்கூடித்
தப்பிலாதுறவுமானாற் சகோதரர்க்கினியனாவ
னப்படிகூடிமூன்றி லிலக்கினந்தன்னிலேகி
லொப்பிலாப்பகைஞராகி லுயர்தருவிரோதனாமே. 25

லக்கினாதிபதியும் மூன்றாமிடத்ததிபதியும் கூடி ஒருவருக் கொருவர் நட்புக் கிரகமாயிருந்தால் சகோதரனுக்கு இளையவனாவன் இவ்வாறாகக் கூடி லக்கினத்திலிருந்தால் சகோதரனுடன் பகைமையாயிருப்பன்.

உயரிலக்கினத்தின்கோளு முற்றமூன்றுடையகோளும்
பயில்பிலவீனமாகப் பகைத்தசத்துருவேலன்றித்
தயிரியரெட்டுதன்னிற் றயங்குபன்னிரண்டிற்சார்ந்து
செயலின்றேற்சகோதரற்குத் திசையிலேமோசஞ்செப்பே. 26

லக்கினாதிபதியும், மூன்றாமிடத்ததிபதியும், பலகீனமடைந்து பகை, நீச ராசியிலே அமர்ந்து இருந்தாலும் அல்லது 8,12ல் இருந்தாலும் இவரது திசா புத்தி காலம் சகோதரர்க்கு மோச முண்டாகும். (துன்பம் உண்டு)

செப்பமாம்லக்கினக்கோள் சிறந்தமூன்றுடையோன்செவ்வா
யொப்பிலாமூன்றுபேரு முருகின்றதத்தைநோக்கித்
தப்பிலாதிபனைச்சார்ந்த சகோதரர்சிநேகந்தானும்
வெப்பமாயிவராற்சாருங் கலகமும்விளம்பலாமே. 27

ஜென்ம லக்கினாதிபதியும், மூன்றாமிடத்தானும், சகோதர காரகனாகிய செவ்வாயும் ஆகிய மூவரும் இருக்கின்ற ஸ்தானபலன்களைக் கொண்டும், இவர்கள் இருந்த வீட்டாதிபன் நிலையினைக் கொண்டும் சகோதரர், நண்பர்கள் இவர்களால் உண்டாகும் கலகத்தைப் பற்றியும் (சண்டை) எடுத்து இயம்பலாம்.

விளங்கியமறையோன்வெள்ளி மிக்கமூன்றதனைநோக்கின்
முழங்கியசகோதரத்தைமுழுதும் ரட்சிப்பானல்லால்
வழங்கியகதிருமாலு மைந்தன்மூன்றதனைநோக்க
வுளங்கொளுஞ்சகோதரங்க ணாசமென்றுரைக்கலாமே. 28

வியாழன், சுக்கிரன் இவர்கள் மூன்றாமிடத்தைப் பார்த்தால் சகோதரர்களைக் காப்பாற்றுபவனாயிருப்பான். மாறாகக் சூரியனும் புதனும் மூன்றாமிடத்தைப் பார்ப்பார்களேயாமாகில் சகோதரர்கள் நாசமடைந்து போகும்.

உரைத்திடின்மூன்றினின்றோ னுற்றமூன்றுடையோன் செவ்வாய்க்
கிறைப்பகைநீசஞ்சார்ந்து நிற்கவாறெட்டீராறிற்
றிரைதிசையபகாரத்திற் றிரவியநாசமாகும்
வரைபிலமாகமன்னிற் சகோதரவரவாமாதே. 29

மூன்றாமிடத்தில் இருந்தவரையும், செவ்வாயையும் பகை, நீசராசிகளில் சேர்ந்துளனரா அல்லது 6,8,12 மிடத்தில் மறைந்துள்ளனரா எனத்தெரிந்து அக்கிரகத்தின் திசா புத்திகளில் பொருட் சேதம் உண்டாகும் என்று சொல்லவும். மாறாக வலுப்பெற்று இருக்குமாயில் (1,4,7,9,10,ஆட்சி உச்சம் பெற்றால்) சகோதரர்களால் பொருள் வரத்து உண்டாகும்.

வாமமூன்றுடையோனுச்ச மாகியேபாவக்கோளே
யாமெனக்கூடியாறெட் டீராறிலமையுமாகிற்
றாமரைக்கண்ணாய்ராசி சரங்களாய்ச்சராங்சமேறிற்
றீமையில்லாதுயுத்தகளங்களிற் செயங்கொள்வானே. 30

3ஆம் இடத்ததிபன் உச்சம் பெற்று பாபக்கிரகமாகியவைகளுடன் கூடி சரராசியில் இருந்து நவாம்சத்திலும் சர அங்கிஷம் பெற்றிருந்தால் ஒரு தீங்கும் இல்லாது யுத்தக் களத்தில் (போரில்) வெற்றியை நாடுவன்.

செயலுடைச்செவ்வாயானோன் செயிற்பிலவீனமாக
வியனிலாப்பாவ சட்டியங்கிசமேறுமாகிற்
புயலுங்காற்சுபர்கள்கூடப் பார்க்கப்பாக்கியவானாகித்
தயிரியவானாயுத்த சண்டையிற்செயிப்பன்றானே. 31

செவ்வாய் பகை, நீச மறைவிடங்களில் பலமற்றிருக்க பாபக்கிர கங்களின் சஷ்டியாம்சம் (தசவர்க்ககணிதங்களில் ஒன்று) பெற்றுச் சுபக்கிரகத்தால் பார்க்கவோ அல்லது கூடிடவே செய்யுமாகில் மிகுந்த பாக்கியம் உடையவனாயும் தயிரியமுடன் போர் முகத்தில் வெற்றி அடைபவனாயும் இருப்பான்.

தானமாமூன்றோன்வெய்யோன் றன்னுடன்கூடுமாகின்
மேன்மையாங்கன்யவானா மெண்ணிலாவுடனேகூடிற்
றீனமிறைரியவானாஞ் சேயொடுசேர்ந்துநின்றாற்
பூனவிற்றுட்டனாவன் புதன்சாரிற்புத்திமானே. 32

மூன்றாமிடத்ததிபதி சூரியனுடன் கூடினால் கண்ணியமுடையவன் சந்திரனுடன் கூடினால் தைரியவானாய் இருப்பான். செவ்வாயுடன் கூடினால் துஷ்டகனாக விருப்பான் புதனுடன் கூடிநின்றால் புத்தி உடைய வனாவன்

மாதிசைமூன்றின்கோட்போய் வலியராகுவினைநோக்கிற்
றீதெனும்பயத்தனாவன் செய்யகேதுவினைச் சேரிற்
கோதிலாவியாதியத்தன் குளிகனைச்சேருமாகி
லோதியகேதுவோடே யுடனின்றபலனுக்கொப்பே. 33

ஜென்மலக்கினத்திற்கு மூன்றாம் இடத்ததிபன் ராகுவைச் சேர்ந்தால் தீமையுடையவனாம். கேதுவினைச் சேர்ந்தால் பயம் உடையவனாகும். சூரியனையும், குளிகனையும் சேர்ந்தால் பயத்தை உடையவனாகவும் இருப்பான்.

ஒப்பிலாமூன்றின்கோட்போ யுயர்மறையோனைச்சார்ந்து
மெய்ப்பிலக்கினமேநாற்கான் மிருகத்தாற்பயமுண்டென்ச
விப்படியிவர்கள்கூடி யிவர்சிலராசியேறிற்
றப்பிதமன்றிச்சொன்னோஞ் சலத்தினாற்பயமுண்டென்னே. 34

மூன்றாமிடத்தினுக்குடையவன் வியாழனுடனே கூடி லக்கினத்திலிருந்தால் நாற்கால் மிருகத்தால் பயமுண்டாகும். மேற்சொன்ன கிரகங்கள் கூடி ஜலராசிகளிலிருந்தால் சலகண்டம் உண்டாகும்.

சலந்தருகிரகச் செவ்வாய் சார்ந்திடுங்கிரகத்தோடே
பிலம்பெறநிற்கிலாக்கை பிலனுமாமிசையும்பேசு
மிலங்கியசெவ்வாய்மூன்றா மிடத்தின்கோளிருந்தோன்மூன்றுங்
கலங்கிடாப்பிலமேலுத்த களத்தினிற்சூரன்காணே. 35

செவ்வாயும் இவருடன் சம்பந்தமுற்ற கிரகமும் வலுத்து நின்றால் நல்ல பலமுள்ளவனாவன். மூன்றாம் இடத்ததிபன் செவ்வாய், மூன்றாமிடத்தான் இருந்த அதிபன் ஆகிய மூவரும் பலமுடன் இருந்தால் யுத்தக் களத்திற் செயமடைவான்.

காண்கிலிம்மூன்றுகோளின் கனிதிசையபகாரத்தி
லூண்பழங்கிழங்கதாகு முரைத்ததிற்பிலன்றிரண்டேற்
பூண்முலைமடவாய்நல்ல பூடணம்பொருள்வந்தெய்துஞ்
சாண்பெறுமூத்ததாயாற் சகோதரந்தானுமாமே. 36

மேற்கவியிற் சொன்னது போல்இருந்து இவர்களின் திசை அபகாரம் வரும்போது, பழம், கிழங்கைப் புசித்து நல்ல பலமுள்ளவனாயும் பொன், பொருள் திரவியம் முதலியன உடையவனாயும் இருக்கச் செய்யும். இதுவே 11மிடத்ததிபதியுடன் சம்பந்தமுற்றிருந்தால் மூத்தசகோதரவர்க்கத்தவர்க்கு உண்டாகும்.

தானமாமூன்றோனல்ல சார்பொடுபிலவானாகி
லூனமிற்சாதுவாவா னொப்பிலாமூன்றின்கோட்போய்
மானனாய்நீசவத்த மனப்பகைராசியேறி
வீனபாபர்களைச்சேரி லிவனுஞ்சாதகஞ்செய்வானே. 37

மூன்றாமிடத்ததிபன் பலமுடனிருந்தால் சாதுவாயிருப்பன். நீச அஸ்தமனமடைந்தாலும், பகை, நீசமடைந்தாலும் பாபக் கிரகத்துடன் கூடினாலும் சாதனையாயிருப்பான்.

இவனிலக்கினத்தின்மூன்றோ னிராகுவினுடனேகூடி
லவனியிலந்தராசிக் கதிபனுங்கூடக்கூடிப்
புவனிலக்கினத்தோனின்றாற் பூவையேகேட்குங்காலை
தவநெறியில்லாச்சாப்ப பயமெனச்சாற்றலாமே. 38

இலக்கினாதிபதி மூன்றாமிடத்ததிபதி, இவர்கள் ராகுவுடன் கூடி இருந்த ராசிக்கதிபனும் இவர்களுடன் கூடி நிற்க சர்ப்ப பயம் உண்டாயிருக்கும்.

சாற்றியமூன்றின்கோட்போய்ச் சார்ந்திடப்பாபர்தீயோர்
தோற்றியராகுவோடே தோய்ந்திடப்பாபர்நோக்கில்
வேற்றுமையில்லைசொன்னோம் வியகண்டந்தன்னிற்றானே
மூத்தபாபிகளேயாகின் முடமயிருண்டாமென்பார். 39

3ஆம் இடத்ததிபதி பாபக்கிரகங்களுடன் சம்பந்தப்பட்டுப் பாபர் பார்வையுற்றாலும் 12,1,4,7,10 ஆகிய ஸ்தானங்களில் சனி, ராகு, கேது போன்ற பாபக்கிரகங்கள் இருந்தால் தொண்டையில் முடிவளரும் (இதுவே முடமயிராகும்)

முடங்கியமூன்றிற்பாவர் மொய்த்திடக்குளிகன்கூடிற்
றடங்கணாயிவர்க்குக்கண்டந் தனின்முடமயிருண்டாகுந்
திடம்படச்சநியுஞ்சேயுஞ் செப்பியமூன்றிற்சேரிற்
றுடங்கியேகண்டரோகஞ் சொல்லலாமிவர்க்குத்தோகாய் 40

3மிடத்தில் பாபக்கிரகமிருக்க, இவருடன் குளிகன் கூடினால் தொண்டையில் முடமயிர் வளரும், செவ்வாயும் சனியும் 3மிடத்தில் இருந்தாலும் முடமயிர் உண்டாம்.

தோகையேமூன்றின்கோட்போய் சுரர்குருவுடனேகூடப்
பாகைலக்கினத்தோனின்றாற் பசுக்களாற்பயமுண்டென்க
வேகியேமூன்றின்கோட்போ யிராகுவினுடனேகூடி
யாகையால்விடத்தினாலே யவமிருத்தென்னலாமே. 41

3ஆமிடத்தின் அதிபதி சுக்கிரனுடன் கூடி லக்கினத்தில் இருந்தால் பசுக்களால் பயமுண்டாகும். 3ஆம்இடத்தின் அதிபதி ராகுவுடன் கூடினால் விஷத்தினால் கண்டம் உண்டாகும்.

அவனியின்மூன்றோன்புத்தி யன்னவனுடனேகூடிற்
கவனமாய்த்தீகளோடே கலந்துசும்பனங்கள்செய்வ
னிவனுடன்பகைநீசக்கோ யெய்திடப்பாபர்கூடிற்
புவனியில்விடத்தையெல்லாம் புசிப்பனென்றியம்பலாமே. 42

மூன்றாமிடத்ததிபன் புதனுடன் கூடில் பெண்களுடன் கூடி சும்பனம் (முத்தம்) செய்யப்பிரியமுள்ளவனாம். இவருடன் பகைஅல்லது நீசம் பெற்ற கிரகம் கூடி இருந்தால் விஷம் அருந்துபவனாவன்.

புசிப்பிலாமூன்றின்வேந்தன் புந்தியுமிருக்கவல்லால்
விசையினாலிவர்கணோக்க வெகுபிலவான்களாக
வசையின்மூன்றினுக்குக்கெந்திர மறையவன்மாலுமாகிற்
கவியினாலினியநாவாற் கண்டத்திலிசையுண்டாமே. 43

மூன்றில் வியாழன் புதன் இருக்க அல்லது இவ்விடத்தை இவர்கள் பார்க்க வலுவுடன் இருந்தாலும் அல்லது 3ஆம் இடத்திற்கு 1,4,7,10 ஆகிய கேந்திரத்திலிருக்க கவிபுனைய வல்லவனாம், இசைபாட்டில் (வாய்ப் பாட்டில்) வல்லவனாயுமிருப்பர்.

கண்டத்தின்மூன்றின்மீதே காதலாற்சுபர்கள்வாழ
விண்டதைச்சுபர்கணோக்க மிக்கமூன்றுடையோன்றானும்
பண்டையிற்சுபர்களோடே பாய்ந்திடிற்பிணிகள்காதிற்
கெண்டையங்கண்ணாயென்றுங் கிடக்குமென்றியம்பக்கேளே.44

மூன்றாமிடத்தில் சுபக் கிரகங்கள் இருக்க அல்லது சுபர்கள் பார்க்க இவ்வதிபதி சுபருடன் கூடினாலும் நிறை காதணிகள் (கடுக்கன், கம்மல்) இச் சாதகருக்குக் கிட்டுமாம்.

கிடக்குமப்பணியைச்சொல்லக் கிட்டியமூன்றுதன்னிற்
றிடப்படவெள்ளிநின்றாற் சேர்பணிமுத்தினாலாந்
துடக்கியமறையோனிற்கிற் றுளசிதாமரையினாலே
புடைத்தெழுகதிரோனின்றாற் புனைவதுசிவப்புநீலம். 45

மூன்றாமிடத்தில் சுக்கிரன் இருந்தால் முத்தினாலான ஆபரண முண்டாம் வியாழன் இருந்தால் துளசிமாலை, தாமரைமணிமாலை அணிபவனும், சூரியன் இருந்தால் சிவப்பு, நீலம் முதலிய கற்களை அணிவர்

புனைமதிமூன்றினின்றாற் பூணுநானாவிதங்க
ளினியதார்புதன்மூன்றாகி லிம்மூன்றுஞ்சேய்விடாகிற்
கனபணிவிசித்திரங்கள் காரணமூன்றோனாட்சி
யனகனுமுச்சமாகி லளவினற்பணிகளாமே. 46

மூன்றாமிடத்தில் சந்திரன் இருந்தால் நாலாவித ஆபரணமுண்டாம் புதன் இருந்தால் மேற் சென்ன மூன்று பலன்களும் உண்டாம். செவ்வாய் இருந்தால் விசித்திரமாகிய ஆபரணங்களுண்டாம். மூன்றாமிடத்ததிபன்

ஆட்சி, உச்சம் பெற்றால் அளவில்லாத நல்ல ஆடையாபரணங்கள் உண்டாயிருக்கும் என்பதாம்.

ஆமென்பர்மூன்றோன்பத்தா யதுசுபராசியாகின்
மேன்மைவத்திரங்கள்சேரும் வெள்ளியுமிவனுங்கூடிற்
றாமங்கள்பணிகளாடை தன்மகாதைகளும்சொல்வன்
பூமங்கோள்புதன்பொன்னோக்கில் புகழிப்பான்புண்யகாதை 47

ஜென்மலக்கினத்துக்கு 3,10 மிடங்களில் சுபராசியாகயிருந்தால் நல்ல வஸ்திரங்கள் சேரும். 3 க்குடையவனும் சுக்கிரனும் கூடியிருந்தால் ஜாதகர் அநேக பணியாட்கள் நல்ல ஆடைகள் உடையவனும் நீதிகதைகளை மக்களுக்கு எடுத்துச்சொல்பவனுமாயிருப்பான். இத்தகைய பூமானாகிய சீமானின் மேற்சொன்ன கிரகத்தை புதன், குரு பார்த்தால் புண்ய கதைகளை போதிப்பவனுமாயிருப்பான்.

புகழித்தமூன்றின்கோட்போய்ப் புண்ணியருடனேகூடித்
தகமித்தசுபக்கோனோக்கிற் றைரியவானாமென்க
சுகமித்தபாபரோடே தோய்ந்திடப்பாவர்நோக்கின்
மகவுக்குத்தாயரில்லை வாணுதலாளேசொல்லே. 48

மூன்றாம் அதிபதி சுபக் கிரகத்துடன் கூடிச் சுபர்பார்வை பெற்று நின்றால் தைரியமுடையவனாவன். மாறாகப் பாபக் கிரகத்துடன் கூடில் பாபர் பார்வை உற்றால் இவனுக்கு தாய் இருக்க மாட்டாள்.

வாணுதலாளேமுன்பு வகுத்துரைக்கின்றகோட்கள்
பூணுகெந்திரத்திரிகோணம் பொருந்திடச் சுபர்கணோக்கி
னீணிலத்துதித்தமைந்த னிலைமையாயெந்தநாளுங்
கோணிலாத்தைரியவானாங் கோதையேயறிந்துகூறே. 49

முன்சொன்ன கிரகங்களானவை 1,4,7,10,5,9 ஆகிய கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருந்து சுபர்பார்வை பெற்று இவ்வுலகில் அவதரித்த ஜாதகர்க்கு நல்ல தைரியம் உண்டாயிருக்கும் என்று தெளிந்து சொல்லுவாயாக.

கோதையேமூன்றின்கோட்போய்க் கொடியசேயுடனேகூடித்
தீதெனும்பாபராசி சேர்ந்திடப்பாபர்சேரிற்
சேதமாய்வீரியநட்டந் திரிகோணகெந்திரஞ்சேர்ந்து
சூதிலாச்சுபர்கள்கூடிற் சுத்தரேநோக்கவீரியன். 50

மூன்றாமிடத்ததிபதின் செவ்வாயுடன் கூடிப் பாபர்கள் வீட்டில் இருக்க இவர்களுடன் பாபக்கிரகங்கள் சம்பந்தமுற்றிருந்தால் வீர்யத்தை இழந்து போவான் (விந்து, மனத்தைரியம் இவை எழிதில் அழியும் என்பதாம்) இவர்கள் 1,4,5,7,10 ஆகிய ஸ்தானங்களில் இருந்து சுபர்கள் கூடிச் சுபர்பார்வை பெற்றால் நல்ல மனத்தைரிய முடையவனாயும் போகத்தால் விந்து எளிதில் அழியாதவனுமாய் இருப்பான்.

சுத்தமாய்வெள்ளியிந்து மன்றியேசுருதிமூன்றை
வெற்றிசேர்சுபர்கணோக்க மென்சுபராசியங்ச
மத்திலேபிறக்கின்மாதே யதிசுகபோசனங்க
ளூற்றிவன்புசிப்பனென்றே யுரைத்தனர்தெளிந்தமேலோர். 51

சுக்கிரன், சந்திரன் நீக்கலாயுள்ள சுபக் கிரகங்களான வியாழன், புதன் ஆகிய இவர்கள் மூன்றாமிடத்தைப் பார்க்கவும், சுபகிரக ராசியில் இருந்தாலும், சுபர் அங்கிஷம் பெற்றாலும் அதிக சுக போஜனங்களை உடையவனாய் இருப்பான் என மேலார்கள் கூறுவர்.

உரைத்திடின்மறையோனின்ற நவாங்கிசத்திரேக்காணத்தில்
விரைத்தமூன்றுடையோணிற்க வேதியனவனைப்பார்க்க
வரைத்தகெந்திரத்ரிகோண மவைகளிற்செவ்வாய்நிற்கி
லிரைத்திடாப்பழங்கிழங்கி லிச்சையாயிருப்பனென்னே. 52

வியாழன் இருந்த நவாம்ஷ திரேக்காணத்தில் 3க்கு அதிபன் இருக்கவும் வியாழன் அவரைப் பார்க்கவும், செய்வாய் கேந்திர திரிகோணம் பெறவும் பிறந்த ஜாதகர் ஆனவர். பழம் கிழங்கு இவற்றைப் புசிக்கப் பிரியமுடையவராய் இருப்பர்.

இச்சையாய்மூன்றோனோடே யிரணியன்பிருகுகூடப்
பச்சைமானோக்கிப்பார்க்க வல்லதுபதியிற்கூடிற்
கச்சணிமுலையாய்கோளய் காசினிதனிலேமிக்காய்
நிச்சயமன்னதான நிலவரமாய்ச்செய்வானே. 53

மூன்றாமிடத்ததிபனோடு வியாழன் சுக்கிரன் கூடப் புதனால் இவர்கள் பார்க்கப்பட்டாலும் அல்லது சம்பந்த முற்றாலும் அன்ன தானங்கள் செய்பவனாவன்.

நிலவரமாகமூன்றோ னின்றிடச்சுபக்கோளோடே
மலைவிலாச்சுபர்கணோக்கி வையதேசியங்சமேற
நலனுறச்சுகத்தோனேனு நாரியேகேட்குங்காலை
யுலகினிற்பிறந்தசேய்க்கே யிரைத்திடுங்குணங்கடானே. 54

மூன்றாம் அதிபதி சுபக் கிரகங்களுடன் கூடிச் சுபர்பார்வை பெற்று வைசேடிகாங்கிஷம் பெற்றிருந்தால் இவ்வுலகில் பிறந்த ஜாதகர் நல்ல சுக முடையவராய் இருப்பர்.

மூன்றாம்பாவம் – முற்றிற்று

நான்காம் பாவம்

உரைக்கலாநான்கைநோக்கி யுடம்பினிற்சுகங்கள்வித்தை
குரைத்தெழுவாகனங்கள் குணமனம்பூமிவீடு
மரைத்திடும்பரிமளங்க ளடிமையாண்மாடுகன்று
நிரைத்தெழுபெந்துதாயார் நெறியிவைநிகழ்த்தலாமே. 1

ஜென்மலக்கினத்திற்கு 4மிடத்தைக் கொண்டு சுகம், வித்தை வாகனம், குணம், மணம், பூமி, வீடு, பரிமளவர்க்கம், அடிமையாள், மாடுகன்று பந்துக்கள், தாய் இவற்றைப் பற்றிக் கூறலாம்.

நிகழ்த்தியநான்கினான்கோ னின்றிடச்சுபருங்கூட
மகத்துவைச்சுபர்கணோக்க மாபிலவானேல்வித்தை
பகுத்திடுநான்கோனாறெட் டீராறிற்பதியப்பாபர்
மிகுத்ததிற்கூடநோக்க வீடுமேல்வித்தைதீதே. 2

4மிடத்ததிபன் சொச்சேத்ரம் பெற்று இருக்க இவருடன் சுபக் கிரகமானது கூடிடவோ அல்லது பார்க்கவோ செய்து பலமுடனிருந்தால் சகல வித்தைகளிலும் வல்லவனாய் இருப்பான். மாறாக 4ம் இடத்ததிபதி 6,8,12 மிடம் மறைந்து பாபர்கள் கூடவோ பார்க்கவோ பெற்றால் இருப்பிடமும் வித்தைகளும் நசித்துப் போகும்.

வித்தகனான்கினோடே வியாழமும்புதனுங்கூடப்
பத்தியாறெட்டீராறிற் பகைநீசராசியாகிற்
புத்திவித்தைகள்விவேகம் போய்விடுமிவர்கண்மூன்று
நத்தியவுச்சவாட்சி நற்கோண்கெந்திரங்கணன்றே. 3

வித்தைக்கு அதிபனாகிய 4ம் இடத்ததிபதியுடன் வியாழனும், புதனும் கூடி 6.,8,12ல் பகை, நீசம்பெற்று இருந்தால் வித்தை, புத்தி, விவேகம், இவைகளை அழிந்து போகும். மாறாக உச்சம், ஆட்சி, கேந்திர, திரிகோணம் பெற்று வலுத்து இருந்தால் புத்தி, வித்தை, விவேகம் நன்றாயிருக்கும்.

நன்றென்பர்பிலவானாக நவையிலாவெள்ளிநிற்க
வின்றெனிற்பிலவானாக விண்மதியிருக்கவித்தை
பொன்றிடச்சுபர்கணோக்க வல்லதுபுகழ்க்கோள்வீடாய்
மன்றல்சேர்நான்குநன்றேன் மாதாவுக்காயுளுண்டே. 4

நாலாமிடத்ததிபன் சுக்கிரனாயிருந்து பலமுடன்இருக்க புத்தி வித்தை விவேகம், உண்டாம். நாலாமிடத்ததிபன் சந்திரனாய் இருந்து பலமுடனிருக்க வித்தை யுண்டாம். 4மிடத்தைச் சுபர்கள் பார்க்கவும் அல்லது 4மிடம் சுபர் வீடானாலும் தாய்க்கு ஆயுள் தீர்க்கம் உண்டாம்.

மாதாவினாலின்கோட்போய் மருவவாறெட்டீராறிற்
போதாதலக்கினங்கள் பொருந்துலக்கினத்தின்மீது
தீதானபாபர்சேரத் தீயவர்நோக்கிப்பார்க்கில்
மீதானமாதுர்நாச மாமெனவிளம்பலாமே. 5

4ஆமிடத்தின் அதிபதி 6,8,12ல் இருந்து ஜென்ம லக்கினம் பாபருடைய வீடாயிருந்து பாபக்கிரகமானது இதில் அமரவோ, பார்க்கவோ செய்தால் தாய் நாசமடைவாள்.

விளங்கியேயமரபட்ச மேவியசந்திரனாக
வழங்குமாறெட்டீராறில் வலியபாவர்களேகூடிற்
களங்கமிந்நான்கிற்பாபர் கலந்திடப்பிறந்தசேய்க்குக்
குளம்பெறுதமர்சாமென்றங் குரைத்தனர்தெளிந்தமேலோர். 6

அமரபட்சத்தில் பிறந்த ஜாதகத்தினருக்கு சந்திரன் 6,8,12ல் பாபருடன் கூடி நின்று 4மிடத்தில் பாபர்கள் இருக்கப் பிறந்த குழந்தைக்கு உறவினர் வழியில் மரண காரியம் நடக்கும். (இதுவும் இக்குழந்தை பிறக்கும் போது சம்பவிக்கும்)

மேலவருரைத்தநான்கில் னேசித்தசநியோய்நிற்க
நீலனைப்பாபர்பார்க்க நீதியட்டமராசிக்கோள்
கோலியேபகைநீசங்கள் கொண்டுநின்றிடுமேயாகிற்
பாலகன்றனக்குத்தாய்சா மென்றனர்பகருங்காலே. 7

4ஆமிடத்தில் சனியிருக்க, இவரைப் பாபக்கிரகமானது பார்க்க 8மிடத்ததிப்பதி பகை, நீசராசியில் இருந்தால் இக்குழந்தையின் தாய் இறந்து போவாள்.

பகர்ந்திடின்மூன்றிலைந்திற் பாபர்களிருக்கநான்கோ
னிகழ்ந்திடும்பகைநீசத்தி லிருந்திடவிந்துவானோன்

சுகம்பெறாப்பாபரோடே தோய்ந்திடப்பிறந்தசேய்க்கு
மகன்பெறுதாய்க்குரோகம் வருமெனவகுப்பர்மாதே. 8

ஜென்மலக்கினத்திற்கு 3மிடம், 5மிடங்களில் பாபக்கிரகமிருக்க 4மிடத்ததிபதி பகை, நீச ராசிகளிலிருக்க, சந்திரன் பாபக்கிரகத்துடன் கூடி நின்றால் இவனது தாய் நோய் உடையவளாயிருப்பாள்

வகுத்தவாறுடையோனான் கோன்மன்னியொன்பதிலேறிற்கச்
சுகத்துடன்பிறரைநாடித் தோயவன்னியரைத்தாயார்
நிகழ்த்தியநாலின்கோளு நிகழ்ந்துவொன்பானிற்கோளு
மகத்துவனாலினின்றான் மருவுமன்னியரைத்தாயே. 9

ஆறாமிடத்ததிபன் நாலுக்குடையவன் இவர்கள் 9ம் இடத்தில் இருக்க தாய் பரபுருஷனை இச்சிப்பாள். 4மிடத்ததிபதியும் 9ம் இடத்தின் அதிபனும் 4மிடத்திலிருந்தால் தாய் அன்னிய புருஷனைக் கூடிடுவாள் (புணர்ச்சி செய்பவளாயிருப்பாள்)

அன்னியமதிதீயோரை யணுகிடப்பாபர்நோக்க
மின்னியகதிரினோடே மேவிகேந்திரமாய்நாலு
முன்னியநான்கிற்பாப ருறைந்திடப்பாபர்நோக்கிற்
றென்னவன்றாயைப்போன்ற த்ரீகளைச்சேருவானே. 10

சூரியன்பாபக் கிரகத்துடன் கூடிப் பாபர்களால் பார்க்கப்பட்டு 4மிடமாகிய கேந்திரஸ்தானத்தில் இருந்தால் தாய்க்கு சமமான ஸ்திரிகளைப் புணருவான். (உறவுமுறை இலாது புணருவான்)

சேருங்கான்மதியினாலுஞ் செய்சுகினாலினாலு
நேருங்கெந்திரத்தினிற்க நின்றதைப்பாபர்நோக்கச்
சாருங்கானான்கிற்பாபர் சார்ந்திடத்தாயையேனுங்
கோருந்தன்குருத்தியேனும் கூடுவான்குணங்கொண்மாதே. 11

சந்திரனும் நாலுக்கதிபனும் 1,4,7,10 ஆகிய கேந்திர ஸ்தானங்களில் ஏதேனுமொன்றிலிருக்க இவர்களைப் பாபர்கள் பார்க்கவோ அல்லது கூடவோசெய்து. 4மிடத்தில் பாபக்கிரகமானது இருக்கவோ செய்யுமாயின் தனது தாயைப் புணருவான் அல்து குருஸ்தீரியைப் புணருவான் என்பதாகும்.

குணங்களாறிடத்தின் கோட்போய்க் குளிர்ந்தசந்திரர்சேயோடே
யிணங்கியொன்றினிலேகிற்க வின்றெனின்கொடியராகு

வணங்சகனாய்க்கதிரோனோடே யாகினுமருவுமாகி
னிணங்கனாயிவனைப்பெற்று நேரிழைபரத்தையென்னே. 12

6மிடத்ததிபன் சந்திரன், செவ்வாய் இவர்கள் கூடி ஓரிடத்திலிருந்து இவர்களுடன் ராகுவோ அல்லது சூரியனோ கூடி இருக்குமேயானால் இவனைப் பெற்ற தாய் வேசியாவாள்.

என்னுமோர்மதிபோய்ராகு வேற்றகேதுவினைச்சேரிற்
பின்னையோர்நீசரங்சம் பெருகியசநியேற்சூத்ரன்
பொன்னனாய்ப்புதனாதித்தன் பூணுநூன்மறையோனோடேற்
சொன்னதில்வைசியன்சத்ரியன் சோதிடன்பார்ப்பான்சொல்லே.13

சந்திரன் ராகுவுடன் அல்லது கேதுவுடன் கூடி நின்றால் நீச சாதிப்புருஷனையும், சனியுடன் கூடினால் சூத்திரசாதியினத்தவரையும் புதன், சூரியன், வியாழன் இவர்களுடன் இருந்தால் வைசியன், சத்திரியன், சோதிடன், பிராமனன் (பார்ப்பான்) இவர்களுடன் கூடுவாள்.

சொல்லின்மூன்றுடையோன் சந்திரன்றோயுமாறெட்டீராறில்
வில்லெனுநுதலாய்கேளாய் வேறொருமுலைப்பாலுண்ப
னல்லநான்குடையோனைந்தோ னண்ணவாறெட்டீராறே
லெல்லைலக்கினக்கோண்மிக்கே லிவரிடத்தந்தைசாவே. 14

மூன்றாமிடத்ததிபன், சந்திரன் இவர்கள் 6,8,12ல் இருந்தால் வேறொரு தாயிடத்தில் முலைப்பால் அருந்துவான் 4மிடத்த்திபன், 5ம் அதிபதி இவர்கள் 6,8,12ல் இருந்து லக்கினாதிபதி சம்பந்த முற்றால் இவன்தந்தை இறந்து போவான்.

இவனுடன்பத்தைந்தாங்கோளிருவருமொன்றாய்க்கூடி
மவுனமாறெட்டீராறாய் மற்றலக்கினத்தின்கோளுந்
தவறிடாப்பிலமதானாற் றாய்க்குச்சீமந்தமாமுன்
புவனமேற்றந்தைசாவாய்ப் புகலலாம்பூவின்மாதே. 15

10மிடத்ததிபன், 5ம் அதிபன் இருவரும் கூடி 6,8,12ல் அமர்ந்து லக்கினாதிபதி வலுப்பெற்றால் இவன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போது பிரசவத்திற்கு ஆக தந்தை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் சீமந்தமாகிய வளைகாப்புச் செய்யும் முன்பே இவன் தந்தை இறந்து விடுவான் என் இவ்வுலகில் அவதரித்த ஜாதகனின் ஜாதகத்தைப் பார்த்து கூறுவாயாக.

பூவினான்குடையகோளும் புதனிலக்கினத்தின்கோளுந்
தாவியந்தந்தகெந்திரத் திற்றிரிகோணஞ்சாரி

லேவியகெந்திரராசிக் கினியலக்கினத்திலேக
வோவியமனையதாயா ருடன்கட்டையேறுவாளே. 16

4மிடத்தில் அதிபனும், புதன்இருந்த வீட்டதிபனும் அவரவர் வீட்டுக்கு கேந்திர திரிகோணம் 1,4,5,7,9,10 பெற்று இருக்கவும், கேந்திராதிபதிகள் லக்கினத்திலிருந்தும் பிறந்த ஜாதகரின் தாய், தந்தை இறந்தவுடன் தானும்அவருடன் உடன் கட்டை (கூடவே உயிர்துறத்தல்) ஏறுவாள்.

யுடன்பெறுநாலின்கோளு முற்றலக்கினத்தின்கோளுந்
திடம்படுமைந்தின்கோளுஞ் சேரக்கெந்திரத்ரிகோண
மடங்கலாந்திசையிலேனு மவகாரந்தன்னிலேனுந்
தடங்கணாயிவனைப்பெற்ற தாயார்க்குமரணந்தானே. 17

4மிடத்ததிபனும், லக்கினாதிபதியும், 5ம்இடத்ததிபதியும் ஆகிய இவர்கள் 1,4,5,7,9,10 இவற்றிலிருந்தால் இவர்களுடைய திசை, புத்தி காலங்களில் தாயார்க்கு மரணம் உண்டாகும்.

தாக்கியகதிர்வெண்டிங்கள் சார்ந்திடவைந்தினான்குந்
தீக்கெழுமரணந்தானாஞ் செய்யநான்குடையோனான்காய்
நோக்கியேயெழுமாதித்த னுடையசம்மந்தமாகிற்
பாக்கியமுடையதாய்க்குப் பலனனுமரணந்தானே. 18

சூரியன், சந்திரன் இவர்கள் 4,5 மிடத்திலிருந்தால் தாய்க்கு மரணமுண்டாம் 4மிடத்ததிபதி 4மிடத்திலிருக்கவும், இவருடன் சூரியன் கூடிடவுமானால் தாய்க்கு மரணமுண்டாம்.

பலன்களையுரைக்கத்தாய்க்குப் பகருநான்குடையோன்றிங்க
ணலன்றிசையபகாரங்க ணான்கினின்றோன்பார்த்தோன்
பிலன்றிசையபகாரத்திற் பெற்றதாய்மரணத்தாலே.
மலங்குவனிவன்றன்றந்தை மறைவலோர்சொன்னவாறே. 19

4மிடத்ததிபன் சந்திரன் இவர்களின் திசை, சளகாரங்களிலும் 4ல் நின்றவர், 4ஐப் பார்த்தவன், இவர்கலுமடள திசை அபகாரங்களிலும் தாய்இறந்து போவாள். இதனால் இவனது தந்தை மனவருத்த முடையவனாய் இருப்பார் என வேதநூல்களை வகுத்துத்தந்த ஞானிகளால் சொல்லப்பட்டனவாகும்.

மறையவன்கோபுராங்ச மாகவல்லதுநான்காக
விறையவனிரண்டுபன்னோன் றேகினுஞ்சுகவானென்க

துறையின்மானான்கோனோக்கச் சுபர்கண்மத்தியிலேதோன்றத்
தரையின்மான்மறையோனங்சஞ் சாரினுந்தவஞ்செய்வானே. 20

வியாழன் கோபுராங்கிஷம் பெற அல்லது 4மிடத்தில் இருந்தாலும் அல்லது 2,11ம் இடம் இருந்தாலும் சுகஜீவியாய் வாழ்வான். சனி, வியாழன் இவர்கள் ஒருவருக்கொருவர் பார்க்க, சுபர்களுடன் கூடி நின்றாலும் அல்லது சனி, வியாழன், சந்திரன், ஜென்ம லக்கினம் இவற்றில் இருந்தாலும் தவம் செய்பவனாவன்.

சாருங்கானான்கினிற்கோள் சார்ந்திடப்பிலவானாக
வூருங்காலிலக்கினத்தி னுற்றசம்பந்தமாக
நேருங்காற்பலன்கடன்னை நிலவரமாகச்சொல்லில்
வாருங்காற்குழவிபெந்து வகையிலேசுகமுண்டாமே. 21

4மிடத்ததிபதி பலம் பெற்று ஜென்ம லக்கினத்திலிருக்க புத்திரவர்க்கத்தாலும் பந்துக்களாலும் சுகமடைவன்.

வகையினினான்கோன்சந்திரன் மாபிலனாகவாழத்
தகையினிற்சாதகர்க்குச் சரீரந்தான்சுகமதாகும்
பகையொடுநீசவத்த மனங்களிற்பதியுமாகிற்
றுகையினிலிவன்சரீரஞ் சுகமில்லையென்றுசொல்லே. 22

நாலாமிடத்தின் அதிபதியும் சந்திரனும் வலுப்பெற்று இருக்கப் பிறந்த ஜாதகர்க்கு நோய் இலாது நல்ல சுக ஜீவனமுண்டாயிருக்குமாம். இவர்கள் பகை, நீச, அஸ்தமனம் பெற்று இருந்தால் உடம்பில் நோய் உண்டாம்.

சுகம்பெறும்வெள்ளியொன்பான் றன்னொடுதோய்ந்துநான்கின்
மிகப்பெறுபிலவானாகில் வெகுகாலம் போகமேவும்
பகர்ந்திடிலட்டமத்தோன் பனிர்ண்டிற்சுபரோடேகிற்
செகந்தனிலற்பகாலஞ் சேருவன்சுகங்கள்செப்பே. 23

சுக்கிரனும் ஒன்பதாம் இடத்ததிபனும் கூடி நாலாமிடத்தில் வலுப்பெற்று இருந்தால் சுக போக முடையவறாய் வெகுகாலம் இருப்பான்; இவர்கள் 8,12 மிடத்தில் சுபக்கிரகத்துடன் கூடி இருந்தால் சிலகாலமே சுகமுடையவன் ஆக இருப்பன் என்பதாம்.

செப்பியமறையோனான்காற் சேர்கின்றசுகத்தைச்செப்ப
வைப்பினின்மதிநான்காலே மாதாவின்பலனைமன்ன
வொப்பிலாப்புகர்நான்காலே யுரைக்கலாஞ்சுகந்தமாடை
பொற்பணிவாகனங்கள் புகலலாம்பூவின்மாதே. 24

4மிடத்தில் வியாழன் இருந்தால் நல்ல சுக ஜீவியாய் இருப்பான் 4மிடத்தில் சந்திரன் இருந்தால் தாயைப் பற்றிக் கூறவேண்டும். 4மிடத்தில் சுக்கிரன் இருந்தால் நறுமணப் பொருட்கள் ஆடை அணிகலன், வாகனம் இவற்றைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

புகலினான்குடையகோட்போய்ப் புண்ணியராசியேற
நிகரிலாவெள்ளிநோக்க நின்றிடக்கூடிமற்றப்
பகையொடுநீசர்நோக்கப் பாபர்களில்லையாகிற்
சுகமுளசுகந்தமாலைச் சுகியனாஞ்சொல்லுங்காலே. 25

4மிடத்ததிபதி சுபக்கிரகங்களின் ராசியில் இருக்க இவரைச் சுக்கிரன் பார்க்க, பகை நீசம் பாபக்கிரகத்தின் பார்வை சேர்க்கை இலாது இருந்தால் நல்ல சுகபோக ஜீவனம் உடையவனாய் இருப்பான்.

சொல்லியமதிமிக்காறேற் சுசிப்பதுநல்லவாடை
சல்வியராகுவோடே சார்வதுகிழிந்தவாடை
வெல்லியமறையோனோடேல் வெள்ளையுஞ்சிவப்புவெள்ளி
யொல்லையில்பலவண்ணங்க ளுயர்சநிகறுத்தவாடை. 26

சந்திரன் 4மிடத்திலிருக்க நல்ல ஆடைகளையணிபவனாய் இருப்பான் ராகு விருந்தால் கிழிந்த ஆடையும் வியாழனாயின் வெள்ளை சிகப்பு நிறமுடையவையும் ஆகிய பலவர்ணங்களை உடைய வஸ்திரங் களையும், சனி ஆனால் கருப்பு நிறமுடைய ஆடைகளையும் அணிவான்.

உயர்கின்றநான்கோன்வெள்ளி யிவர்மதிவர்க்கமோங்கத்
துயரன்றிவெள்ளிதங்க டுயபொன்னிவர்களோடே
வியனன்றியிவர்கணோக்க வெகுபகைநீசஞ்சேரிற்
பயனின்றிமாடுகன்று பசுக்கள்பொன்விற்கும்பாவாய். 27

நான்காமிடத்ததிபனும், சுக்கிரனும் சந்திரனுடைய வர்க்கம் (சாரம்) பெற்று இருந்தாலும் அல்லது 4மிடத்தான் சுக்கிரன், வியாழன் இவர்களுடன் கூடினாலும் அல்லது இவர்களால் பார்க்கப் பட்டாலும் இருக்கக் கூடிய கிரகமானது பகை நீச ராசிகளில் இருந்தால் ஒருபயனுமிலாது இவர்களுடைய மாடு கன்றுகாலிகள், பொன், பொருள் இவற்றை விற்றுவிடுவன்.

பாவிசைநாலின்கோடான் பண்புடைச்சுபக்கோளாக
வேவியசுபர்கணோக்க விறையவன்பிலவானாகத்
தாவியபெந்துவெல்லாஞ் சாதகன்றன்னைமிக்கா
யாவியைக்காவல்செய்யென் றநுசரிப்பார்களாமே. 28

4மிடத்ததிபதி சுபக் கிரகமாயிருந்து சுபர்களுடைய பார்வை பெற்று வியாழன் பலம் பெற்றிருக்கப் பிறந்த ஜாதகர் உடைய வார்த்தையினையும், இச்சாதகனையும் இவர்களது பெந்துக்கள் அனைவரும் அனுசரித்து மதித்து நடப்பார்களாம்.

அனுசரிக்கின்றநான்கோ னமையகெந்திரத்திரிகோண
மனுவடிக்கொண்டகோள் வைசேடியங்கிசங்களேற
வினைபடைக்கின்றகோட்கண் மேவநோக்கில்லையாகின்
மனுபதிக்குலத்தோன்பெந்து வகையெலாம்வணங்குமாதே. 29

4மிடத்ததிபதி 1,4,5,7,9,10 ஆகிய ஸ்தானங்களில் ஏதேனு மொன்றில் இருந்து இவ்வதிபதி வைசேடிகாங்கிஷம் பெற்று நிற்க (தசவர்க்க கணித முறையில் ஒன்று) பாபக்கிரகத்தால் பார்க்கப்படாதிருக்குமேயானால் இப்புவியில் பிறந்த ஜாதகர் தம்முடைய இனத்தவரால் போற்றி புகழப்படுபவராயும், வணக்கத்துக்குரியவருமா யிருப்பார்களாம்.

வணங்குமட்டமத்தின்கோட்போய் மருவிடிற்பாபரோடே
குணங்களிற்கபடியாகக் கோதிலாச்சுகவானாவ
னிணங்கியேயுச்சமாட்சி யிவையினிலட்டமத்தோனின்றா
லணங்கனாய்க்கபடிலாதா னதிகவானவனுமாமே. 30

8மிடத்தின் அதிபதி பாபக்கிரகத்துடன் சம்பந்தமுற்று இருந்தால் கபடகுணம் உள்ள சுகவானாய் இருப்பான். 8மிடத்ததிபன் உச்சம் ஆட்சியாகிய வீடுகளால் பலம் பெற்று இருந்தால் கபடமில்லாதவனும், சுகவானும் ஆவான்.

அதிகநான்குடையோன்மிக்கா யாய்ந்தநான்கிடமுமிக்காய்த்
துதிசெயுஞ்சுபர்கணோக்கத் தோன்றுசாதகருக்கெல்லா
நிதியொடுசெல்வமுண்டாய் நீதிநூன்முறையிற்சொன்ன
பதியினில்வாகனத்தின் பாக்கியமுண்டுபாவாய். 31

4மிடத்தின் அதிபதி சுய க்ஷேத்ரம் பெற இவரைச் சுபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்த ஜாதகர் நீதி (புதையல்) செல்வம், முதலியவனாகியன உடையவனாய் இருப்பான். இன்னான் வீட்டில் புதைபொருள் உண்டு என்று சொல்லவும்.

பாக்கிநாலின்கோட்போய்ப் பதிந்திடநான்கிற்றானே
தாக்கியபுதனுங்கூடத் தலந்தனைவெள்ளிபார்க்கத்
தூக்கியசுபக்கோளஙசந் தோன்றுமேற்சோர்விலாமற்
றேக்கியமதலைக்கெல்லாந் தீர்க்கவாகனங்கள்செப்பே. 32

4மிடத்தின் அதிபதி 4மிடத்திலிருக்க இவர் தன்னுடன் புதன் கூடிட சுக்கிரனால் பார்க்கப்பட்டு சுபக்கிரக அங்கிஷம் பெற்று இருக்குமேயானால் இப்புவியில் பிறந்த ஜாதகர்க்கு நல்ல வாகனங்கள் உண்டாயிருக்கும். (ஆடு, மாடு, குதிரை, யானை, ஒட்டை., கார் முதலியனவாகும்)

தீர்க்கவான்பதியிலக்கஞ் சிறந்தசம்மந்தியாக
வாக்குநான்குடையோனந்த மாமதியதனிற்சேர
நீர்க்குடமுலையினாளே நிலைத்துவாகனத்தைச்சொல்லிற்
கூர்க்குங்காலிவனுக்கெல்லாங் குதிரைவாகனத்தைக்கூறே. 33

2, 4 மிடத்ததிபதிகள் சந்திரனுடன் கூடியிருக்க - நிலையான குதிரைகளை உடையவனாய் இருப்பான்.

குதிகொளுமதியிரண்டின் கூறியநான்கிலேனு
மதிசுபரோடுகூட வதுசுபராசியாக
விதிவழிதெரிந்தமேலோர் விதித்ததுவினவக்கோளாற்
பதுமதிநுதலினாளே புரவிவாகனமாம்பாவாய். 34

சந்திரன் 2 அல்லது 4 மிடத்திலிருக்க இவருடன் சுபர் கூடிடவும், இது சுபர்களுடைய வீடாயிருக்குமேயானால் குதிரை வாகனம் உண்டாயிருக்கும்..

புரவலர்நாலின்கோட்போய்ப் புகழ்மதிசனனக்கோளை
நிரவிலக்கினத்தேநிற்கி னீண்டபல்லக்குவாழ்வாந்
தரணிநான்குடையோன்வெள்ளி தனித்தலக்கினத்தின்கோளு
நரரிலக்கினத்தேநின்றா னண்ணியபல்லக்காமே. 35

நான்காம் இடத்ததிபதி சந்திரன், ஜென்மலக்கினாதிபதி இவர் களுடன் கூடி ஜென்ம லக்கினத்தில் இருந்தால் பெரிய பல்லக்கு உண்டாம். (கார்) 4ம் இடத்தின் அதிபனும் சுக்கிரனும், லக்கினாதிபனும் கூடி லக்கினத்தில் இருந்தால் பல்லக்கு உண்டாம்.

நண்ணியவிந்துவெள்ளி நான்மறையோனுங்கூடி
யெண்ணியநான்கோன்கெந்திர மேறப்பல்லக்கிலேனும்
புண்ணியமதிபார்ப்பானைப் பொருந்தவல்லதுபொன்னோக்கப்
பண்ணியபல்லக்காடை பணிதிகளிவன்பண்பாமே. 36

சந்திரன், சுக்கிரன், வியாழன், 4மிடத்தின்அதிபன் இவர்கள் கூடி 1,4,7,10 ஆகிய ஸ்தானங்களில் ஏதேனுமொன்றில் இருந்து பிறந்தால்

பல்லக்குண்டாகும். சந்திரன் வியாழனுடன் கூட அல்லது பார்க்கப் பிறந்த ஜாதகர்க்கு பல்லக்கு, ஆடை, அணிகலன் முதலியன உண்டாயிருக்கும்.

பணிசெய்யுவெள்ளியிந்து பகருநான்குடையோனொன்றோ
ணணிசிறந்ததொன்றாய்க்கூடி லவனியிற்பல்லக்கேறுங்
கெணிதநூன்மறையோனான்கோன் கிளர்மதிபிருகுங்கூடித்
துணியுமேல்கெந்திரகோணஞ் சுகிப்பதுபல்லக்காமே. 37

சுக்கிரன், சந்திரன், நாலாமிடத்ததிபன், லக்கினாதிபதி இவர்கள் ஒன்றாய்க் கூடி ஒரு ராசியில் இருந்தால் பல்லக்கில் ஏறுபவனாவன். வியாழனும், 4மிடத்ததிபனும், சந்திரனும், சுக்கிரனும் கூடிக் கேந்திர, திரிகோணம் பெற்று இருந்தால் பல்லக்கு உண்டாம்.

சுகிபெறுநான்கோன்பின்னைத் தோயுமேற்பல்லக்கேறு
மகிமைநான்குடையகோட்போய் மற்றொருசுபரைச்சார்ந்து
மிகுதிநான்கதிலேநின்றால் வெண்குடைசாமரங்க
டகுதியாயிவனைச்சூழச் சார்ந்தபல்லக்குமாமே. 38

மேற்சொன்ன கிரகங்கள் கூடி 4மிடத்தின் அதிபன் இருந்த வீட்டிற்குப் 12ல் இருந்தாலும் பல்லக்கு உண்டாம். 4மிடத்ததிபதி சுபக்கிரகமாயிருந்து, மற்றொரு சுபரைக் கூடி 4மிடத்தில் இருந்தால் வெண்சாமரம், குடை, படை சூழம் பல்லக்கு உடையவனாவன்.

சார்ந்தநான்குடையோன் கெந்திரத்தானமாயந்தராசிக்
கேர்ந்தவனிலக்கினத்தி லிருக்கவாகனத்திலேறு
மார்ந்தபத்துடையோன்பன்னோன் றாகவன்னவன்பத்தாகச்
சேர்ந்திடப்பணிகளாடைச் சிறந்தபல்லக்குமாமே. 39

4மிடத்தின் அதிபதி 1,4,7,10 ஆகிய இராசியில் ஏதேனுமொன்றில் இருந்து, இவ்வதிபதி ஜென்ம லக்கினத்தில் இருந்தால் வாகன யோகம் உண்டாகும். 10மிடத்தின் அதிபதி 11ல் இருக்க இவ்வதிபதி 10ல் இருக்க (பரிவர்த்தனை) பணியாட்களும், ஆடை, அணிகளும், பல்லக்கும் உண்டாம்.

சிறந்தநான்குடையகோட்போய்ச் சேரப்பன்னொன்றின்மீது
பறந்துநான்கினிலேநிற்கப் பன்னொன்றிற்செவ்வாய்சேர
நிறந்தருசெவ்வாயானோ னிலையில்ராசிக்கானாலும்
பிறந்தசேயுலகையாளும் பின்னையோவில்லைமாதே. 40

நாலாமிடத்ததிபதி 11மிடத்தில் இருக்க இவ்வதிபதி 4ல் இருக்க (பரிவத்தனை) செவ்வாயும் சேரவும், அல்லது ஆட்சி பெற்றாலும் இவ்வுலகில் பிறந்த ஜாதகர் இவ்வுலகை ஆளக்கூடியவனாய் மன்னனாவன், இவனுக்கு ஒப்பானவர் வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்பதாகும்.

பின்னையொப்பில்லாநான்கோன் பேசினான்கதிலேநிற்கப்
பொன்னவனுடனுமாட்சி துடங்கிக்கெந்திரத்ரிகோணந்
தன்னிலேயிருக்கவெய்ய சாமரைகுடைபல்லக்குப்
பொன்னொடுபெந்துவீடு பூமியும்புரக்கும்பாவாய். 41

4மிடத்ததிபதி 4ல் இருக்கவும், வியாழனுடன் கூடி ஆட்சி உச்சம், கேந்திரம், திரிகோணம் முதலியவற்றில் இருக்கவும் பிறந்த ஜாதகர்க்கு பெந்துக்களும் வீடு, பூமி, வெண்சாமரம், குடை, பல்லக்கு முதலியன உண்டாயிருக்கும்.

பூவினிற்புதன்போயுச்சம் பொருந்தியராசியாக
மேவுமேகெந்திரகோணம் வித்தைவாகனசம்பத்தாங்
கோவுடனட்பாய்நல்ல குணமொடுங்கீர்த்திவானாய்க்
காவியங்கமலக்கண்ணாய் களிப்பொடுசெல்வங்காணே. 42

புதன் உச்சவீட்டிலிருக்க, (கன்னியில்) இது 1,4,5,7,9,10 ஆம் வீடாக இருந்து பிறந்த ஜாதகர்க்கு வித்தை வாகனம், சம்பத்து முதலியனவுடன், அரசர்களிடம் நட்புக்கொள்பவனாய் நல்ல குணமுளவனாய், கீர்த்திமானாய் சந்தோஷம், செல்வம் முதலியன உடையவனுமாயிருப்பான்.

களிப்புடனாலின்கோளுங் கருதுலக்கினத்தின்கோளும்
விழிப்பொடுதங்கடங்கள் வீட்டிலேமேவவொன்பா
னழுத்தியகோளுமைந்தி லமைகின்றகோளினான்குஞ்
சுழிப்பொடுசுபர்வகங்கற்டோன்று மேற்பலன்சொல்வாயே. 43

4மிடத்ததிபனும் லக்கினாதிபதியும் அவரவர்வீட்டில் சொச்சேத்ரம் பெற்று இருக்க, 9,5,4,மிடத்தில் இருந்த கிரகத்தாலும் ஒருவருடைய குணபாவங்களைக் கூறவேண்டு மென்பதாம்.

தோன்றுமோர்பிலன்களாகச் சோர்விலாதிலக்கினத்தி
லூன்றுசம்மந்தியாக வொருவருக்கொருவர்பார்க்கப்
போன்றதோருலகமாள்கை பொருள்சுகந்தீர்க்கவாயுண்
மேன்றகுஞ்சிவிகைகாலாண் மிகுதியாய்வேந்தனாமே. 44

மேற் சொன்ன கிரகங்களானவை லக்கினத்தில் இருந்தாலும் அல்லது ஒருவருக்கொருவர் பார்த்தாலும் இப்பரந்த உலகினை ஆளக் கூடியவனாம். பொன், பொருள், சுகம், ஆயுள் தீர்க்கம், ஒட்டகம், காலாட்படை ஆகியன மிகுதியாய் உடையவனாய் மன்னனாய் வாழ்வன்.

வேந்தன்முன்சொன்னோர்தம்மின் மிக்கதுமுக்கோளாகிற்
காந்திசேர்விசித்திரத்தின் கற்பணிவாகனங்க
டோய்ந்திடுமிரண்டுமிக்கேற் சூழ்திசையபகாரத்திற்
சேர்ந்திடுஞ்சுகங்களென்றார் தெளிந்தவல்லவர்கடானே. 45

முன்சொன்ன கிரகங்களில் 3 கிரகங்கள் வலிமைபெற்று இருக்குமேயாமாகில் நல்ல ஒளியினை உடைய விசித்திரமான கற்களினால் இழைக்கப்பட்ட (நவரத்தினத்தினால் செய்யப்பட்ட) பல்லக்கு உண்டாயிருக்கும், இதுவும் அவ்வக்கிரகத்தின் திசா புத்தி காலத்தில் சேரும் என்பதாம்.

தெளிந்தநான்குடையோன்மிக்காய்ச்செயநான்குபன்னொன்றேழும்
பொழிந்திடும்பிலமதாகப் புகல்கின்றராசிக்கோளு
மமுந்தியலக்கினத்தா னாதிசம்மந்தியாக
மொழிந்தகோட்டிசைகடன்னின் மொய்த்தவாகனமுண்டாமே. 46

4மிடத்ததிபதி 4,11,7,மிடத்தில் பலம் பெற்று இருக்கவும் இவ்வதிபன் லக்கினத்தில் இருக்க இவருடைய திசைகாலம் வரும் போது வாகன யோகம் உண்டாகும்.

மொய்த்தநான்குடையோனொன்பான்மொழிந்தபன்னொறோன்வாக்கோ
னுய்த்தவிந்நான்குபேரு மிலக்நசம்மந்தமாகச்
செய்த்திசையபகாரத்திற் றிரவியலாபத்தோடு
மைத்தடங்கண்ணினாளே வருமிராச்சியத்தில்வாழ்வே. 47

4,9,11,2 இவ்விடத்தின் அதிபர்கள் கூடி லக்கினத்தில் இருந்தால் இவர்களுடைய திசா, புத்தி காலங்கள் ஜாதகர்க்கு வருமேயானால் திரவியலாபம் உண்டாகி நல்வாழ்வுண்டாகும்.

வருமென்றகோட்கணான்கு மாபிலவான்களாக
விருமென்றுநான்குபேரு மிலக்நசம்மந்தமாகத்
தருமென்றுசகலபாக்யஞ் சார்பிலவீனமாகி
லுருகின்றதுக்கிப்பாப ரொடுசுபர்சமனென்றோதே. 48

மேற்சொன்ன 4,9,11,2 மிடத்ததிபதிகள் பலம் பெற்று இருக்க இது ஜன்மலக்கினமாக இருந்தால் சகல பாக்கியம் உண்டு மாறாக சுபர்,

பாபரொடு கூடியிருந்தால் நடுத்தரமான செல்வம் உடையவராவர்.

ஓதியநான்கோனீச ரொடுபகைதன்னைச்சார்ந்து
பாதியாறெட்டீராறிற் பதியவேநால்வர்பார்க்கத்
தீதுவாகனங்கள்சேரு மல்லதுசிணத்தின்போது
போதுறுவாகனங்கள் புவியிலென்றுரைப்பர்பூவாய். 49

நாலாமிடத்ததிபதி நீசம், பகை ராசிகளிலிருக்க. இவ்வீடா. து 6,8,12,மிடமாக அமைந்து சுபக்கிரகத்தால் பர்க்கப்படுமேயனாலும் தீமையுண்டாக்கக் கூடிய வாகனங்கள் ஏற்படும் அல்லது தீடிரென்று வாகனம் உண்டாம்.

புவியிலொன்பதினின்றோனும் பொலிந்தபத்தினினின்றோனுங்
குவியிலக்கினத்தினின்ற கோட்களுஞ்சுபர்களாகி
னவிலிலுச்சங்களாக லக்கினாதிபனால்பார்க்கச்
சிவிகையும்பொன்னும்வாழ்வுஞ் சிறப்பொடுசேருந்தானே. 50

9மிடத்தில் இருந்த கிரகமும், 10மிடத்தில் இருந்த கிரகமும் ஜென்ம லக்கினத்தில் இருந்துள்ள கிரகமும் சுபக்கிரகங்களாகி உச்சம் பெற்று ஜென்ம லக்கினாதிபதியால் பார்க்கப்படுமேயானால் பல்லக்கும், பொன்னும், நல் வாழ்வும், சீர்சிறப்பும் இவனுக்கு வந்து சேரும் என்பதாம்.

சேர்கின்றமறையோனேனுஞ் சிறந்தநான்குடையோனேனுங்
கூர்கின்றசுபர்களோடே கூடியொன்பதிலேநிற்கச்
சார்கின்றராசிமிக்கேல் சகலபாக்கியங்களோடே
யூர்கின்றசிவிகைவாழ்வு முண்டென்பர்வெகுநாளைக்கே. 51

வியாழனோ, 4மிடத்ததிபனோ சுபருடன் கூடி 9ம் இடத்தில் நி..க சகல பாக்கியமும், பல்லக்கும், சுகவாழ்வும் நீண்டநாள் உண்டாயிருக்குமாம். (குறையாமல் இருக்கும்)

உண்டென்றவிரண்டுகோளு முறுதுயர்பாபரோடே
திண்டென்றவாறிலெட்டிற் சிறந்தபன்னிரண்டிற்சேரப்
பண்டென்றநீசவத்த மனம்பகைதன்னிற்பாயக்
கண்டென்றமொழியினாளே கனயோகமில்லைகாணே. 52

4,9மிடத்ததிபர்கள் பாபக்கிரகத்துடன் கூடி 6,8,12ல் இருக்க இவ்வீடு இவர்களுக்கு நீச அஸ்த்தமனமாப்பும், பகைபெற்றும் இருக்கு மேயானால் சிறந்த யோகம் இல்லை என்று சொல்லவும்.

கனகனுநாலின்கோளுங் கனபிலவான்களாக
வினவியவாட்சிதன்னின் மேவியேநிற்குமாகிற்
புனமயிலனையநல்ல பூவையேபுகலக்கேளாய்த்
தனமொடுபாக்யவானாய்த் தண்டிகையேறுவானே. 53

வியாழனும், 4மிடத்ததிபனும் ஆட்சிபெற்று பலம் பெற்றிருக்க தனபிராப்தி உடையவனாய் பாக்கியவானாய் பல்லக்கு உடையவனுமாய் இருப்பான்.

தண்டியநாலின்கோளுந் தனித்தவொன்பானின்கோளும்
பண்டியிற்பதினொன்றாகப் பதினொன்றைப்பிலத்துநோக்கத்
தெண்டிரைப்புவியின்மிக்கச் செல்வமுஞ்சிறப்புமிக்கக்
கொண்டிவன்சகலபாக்யக் குறியுளான்கூறுங்காலே. 54

4,9மிடத்ததிபர்கள் 11மிடத்தில் பலம் பெற்று இருந்தாலும் அல்லது 11ஐப் பார்த்தாலும் இப்புவியில் அவதரித்த ஜாதகர்க்கு செல்வம், புகழ், முதலிய சகலபாக்கியங்களும் வந்து சேரும் என்பதாம்.

குறித்தநான்குடையகோளுங் கொத்தவொன்பானின்கோளுங்
குறித்தபன்னொன்றிலேற வல்லதுநான்கைநோக்கப்
பிறித்தவாகனசம்பத்தும் பேசியசெல்வத்தோடே
நெறித்தராசாக்கள்பேறு நிலவரமாகுமென்னே. 55

4,9மிடத்ததிபதிகள் 11மிடத்திலிருந்தாலும் அல்லது 4மிட்த்தைப் பார்த்தாலும் வாகனம், செல்வம் முதலியன உடையவனாய் அரசனுக்குப் சமானமாய் வாழ்வன்.

நிலமெனுமொன்பான்கேளு நித்தியநாலின்கோளுந்
தலமுடையிவரிலக்க சம்மந்தமாகநிற்கக்
குலமுடைமறையோன்சென்ம ராசியைக்குறித்துநோக்கப்
பலனிவர்க்கரசர்பேறும் பணிகளும்பவிசும்பாவாய். 56

4,9மிடத்ததிபர்கள் இலக்கினாதி சம்பந்தப்பட்டு நிற்கவும், வியாழன் ஜன்ன ராசியைப் பார்க்கவும் பிறந்தவன் அரசர்க்கு சமமுடையவனாய் அடிமையாட்களுடன் வாழ்வான்.

பவிசுடையொன்பானான்கோன் பாக்கியசுபரைக்கூடிற்
புவியினிற்பிலவான்சேனா பதியெனப்புகலலாகு
நவிலுமொன்பதிலேநின்றோ னான்கினுக்குடையோன்றானுங்
கவிசெய்தபுகர்பொன்னோடே கலக்குமேற்கருதக்கேளே. 57

4,9மிடத்ததிபதிகள் சுபக்கிரகங்களைக் கூடி இருந்தால் சேனாதிபதி ஆவன். 9மிடத்தில் நின்ற கிரகமும், 4ம் இடத்துக்குரியவனும் ஆகிய கிரகங்கள் சுக்கிரன், வியாழன் ஆகி இருந்தால் மேற் சொன்ன பலனாம்.

கலந்தவர்சுபர்வீடாகக் காரணவொன்பான்கெந்திரத்
தலந்திரிகோணஞ்சாரச் சார்ந்தசாதகர்க்குநன்மை
துலங்கியகுதிரையானை தூய்நரவாகனங்க
ளிலங்கியதேசமெல்லா மிவன்குடைக்கீழென்பாரே. 58

9மிடத்துக்குடைய கிரகமானது 1,4,5,7,9,10 ஆகிய ஸ்தானங்களில் ஏதேனுமொன்றில் பலம் பெற்று இருந்தால் குதிரை, யானை நரவாகனம் (ஆடு,மாடு) முதலியன உடையவனாய் இப்பரந்த பூமியை இவன்ஆட்சி செய்ய வல்லவனாய் மன்னனாயிருப்பன்.

இவனிற்கோளாறுமூன்று மீட்டியவொன்பான்சென்மம்
புவனத்தீராரிலுள்ள புண்ணியரெல்லாங்கூடிக்
கவனித்துவெள்ளியோடே கலந்திடச்சங்கைகாணு
மவனிக்குவேந்தனாமென்ற மைத்தனர்தமிழையாய்ந்தோர். 59

6,3,9,1,12 க்குடையவர்கள் சுபக்கிரகமாயிருந்து இவர்கள் கூடிச் சுக்கிரனுடன் சம்பந்தப்பட்டு இருந்தால் இப்பூமியில் அரசனாய் இருப்பான்எனத் தமிழ் நூல் ஆய்ந்த முன்னோர்கள் கூறி உள்ளனர்.

அமைத்தநான்குடையோனேனு மந்தணன்புகரானாலு
மிமைத்தவர்பிலவானாக விதித்தவொன்பதிலேநிற்கக்
குமைத்தவொன்பதின்கோட்போய்நற் கோணகெந்திரங்களேறச்
சமைத்தவாகனமனேகந் தனகனவானாஞ்சாற்றே. 60

4மிடத்ததிபதி வியாழன். சுக்கிரனாயிருந்து பலம் பெற்று 3மிடத்திலிருக்க. இவ்வதிபதி 1,4,5,7,9,10 மிடத்தில் ஏதேனு மொன்றில் இருந்தால் அநேக வாகனாதிகள் உடையவனாய் நிரம்ப தனபாக்கிய முடையவனுமாய் இருப்பான் என்று கூறுவாயாக.

தனக்குநான்குடையோன்பார்ப்பான் சாற்றியபுகரொன்பானுஞ்
சினக்குமொன்பதுநான்கோனுந் திரிகோணகெந்திரமேனுங்
கனக்கவேகுதிரையானை கட்டியகுதிரைகாலாள்
புனக்கிளிமொழியினாளே புவிக்கெலாம்வேந்தனாமே. 61

4மிடத்ததிபதி, வியாழன், சுக்கிரன், 9மாதி ஆகிய இவர்களும் கூடி 1,4,5,7,9,10 ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் குதிரைப்படை யானைப்படை, காலாட்படை முதலியன உடையவனாய் மன்னனாய் இருப்பான்.

புவியிலக்கினத்தின்மாலாய்ப் பொருந்துமொன்பதிலேயுச்ச
யிவனிரண்டுடையோன்கெந்திர மேறியேநிற்குமாகிற்
செவியினிலுரைத்தசொல்கேள் செகமெலாமவனேயாளு
மவனியிவனைச்சிம்மா சனபதியாமென்பாரே. 62

ஜென்மலக்கினத்திற்கு 9மிடத்தில் புதன் உச்சம் பெற்று இருக்க. இரண்டாமிடத்ததிபன் 1,4,7,10 மிடத்தில் இருக்க, இப்புவிக்கு அரசனாகிச் சிம்மாசன மேறுவான் என்பதாம்.

ஆமெனச்சுபர்கள்கெந்திர மாகவொன்பதனைநோக்கத்
தேமென்றவாக்கோன்கெந்திரஞ் சேர்ந்திடச்சுபர்களோடே
போமென்றவாக்கிலுச்சம் பொருந்தியகிரகம்பூண
நோமென்றுபுவியிற்சிம்மா சனங்களைநோக்குவாரே. 63

சுபக்கிரகங்கள கேந்திரம்பெற. (1,4,7,10) 9ம் இடத்தைப் பார்க்கவும், இரண்டாமிடத்ததிபதி கேந்திரம் பெற்று சுபக்கிரகங்களுடன் கூடி இருக்கவும், வாக்காதிபதி உச்சம் பெற்று இரண்டிலிருக்கவும் பிறந்த ஜாதகர் அழகிய சிம்மாசன முடையவராய் மன்னனாய் இருப்பார்களாம்.

நோக்கிலக்கினக்கோணான்கோனுகருமொன்பதின்கோண்மூன்றும்
பாக்கியத்ததிபனாகப் பத்துளோன்பதியவொன்றி
லாக்கியசுபர்களெல்லா மவனிலக்கினத்தைநோக்கி
னீக்கியபலனைச்சிம்மா சனத்துக்குநிகர்சொல்வாரே. 64

ஜென்மலக்கினத்தின் அதிபதியும், 4மிடத்தானும், 9ம் இடத்தானும், ஆகிய மூவரும் 9மிடத்திலிருக்கவும், 10 மிடத்தின் அதிபதி லக்கினத்தில் இருக்கவும் ஜென்ம லக்கினத்தை சுபர் கிரகமானது பார்க்கப்பிறந்த ஜாதகர் சிம்மாசனத்தை உடையவராய் அரசனாய் இருப்பர்.

நிகரிலாப்பத்தின்கோளு நீண்டலக்கினத்தின்கோளும்
பகருமொன்பதிலுள்ளோனும் பத்திலேபதியப்பத்தோன்
புகழிலக்கினசம்மந்தம் பொருந்தநின்றாலும்பூவிற்
சுகியனாமிவர்க்குச்சிம்மா சனமெனச்சொல்லலாமே. 65

10மிடத்ததிபதியும், ஜன்மலக்கினாதிபனும், 9மிடத்தானும் 10மிடத்திலிருக்கவும், இவ்வதிபதி ஜென்மலக்கினத்தில் இருக்கவும் சுக போகமுடையவனாய் மன்னனாவன்.

சொல்லியமறையோன்வெள்ளி தோற்றியவொன்பதாங்கோ
ளெல்லையாங்கெந்திரகோண மிவற்றிலேநிற்குமாகில்
வல்லியேயிவனநேக வாகனர்க்கிசமானாக
வொல்லையின்மண்டலாதி பதியெனவுரைக்கலாமே. 66

வியாழன், சுக்கிரன், 9மிடத்தின் அதிபதி இவர்கள் 1,4,5,7,9,10 இவற்றில் இருக்கின் பலவாகனங்களுக்கு (ஆடு, மாடு, குதிரை, யானை, சர்க்கஸ் கார் லாரி) அதிபனாகி இப்புவியில் மண்டலங்களுக்கு (தேசம்) அதிபதியாய் விளங்குவான்.

உரைக்கநான்குடையோன்பத்தி லுயர்பிலவானாய்நிற்க
நிரைத்தபத்துடையோனோக்க நின்றிடக்கூடியேனுங்
கனத்தசிம்மாசனத்திற் கனபவுசாகுமென்க
துரைத்திசையபகாரங்க டுடங்குமுன்சொன்னதாமே. 67

4மிடத்ததிபதி 10மிடத்தில் வலுப்பெற்று இருக்க இவரைப் 10மிடத்ததிபதி பார்க்கவும் அல்லது நின்றாலும் கூடினாலும் நல்ல அழகிய சிம்மாசனத்தில் சகல சுக போகபாக்கியம் உடையவனாய் இவ்வதிபன் திசா, புத்தி காலம் தொடங்கு முன் த்ரும் என்பதாம்.

சொன்னகோளொன்பானானோன் றோன்றிடநான்கின்மீது
பின்னமில்லாதநான்கோன் பிறிந்தலக்கினத்திற்போக
வன்னதுசுபர்வீடாக வதிசுகவானுமாகி
யின்னல்செய்சத்துருக்க ளிருநிதியிவனுக்காமே. 68

9மிடத்ததிபன் 4மிடத்திலிருக்க நாலாமிடத்தான் லக்கினத்தில் இருக்கவும், இவ்வீடு சுபர்களுடைய வீடாயிருந்தால் சகல சுக போக முடையவனாய் துன்பத்தைத் தருகின்ற எதிரிகளுடைய செல்வங்களைத் தன்பால் சேர்த்துக் கொள்ள வல்லவனாவன்.

இருநிதியிவனைச்சேரு மேழின்கோளொன்பதாகத்
தருசுபர்நோக்கமின்றே றனம்பொருளற்பகாலங்
கருதியித்திரியினாலே கனபொருளிவனைச்சேரும்
பெருகியசுகமாமென்று முரைக்கலாம்பேதைமாதே. 69

7மிடத்ததிபன், 9மிடத்ததிபன் இவர்களைச் சுபக்கிரகங்களால் பார்க்கப் படாதிருந்தால் செல்வம் சிறிது காலமே உண்டாயிருக்கும் சுபக்கிரகத்தால் பார்க்கப்படுமேயானால் பெண்ணினால் பெரும் பொருள் இச்சாதகனை வந்தடையும் என்று கூறுவாயாக.

பேதையேநாலின்கோட்போய்ப் பெருகியசுபனுஞ்சேரக்
காதையாந்திசையிலேனுங் கனியபகாரத்தேனுங்
கோதையேசுகமுண்டென்பர் கூடுதல்பாபராகித்
தீதையாஞ்சுகங்களில்லைத் திசையில்லாச்சுகமாஞ்செப்பே. 70

4மிடத்துடையவனுடன் சுபக்கிரகமானது சேர்ந்தால் இவரது தசா, புத்தி காலங்களில் சுகம் உண்டாகும். மாறாகப் பாபக்கிரகமானது சம்பந்தமுற்றால் நல்ல சுகம் இல்லாத நிலையினை இவரது திசாபுத்தி காலங்களில் அடைவான்.

திசையிலாநான்கின்ராசி தீதன்றிச்சுபர்வல்லாரேல்
வசையிலாநாலின்கோட்போய் வாழ்ந்திடச்சுபர்களோடே
யிசையவேசேயுங்கூடி லிவன்வெகுசேத்ரந்தேடி
யசைவிலாச்சுவாத்தியங்க ளடிமையாளவன்பண்பாமே. 71

4மிடத்தில் சுபக்கிரகமிருக்க இவ்வதிபதி சுபருடன் கூடிட் பூமிக்கு காரகனாகிய செவ்வாயும் சம்பந்த முற்று இருந்தால் வெகு பூமிக்கு அதிபதியாயும். அடிமையாட்கள் உடையவனாயும் இனிது வாழ்வன்.

அடிமைநான்குடையோனீச வத்தமனங்களாகச்
சுடுமெனக்காலாக்னிசூலாம் துற்கட்சிஆகத்தோன்றி
கெடுமெனப்பாபர்கூடிற் கெடுப்பர்பொன்கீர்த்தியாக
நடுமெனச்சேத்ரசுவாத்யம் நாசத்தையடையுமாதே. 72

4மிடத்ததிபன் நீசம், அஸ்தமனம் அடைந்து இருந்தால் எதிரிளால் தொல்லையும், சூலைரோகமும், கெட்ட சகவாசங்களும் உண்டாம், இவருடன் பாபக்கிரகமானது கூடினால் பொன் பொருளையும் இருப்பிடத்தையும் அழிப்பவனாய் இருப்பான்.

நாசமில்லாதலக்கி னாதிபனிருந்தராசிக்
கேசலுண்டாகநாலா மிராசிக்கோள்சத்ருவாகி
னேசமில்லாதான்போன நெடுந்திசையபகாரத்திற்
பூசலுண்டாகிவிடும் பூமியுநாசம்பூவாய் 73

லக்கினாதிபதி இருந்த ராசிக்கு நாலாம் இராசிக்குடைய கிரகமானது லக்கினாதிபதிக்கு சத்துருக் (பகை) கிரகமாய் இருந்தால் இவருடைய திடை புத்தி காலங்களில் சண்டை சச்சரவு உண்டாகி பூமியும், வீடும் நாசம் அடைந்து போகும்.

பூமிக்குண்மிக்கநான்கோன் புரிதிசையபகாரத்தி
னேமித்தபெந்துசாவார் நீலன்சேய்குளிகன்கூடிற்
சேமித்தநான்கோனோடே சேர்ந்திடத்தீமையெல்லா
மாமிக்கவனர்த்தமெல்லா மவனுக்கேயேதுவாமே. 74

மேலும் 4மிடத்தின் அதிபதி திசை, அபகாரம் வரும் போது சுற்றத்தார் இறந்து போவர். சனி, செவ்வாய், மாந்தி ஆகிய இவர்கள் 4மிடத்தானோடு கூடி இருந்தால் சகலதுன்பங்களும், அபவாதங்களும் இச்சாதகனையே வந்தடையும்.

அவனுக்கும்வாக்குவீட்டோ னந்தநான்குடையோனோடே
யிவனுக்கொன்பதிலேநிற்க விதுசுபராசியாகக்
கவனித்தசுபருங்கூடக் கடந்தவன்னொன்றைவாக்கோன்
மவுனுற்றுநான்கிலேற வருநிட்சேபங்கண்மாதே. 75

ஜன்மலக்கினத்துக்கு 2மிடத்தின் அதிபதியானவர் 4க்குடைய கிரகத்துடன் கூடி 9மிடத்தில் இருக்கவும் இவ்வீடு சுபக்கிரகத்தான் ராசியாக இருந்து சுபரால் சேர்க்கை பெற்று இருக்கவும். 2மிடத்தின் அதிபதியும் லக்கினாதிபதியும் 4மிடத்தில் இருக்கப் பிறந்த ஜாதகர்க்கு பொன் பொருள் புதையல் மூலம் சேரும்.

வருமென்பர்வாக்குநாதன் மகிமையாஞ்சுபரைச்சேரிற்
றிருமென்பர்சுபர்வீடேற விவனிட்சேபங்கைக்கொள்வன்
பொருமென்றபதினோராங்கோள் புண்ணியருடனேகூடித்
திருவென்றநான்கிலேறச் சேருநிட்சேபந்தானே. 76

இரண்டாமிடத்தின் அதிபதி சுபக்கிரகத்துடன் கூடிச் சுபர் வீட்டிலிருக்க புதயலினால் தனம் உண்டாகும். 11மிடத்ததிபன் சுபக்கிரகத்துடன் கூடி நாலாமிடத்திலிருந்தாலும் புதையல் தனம் உண்டாகும்.

சேர்கின்றவாக்கின்கோளுஞ் சிறந்தபன்னிரண்டின்கோளுங்
கூர்கின்றநாவின்கோளுங் கொடியபாபர்களைச்சேர்ந்து
நேர்கின்றதலமாறெட்டு நிறைந்தபன்னிரண்டினிற்க
மார்கொண்டமுலையினாளே மனைகள்போய்நாசமாமே. 77

இரண்டிற்குடையவனும் 11க்குடையவனும் 4மிடத்தானும் பாபக்கிரகத்துடன் கூடி 6,8,12ல் மறைவு பெற்று இருக்கப் பிறந்த ஜாதகர்க்கு வீடு, மண், மனைகள் முதலியன அழிந்து போகும்.

மனையெனுநான்கினீச வத்தமனங்களாக
வினையெனுங்கிரகஞ்சார வினாவதுகிணற்றிலென்க
முனையெனுநான்கிற்பாபர் மொய்த்திடப்பாபியாகு
மிணையதிற்சநிபோய்நிற்கி லிவன்சுகமில்லான்றானே. 78

4மிடத்ததிபதி பாபருடன் கூடி நீச அஸ்தமனம் பெற்று இருக்கவும், 4மிடத்தில் பாபிகள் இருக்கவும், சனி நிற்கவும், பிறந்த ஜாதகன் ஒரு சுகமும் இல்லாதவனாவன்.

இல்லெனுநான்கின்கோட்போ யிசைந்தபன்னிரண்டிலேறச்
சொல்லுவரன்னியதேசஞ் சுக்ரதன்னுடநட்பேனு
மல்லதுநாலின்கோட்போ யாறெட்டிலமையுமாகிற்
செல்லுவானவன்றாயாதி தேடியமனையிற்றேனே. 79

4மிடத்ததிபதி 12ல் இருக்க அயல் தேசம் செல்லுவர் 4மிடத்ததிபதி சுக்கிரன் நட்புக் கிரகமாயிருந்தாலும் அல்லது 6,8ல் இருந்தால் அச்சாதகன் தாய்வழி மனையில் (இடத்தில்) குடியிருப்பவனாம்.

தேடியபன்னிரண்டோன் சிறந்தவாக்குடையோனான்கோன்
கூடியமூன்றாறெட்டிற் கொடியபன்னிரண்டுங்கூடி
யோடியதிசையிலேனு முறுவபகாரத்தேனு
மேடையாயிவனிருந்த வீட்டைவிட்டேகுவானே. 80

12, 2, 4மிடத்ததிபதிகள் 3,6,8,12 மிடத்தில் இருந்தால் இவரது திசை அபகாரத்தில் இவன் இருக்கம் வீட்டை இழந்து வெளியேறி விடுவான்.

வீட்டுக்கோள்கெந்திரகோண மேவியேபிலவானாகக்
கூட்டுக்கோளதனையெண்ணிக் கொண்டிவன்குடியிருப்பாய்
நாட்டுமவ்வீட்டைச்சொல்ல நாலின்கோட்பனிரண்டாகிற்
கேட்டினாற்பிரிந்தகூறை கிட்டியவீடதாமே. 81

4மிடத்ததிபதி 1, 4, 5, 7, 9, 10 ஆகியஸ்தானங்களில் ஏதேனும் ஒன்றால் பலம் பெற்று இருக்கவும் இவருடன் சம்பந்தப்பட்ட கிரகத்தினைக் கொண்டு வீட்டின் அமைப்பினைக் கூறுவராயாக இந்நாலாமிடத்ததிபதி 12ல் இருந்தால் ஒட்டை விழுந்த (கிழிந்த) கூரைவீட்டில் குடியிருப்பவனாகும்.

கிட்டியநாலின்கோட்போய் கெந்திரத்ரிகோணஞ்சேர
மட்டிலாப்பிலவானாக வல்லதீராறுதன்னி

லொட்டியேபிலவானாகி லுயர்மனைவிசித்ரமாகக்
கட்டியேயிருப்பானன்றோ கன்னியேகேட்குங்காலே. 82

4மிடத்ததிபதி 1, 4, 5, 7, 9, 10 ல் இருக்கவும் அல்லது 12மிடத்தில் பலம் பெற்று இருந்தாலும் உயர்ந்த வீடுகளையும் விசித்திரமான வீட்டினையும் கட்டி இருப்பான்.

கன்னியேமூன்றுதன்னிற் கலந்திடச்சுபர்கணான்கோன்
மின்னியபிலவானாக மிகக்கோபுராங்சமேற
வுன்னியமனையின்வீட்டை யுறுபிலமாகக்கட்டி
மன்னியேகுடியிருப்பாய் வாழுமென்றுரைப்பர்மாதே. 83

3மிடத்தில் சுபக்கிரகமும், 3மிடத்ததிபதியும் பலம் பெற்று நிற்க, இது தசவர்க்ககணித முறையில் ஒன்றான கோபுராங்கிஷம் பெற்று வலுப் பெற்று இருந்தால் தனது வீட்டை நல்ல பலமுடையதாய் (உறுதியாய்) கட்டி அதில் குடியிருப்பவனாம் என்று உரைப்பாயாக.

வாழுமைந்துடையகோட்போய் வன்கொடும்பாபரோடே
மீளுமந்நான்கிலேற வீடுசேத்திரங்களெல்லாங்
கோளுமாய்க்கிரயத்தாலே கொள்ளுவார்கொள்வதல்லா
லாளுமட்டமன்கொடூராங் கிசமெனிலதுபொல்லாதே. 84

5க்குடையவர் பாபருடன் கூடி 4மிடத்திலிருந்தால் வீடு நிலபுலம் இவற்றை விற்று விடுவான், மேலும் 8மிடத்ததிபனின் அங்கிஷம் பெற்று இருந்தால் மிகக் கொடூரமான பலனைச் செய்யுமென்க.

அதிகமாஞ்சுபர்மூன்றாக வந்தநான்குடையோன்மிக்கேற்
புதுமையாமூன்றின்கோளும் பூரணபிலமதாக
வெதுமையாங்கல்லினாலே யிசைத்தவீடிவனுக்கென்பர்
துதிசெயுநான்கின்பேறு தொலையு மோசொல்லின்மாதே. 85

3மிடத்தில் சுபக்கிரக மிருக்கவும், 4மிடத்தானும் மூன்றாக்கு அதிபனும் பலம் பெற்றிருந்தால் கல்லினால் செய்யப்பட்ட (கட்டப்பட்ட) வீடு இவனுக்கு உண்டாகும் என்பர் இதனால் 4மிடத்தின் பலன் அழந்து போகாது கிட்டும் என்பதாம்.

நான்காம்பாவம் – முற்றிற்று

ஐந்தாம் பாவம்

துலைவிலாவைந்தைநோக்கிற் சுகபுத்ரராசயோகஞ்
சிலையெனாத்தெய்வந்தந்தை செய்யும்புண்ணியங்கள்செப்ப
மலைவிலாதேழினாலும் வழுத்தலாமைந்தர்யாத்ரை
தலைமைநான்கால்வெய்யோனாற் றந்தையின்செய்திசாற்றே. 1

ஒருவருடைய ஐந்தாமிடத்தால் புத்திரவர்க்கம், ராஜயோகம் தெய்வம், தந்தை செய்த புண்ணியம், யாத்திரை முதலியனவும் இன்னும் 4மிடத்தாலும் சூரியனாலும் தந்தையைப் பற்றிய விபரங்களைத் தெரியக் கூறலாம்.

தந்தையின்செய்தியல்லாற் றக்கநூன்மறையோன்சால
மைந்தர்கள்செய்திசொல்ல மற்றிவையிரண்டினோடே
சிந்தையிற்புகரைநோக்கித் திரிகளின்பலனைச்செப்ப
விந்தையாமைந்தைநோக்கி மிக்கதைவிளம்பலாமே. 2

தந்தையின் செய்திகள் மட்டுமில்லாமல் வியாழனால் புத்திர வர்க்கபலனையும் கூறவேண்டும். மேலும் சுக்கிரனால் ஸ்திரீகளின் பலனையும் ஐந்தாம் இடத்தைப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

மிக்கவைந்தினிலேயாண்கோண் மேவிடப்புருடர்நோக்கத்
தக்கதேவதையுமாணாந் தையலாய்சாற்றக்கேளாய்
புக்குவோர்நோக்கோர்பெண்ணேற்போற்றுவான்றிரிதெய்வத்தைச்
சிக்கவாதித்தன்பார்க்கச் சிவனையேநேசிப்பானே. 3

ஒருவருடைய ஜென்ம லக்கினத்துக்கு 5மிடத்தில் ஆண்கிரகமாகிய சூரியன், செவ்வாய், வியாழன் போன்ற கிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும் ஆண்தெய்வங்களைப் பூஜிப்பவனாம். பெண்கிரகமாகிய சந்திரன், சுக்கிரன் போன்ற கிரகங்களாயிருந்தாலும் பார்த்தாலும் பெண் தெய்வத்தைப் பூஜிப்பனாவன். இக்கிரகமானது சூரியனாயிருந்தால் சிவனைப் பூஜிப்பவனாவன்.

சிவமெனுமன்தறிந்து. சேர்ந்திடநோக்கத்தேவி
புவனைசேய்தங்கணோக்கம் போற்றுவான்கந்தவேளைக்
கவனித்துப்புதன்போய்நோக்கக் கருதுவான்விஷ்ணுபத்தி
மவுனத்தின்மறையோனோக்க மகாதேவிசிவனாமாதே. 4

சந்திரன் ஆனால் தேவியை வணங்குவனாம், செவ்வாய் ஆனால் முருகனையும், புதன் ஆகிஇருந்தால் மகாவிஷ்ணுவையும் வியாழன் ஆனால் சிவன், சக்தியையும் பூஜித்து வாழ்பவனாம்.

மகாபுகரைந்திலாக வல்லதுநோக்குமாகிற்
சிகாமணியனையாய்லக்ஷ்மி தேவியையாதரிப்பான்
விகாதமாஞ்சநிபோய்நிற்க வெஞ்சநியைந்தைநோக்கிற்
றகாரேனும்ருத்ரதெய்வந் தன்னையாதரிப்பன்றர்னே. 5

ஜெனன லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் சுக்கிரன் இருக்கவல்லது பார்க்கப் பிறந்த ஜாதகர் மகா லட்சுமியை பூஜிப்பவராம் இப்படிச் சநிக்கு ஏற்படுமேயானால் ருத்ரதெய்வமாகிய மாடன், கருப்பன், சாத்தான் முதலியனவாகிய தெய்வங்களைப் பூஜிப்பவாராய் இருப்பர்.

தன்னிலக்கினத்தின்கோளுந் தனித்தவைந்துடையகோளு
மின்னியவேழினிற்க விரோதங்கடெய்வத்தாலா
முன்னியகோட்கடங்க ளுற்றராசிகளாய்நின்றான்
மன்னியசுகங்கடேவால் வருமெனவுரைப்பர்மாதே. 6

லக்கினாதிபதியும், 5மிடத்ததிபதியும் கூடி 7மிடத்தில் இருந்தால் தெய்வத்தால் தண்டிக்கப் பெறுவான். இவர்கள் இருந்தவீடானது நட்பு, ஆட்சி, உச்ச வீடாயிருந்து நட்புக்கிரகங்களாயிருந்தால் தெய்வங்களால் சுகமான ஜீவிதமுடைய நல்ல யோகத்தை அடைபவனாவன்.

வருமெனுமைந்திற்புந்தி மறையவன்வெள்ளிகூடிற்
றிருநிறைந்திருக்கவந்தச் செப்பியமுக்கோணோக்கப்
பொருபடையரசர்நோக்கும் பொருளுஞ்சம்பத்துமுண்டாய்ப்
பெருகியசெல்வந்தங்கு மென்றனர்பேதைமாதே. 7

ஐந்தாமிடத்தில் புதன், வியாழன், சுக்கிரன் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும் அரசர்களினால் ஆதரவு அடைபவனாயும் பொருளும் சம்பத்துமுண்டாகிச் செல்வந்தனாய் இருப்பன்.

பேதகமில்லாவைந்திற் பிழையுறும்பாபர்சேரப்
பாதகர்பாகந்தன்னிற் பதிந்திடவைந்தின்கோளின்
சாதகன்வித்தையில்லான் சார்வில்லையரசரோடே
கோதறுகுணவானாவான் கூறலாங்குழந்தைமாதே. 8

5மிடத்தில் பாபக் கிரகங்களிருக்க 5மிடதத்திபன் பாபக்கிரகத்தின் வீட்டிலிருக்கப் பிறந்த ஜாதகர் வித்தை (கல்வி) இல்லாதவராய் இருப்பார்கள். இவ்வதிபன் வியாழனுடன் சம்பந்தப்பட்டு இருக்குமேயானால் அரசனாகிச் சிறப்புடன் வாழ்வன்.

குழந்தையினான்கோனேராய்க் குறித்தலக்நத்தோனான்காய்
வளர்ந்ததைக்கிரகம்பார்க்க மன்னியகிரகஞ்சாரத்
தளங்களாய்நாற்கால்சீவன் றன்னைப்போற்பிள்ளையுண்டாம்
பிளந்தவாய்ராகுகூடிற் பிறப்பதாணென்றுபேசே. 9

நான்கினுக்கதிபன் 6மிடத்திலிருக்க, ஜென்மலக்கினாதிபன் நான்காமிடத்தில் இருக்க, ஒரு கிரகத்தால் பார்க்கப்பட்டாலும், அல்லது இவ்வதிபனை ஒரு கிரகமானது கூடினாலும் நாற்கால் ஜந்துக்களாகிய மிருகங்களைப் போன்ற உடலை உடையவனாய் இவ்வுலகில்பிறப்பன். இங்ஙனம் ராகு கூடிலும் உண்டாம் என்க.

பிறந்தவர்வாக்கோனேழான் பெருகியவைந்தோனான்கோன்
சிறந்துநால்வருமொன்றாகத் தீயவர்சேரநோக்க
நிறந்ருகமலக்கண்ணாய் நிலவரமிவர்க்குப்பிள்ளை
யுறங்கியகுரங்குபோலே யுண்டெனவுரைப்பர்மாதே. 10

இரண்டாமிடத்ததிபன், ஏழாமதிபன், 5மிடத்ததிபன் நாலுக் குடையவன், இவர்கள் நால்வரும் கூடி நின்றிருக்க இவர்களைப் பார்க்க அல்லது கூடிடவும் பிறந்த ஜாதகர்களுக்கு உறங்கிய குரங்கைப் போன்ற பிள்ளைகள் உண்டாம் என்க.

உண்டென்பார்பின்னேகன்னி யோரைசென்றைந்திற்றீயோர்
பண்டென்பார்மீனந்தன்னிற் பதித்திடச்சுபர்பாராரேற்
றிண்டென்பார்சோயானானுஞ் சேர்ந்திடத்தீயோர்சேரக்
கொண்டென்பாரைந்தினாதேல் குழந்தைசாமென்றுகூறே. 11

ஜென்மலக்கினமானது கன்னியாயிருந்து மீனத்தில் சனி, சூரியன் போன்ற பாபக்கிரகமானது இருக்கவும், அல்லது செவ்வாய் இருக்கவும், பார்க்கவும் இது 5மிடத்திலிருந்தாலும் பிறக்கின்ற குழந்தைகள் இறந்து போகும்.

குழந்தையாமைந்தின்கோளுங் குறித்தவொன்பானிற்கோளு
மிளந்தையாமேழினிற்க விதுதிரராசியாக
வளந்தழைதிங்கள்வெள்ளி வாக்குறநோக்கவன்றித்
தழைந்துமுன்சொல்வதோடே சாரவல்லாருமாமே. 12

5மிடத்தாலும், ஒன்பதாமதிபனும் கூடி 7மிடத்திலிருக்கவும், இது ஸ்திரராசியாக விருந்தாலும் சுக்கிரனும் சந்திரனும் கூடிப்பார்க்க பெண்ணாகி இறந்து போகும்.

சார்வறமறையோனின்ற தலத்துக்கைந்தாமிராசி
சீர்பெறத்தெளிந்துமற்றச் செய்தியைத்தெரியச்சொல்ல
நேர்பெறவைந்தின்வெள்ளி நிலவிடவர்க்கமாகப்
போருறவெள்ளியிந்து பொருந்திடநோக்கம்பூவாய். 13

வியாழனிருந்த வீட்டிற்கு 5மிடத்தில் நிலையை அறிந்து பலன் சொல்ல வேண்டும். இவ்விடம் சுக்கிரன் இருக்க அல்லது சுக்கிரன், சந்திரன் இவர்களால் பார்க்கப்பிறந்த ஜாதகர்க்கு

பொருத்தமில்லாதபாபர் போக்குநோக்கில்லையாகில்
வருத்தமில்லாமற்பிள்ளை வருமென்பர்சுகங்கண்மற்று
நிருத்தவன்சநிசேயைந்தி னின்றிடநோக்கநேமித்
தொருத்தருங்குழவியில்லை யுண்மைசாதகர்க்குத்தானே. 14

இவ்விடத்தை பாபக்கிரகங்கள் சேரவோ அல்லது பார்க்கவோ இல்லாதிருந்தால் சுகமான குழந்தைகள் உண்டாமென்பர். சனி ஐந்தாமிடத்தில் இருந்தாலும் அல்லது பார்த்தாலும் புத்திர வர்க்கம் இல்லையாம்.

உண்மையென்றுரைத்தவைந்துக் குடையவனேழிலேறித்
தண்மையிற்சுபர்கள்ராசித் தலமெனங்கிசங்களேறத்
திண்மையிலைந்தோனோடே சேர்ந்திடச்சிறந்தோர்நோக்கப்
பெண்மையான்மைந்தன்கெந்திரப் பிறிவினாற்பேறதாமே. 15

5க்குடையவன் ஏழாமிடத்தில் இருக்க இவ்வீடானது சுபக்கிரகத்தின் வீடாயிருந்தாலும் சுபர்களுடைய அங்கிஷம் பெற்றாலும் 5மிடத்துக் கதிபனுடன் கூடினாலும் சுபர்களால் பார்க்கப்பட்டாலும், 5மிடத்தான் கேந்திரம் பெற்றாலும்

பிறித்தவைந்துடை யோன்சொட்சேத்திரங்களேற்பிள்ளை கொஞ்ச
மறித்தவைந்துடையோனின்ற வங்கிசத்துடையகோட்போய்ச்
செறித்தசொட்சேத்திராங்கஞ் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
குறித்தனனொன்றேபிள்ளைக் கூடவேறில்லைகோதாய் 16

5மிடத்துக்கதிபன் சுயக்ஷேத்ரம் பெற்றாலும் 5மிடத்துக்கு உடையவன் நின்ற அங்கிஷாபதி சுயக்ஷேத்ரம் (ஆட்சி) பெற்றிருக்கப்பிறந்த ஜாதகர்க்கு ஒரு குழந்தை உண்டாயிருக்கும்.வேறுபிள்ளைகள் இல்லையாம்

கூட்டியவேழோரைந்தில் குறிகிடப்பாபர்கூட
வாட்டியபாபர்நோக்க மாவில்லைமேலாமற்றும்

பூட்டியதிரியில்லானாம் பொலிந்தவைந்துடையோனன்று
கேட்டிலாறெட்டீராறிற் கேடரேற்குலங்கேடாமே. 17

ஏழாமிடத்ததிபன் 5மிடத்திலிருக்க இவருடன் பாபக்கிரகமானது சம்பந்தமுற, பாபக்கிரகத்தின் பார்வை பெற்றிருக்குமேயானால் குழந்தைகள் இல்லையாம், மலடாவர். பெண்கள் இல்லையாம். 5மிடத்ததிபதி 6,8,12ல் இருக்கச் செவ்வாய் இவருடன் கூடியிருக்கப்பிறந்தவர் குலம் அழிந்து போகும்.

கேடிலாவைந்தில்ராகு கிளரவைந்துடையோனாறெட்
டோடுபன்னிரண்டிலேற வொருபிள்ளையேனுமில்லை
நாடியவைந்திற்சென்ம ராசிக்கோணிற்கவைந்திற்
றேடிலக்கினத்தோனின்றாற் றெத்துபுத்திரருண்டாமே. 18

ஐந்தாமிடத்தில் ராகு இருக்கவும். இவ்வதிபதி 6,8,12ல் இருக்க ஒரு குழந்தை கூட இச்சாதகனுக்கு இல்லையாம் இவ்விடத்தில் ஜன்ம ராசிக் கதிபன் இருக்கவும், 5மிடத்தின் அதிபன் ஜன்ம லக்கினத்தில் இருந்தாலும் தத்துப் புத்திரர்கள் ஏற்படும்.

தெத்துலக்கிநத்தின்கோளுஞ் சிறந்தவொன்பானின்கோளும்
பற்றிலாறெட்டீராறிற் பதிந்திடசுபர்கள்பார்க்க
வெற்றியாங்கோணகேந்திர மேவியரவமேயாகிற்
புத்திரர்தெத்தாமைந்தோன் போய்நின்றபலனாற்சொல்லே. 19

ஜன்மலக்கினாதிபனும், ஒன்பதாமிடத்தானும் 6, 8, 12 ல் இருக்கவும் இவர்களைப் சுபக்கிரகம் பார்க்கவும் 1,4,7,10,5,9 ஆகிய கோண கேந்திரங்களில் இருக்கவும் பிறந்த ஜாதகர்க்கு தத்துப் புத்திரர்கள் உண்டாம் இதனை 5ம் இடத்தான் நின்ற பலனறிந்து சொல்லவும்.

போய்நின்றராசியான ததுபுண்ணியராசியாக
வாய்நின்றவவர்கள்கூட வன்னவற்சுபரேபார்க்கத்
தூய்வென்றவாலிபத்திற் றோன்றுவான்மதலையென்பர்
பேய்கொண்டராகுவோடேற் பிள்ளையுஞ்சாவதாமே. 20

5மிடத்ததிபதி நின்ற ராசியானது சுபக்கிரகங்களின் வீடாயிருந்து சுபக்கிரகத்தின் பார்வை சேர்க்கை பெற வாலிபவயதில் இச்சாதகனுக்குப் புத்திர வர்க்கம் உண்டாகும், இவ்வதிபதி ராகுவுடன் கூடியிருந்தால் குழந்தை பிறந்து இறந்து போகும்.

பிள்ளையைந்துடையகோளும் பேசியவாக்கின்கோளுந்
தள்ளியபலவீனங்களாயைந்தைப் பாபர்நோக்கக்
கொள்ளையாய்த்திரிநாட்சென்று குழலியின்பேறுமுண்டாங்
கிள்ளையின்மொழியினாளே கிட்டியபலனிதாமே. 21

5மிடத்ததிபனும் இரண்டாமதிபதியும் பலஹீனப்பட்டு இருக்க. (பகை, நீசம்) ஐந்தாமிடத்தைப் பாபக் கிரகமானது பார்க்க

கிட்டியவைந்தொன்பானிற் கேடிலாச்சுபக்கோணிற்கத்
தெட்டியவாறோன்பார்க்கத் திரியபசாரியாடித்
தொட்டிலிற்பிள்ளைதூக்கித் தூரத்தேகுரலொலிக்கத்
தட்டிபோராட்டுமென்பார் தக்கசாத்திரங்கற்றோரே 22

ஜென்மலக்கினத்திற்கு 5,9 மிடங்களில் சுபக்கிரகமிருக்க 6மிடத்தான் இவர்களைப் பார்க்க விபசார ஸ்திரீ இவனுக்குண்டாம் தொட்டிலில் உள்ள பிள்ளையை தூக்கிச் சென்று போராட்டம் செய்வர்.

தக்கியவைந்திலைந்தோன் சார்ந்திடவல்லானோக்க
முக்கியமறையோன்றானு முகிழ்த்தநற்கோளுநோக்கப்
புக்கியவைந்துதன்னிற் புண்ணியர்தாமுங்கூடச்
சிக்கியசாதகர்க்குச் சிறந்தமைந்தர்களுண்டாமே. 23

ஐந்தாமிடத்தான் தனது வீட்டில் இருக்க அல்லது தன்வீட்டைப் பார்க்க வியாழனும் சுபக்கிரகங்களும் இவர்களைப் பார்க்க 5மிடத்தில் சுபக்கிரகமானது கூடி நிற்கப்பிறந்த ஜாதகர்க்கு சிறந்த புத்திரர்கள் உண்டாகும்.

சிறந்தவன்பிறந்தராசித் தினகரனைந்திலேறக்
கறந்தவைந்துடையகோளுங் கனபில்வானாய்நிற்க
நிறந்தருமறையோன்றானு நிறைபிலவானாய்நிற்கிற்
பிறந்தசாதகர்க்குத்தானும் பிள்ளையுண்டென்னலாமே. 24

5மிடத்தில் சூரியன் இருக்க இவ்வதிபன் பலம் பெற்றுவலுத்து இருக்க வியாழனாகிய புத்திரகாரகன் வலுப் பெற்று நிற்க பிறந்த ஜாதகர்க்கு பிள்ளைகள் உண்டாகும்.

பிள்ளையுண்டென்றவைந்திற் பிலன்களாய்மறையோனிற்க
வள்ளையைந்துடையோன்பார்க்க மைந்தனாமறையோன்றானுந்
துள்ளிவைகேசியங்சந் தோன்றியைந்தோனைநோக்க
மெள்ளவைந்துடையோன்பார்க்க விளங்குமைந்தர்களுண்டாமே

5மிடத்தில் வியாழன் இருக்க இவரை இவ்வதிபதி பார்க்க வியாழன் வைசேடிகாங்கிஷம் பெற்று இருந்து 5மிடத்தினைப் பார்க்கப் பிறந்தவர்க்கு பிள்ளைகள் உண்டாகும்

விளங்கியபத்திலேதான் விண்மதியிருக்கவெள்ளி
யழுங்கியபாபரோடே யமைந்துநாலிடத்திலாகப்
புழுங்கியநோய்களாலும் பூருவபயன்களாலு
மெழும்பியகுழவியெல்லா மிவனுக்குநாசமாமே. 26

10 மிடத்தில் சந்திரன் இருக்க சுக்கிரன் பாபக்கிரகங்களுடன் கூடி 4மிடத்திலிருக்க நோயாலும் பூர்வ ஜென்ம பலன்களாலும் இவனுக்கு பிறந்த குழந்தைகள் எல்லாம் இறந்து போகும்.

இவனுக்காறெட்டிலேறி யிருக்கலக்கிநத்தின்கோடான்
றவனுறறபாபரோடே சார்ந்திடவேந்தின்கோட்போய்க்
கெவனித்தநீசஞ்சத்ருக் கிரகங்களாகப்பார்க்க
நவனித்தபுத்ரரெல்லா நாசமாநண்ணுங்காலே. 27

ஜென்மலக்கினத்திற்கு 6,8மிடத்தில் இலக்கினாதிபதி இருக்க 5மிடத்ததிபன் பாபருடன் கூடி இருக்க நீச சத்துருக் கிரகங்களால் பார்க்கப்பிறந்த ஜாதகனுக்கு புத்திரவர்க்கங்கள் நாசமடைந்து போகும்.

நண்ணியசனனமேழு நலங்கொளொன்பதுமீராறிற்
றண்ணியபாபரிந்தத் தலங்களிற்சார்கின்றாலு
மெண்ணியவேழிலேனு முகந்திடப்பாபரெல்லாந்
திண்ணியவங்சமெல்லாஞ் சேரநாசங்களாமே. 28

லக்கினம் ஏழு, ஒன்பது, பன்னிரெண்டாமிடங்களில் பாபக்கிரகங் களிருந்து இவருடன் ஏழாமதிபனும் கூடிஇருக்க இவருடைய வம்சங்கள் அழிந்து போகும்.

சேரவேவயதுபோனாற் சிறாயெனவுடம்புவற்றி
யாரநோக்காட்டுக்காரி யல்குலுந்தளர்ச்சியாவா
டூரமில்லாதான்காயந் தூலத்தான்மலடுதோன்றி
யேரினவயதுபத்தா யெட்டுக்குமிலைப்பேறென்னே. 29

இச்சாதகன் வயது முதிர்ந்து சிறாய் போல் உடம்பு வற்றி நோய் பற்றும், யோனி சுருங்கி, தூரம், இல்லாத 18வயது உடைய மனைவியை மலடிசியை அடைவான் (18 வயதுக்கு மேல் இவளுக்கு ஆயுள் இல்லையாம்)

எட்டியமறையோன்சென்மத் திறையவனேழின்கோடான்
கட்டியவைந்தின்ராசிக் கதிபதிநான்குபேரு
மொட்டியபிலவினங்க ளூற்றுறுஞ்சுரதகாளை
மட்டவர்குழலினாளே மலடியென்றுரைக்கலாமே. 30

ஜென்மலக்கினத்தின் அதிபதி வியாழன் ஏழாமதிபதி 5ம் அதிபதி ஆகிய 4பேரும் லக்கினத்திலிருக்கப் பிறந்த ஜாதகர் மலடாவர். பிள்ளைகள் இல்லையாம்.

அன்பதுவயதாள்வற்ற லானவள்ரோகக்காரி
யின்புறுவிலக்கமில்லா ளிடையினிலேநோயானாண்
முன்பினாய்ப்பருத்தகாய முன்னமேமலடியானா
னென்பதுவயதுபத்தா னெட்டுக்குங்குழவியில்லாள். 31

இவனுக்கு மனையானவள் 50 வயதினை உடையவளும் தேகம் நோய், தூரமில்லாதவள் (வீட்டு விலக்கமில்லாதவள்) இடையில் நோய் தடித்த உடம்பு மலடி, 18வயதுக்குள் குழந்தை இல்லாதவள் ஆகிய இயல்பினை உடையவளாம்

குருவொடுலக்நநாதன் குணமுடனேழிற்கோடான்
ஒருபலனைந்துநாதன் சார்ந்திடுமோரைதன்னின்
மருவிடப்பிலமேயீந மாகவேவந்தோனுக்குத்
திருவுளமறியநாமே செப்பினோம்புத்ரரில்லை. 32

வியாழன் லக்கினாதிபதி, 7மாதி 5ம் அதிபதி ஆகிய நால்வரும் இருந்த ஓராதிபன் பலமற்று இருக்கப் பிறந்தவர்க்கு புத்திரர் இல்லையாம்.

புத்திரத்தானமீதிற் புகழ்பாபரிருக்கவைந்துக்
குற்றவனிசமாக வுறைந்திடச்சுபர்கள்பார்வை
சற்றுமேயில்லாதாகிற் சாதகன்றனக்குப்பிள்ளை
சுத்தமாயில்லையாணிற் சொல்லுவர்மலடனென்றே. 33

5ம் இடத்தில் பாபக்கிரகங்கள் இருக்க இவ்வதிபதி நீசமடைய சுபர்பார்வை இல்லாது இருந்து பிறந்தவர்க்குப் புத்திரவர்க்கம் இலாது மலடாவர்.

கோதிலாமறையோனிந்து கூடிலக்கிநத்திலேகத்
தீதிலாவைந்திற்பாபர் சேர்ந்திடச்சிறந்தநற்கோ
ணீதியானோக்காதாகி னிலவரமுன்னோரெல்லாஞ்
சோதியாய்மலடனாவர் சுற்றியகிரகத்தாலே. 34

வியாழனும், சந்திரனும் கூடிச் சென்ம லக்கினத்தில் இருக்க ஐந்தாமிடத்தில் பாபக்கிரகங்கள் இருக்க இவரைக் சுபக் கிரகங்கள் பாராதிருந்தால் மலடாவார்களாம்.

சுற்றியவைந்திற்பாபர் தோன்றிடச்சூழ்ந்தவைந்தோ
னெற்றியபாபாம்சத்தில் யிவைகளிலிருக்கவின்ப
முற்றியசுபர்கள்சார்பு முழுநோக்குமில்லையாகிற்
சத்தியமலடனாவன் றையலேசாற்றினோமே. 35

ஐந்தாமிடத்தில் பாபர்கள் இருக்க, இவ்வதிபன் பாபர் அம்சத்தில் இருந்து விட்டால் நல்ல இன்பமுடையவனாவன். சுபக்கிரகங்கள் சம்பந்தமுற்று சுபர் அங்கிஷம் இல்லாது இருக்குமேயானால் மலடாவர்.

தையலேமறையோன்பாபர் தங்கண்மத்தியிலேசார
வெய்யவைந்துடையோன்றானும் வெகுபிலவீநமாகத்
துய்யநற்கோட்கணோக்குந் தோய்வதுமில்லையாகில்
வையகந்தனிலொப்பில்லா மலடனென்றுரைப்பர்மாதே. 36

வியாழன் பாபக்கிரகங்களுடன் கூடி நிற்க ஐந்தாம் அதிபன் பலமற்று இருக்க சுபக்கிரகங்கள் சம்பந்தம், பார்வை இலாது இருந்தால் புத்திரவர்க்கம் இல்லாது மலடாவர்.

மலடெனுமிந்தவைந்து மாலுடன்வீடதாக
விலையெனிற்சநிவீடாக வியல்சநிகுளிகன்கூடத்
தலமதைக்குளிகன்காரி சாயலாய்நோக்கினாலுஞ்
சிலைநுதலனையாய்தெத்துப் புத்ரராய்ச்சிறப்பர்தாமே. 37

ஐந்தாமிடமானது புதன் வீடாயிருந்து அல்லது சநி வீடாயிருந்து இதில் சனியும் குளிகனும் கூடி நின்றாலும் அல்லது பார்த்தாலும் தெத்துப்புத்திரர் உண்டாம்.

சிறந்தவஞ்சகனைப்பாபர் தெளிவுறநோக்கத்தேவாற்
பிறந்தபிள்ளைகள்சமாநன் பிச்சியைந்தினினின்றாலு
மறந்தவர்நோக்கினாலு மந்தணர்சாபத்தாலே
யிறந்துபோம்பிள்ளையெல்லா மென்றனரியம்புங்காலே. 38

ஐந்தாமிடத்ததிபனைப் பாபக் கிரகங்கள் பார்த்தால் தேவதை களால் பிள்ளைகள் இறக்கும். இப்படி 5ம் இடத்திலிருந்தாலும் அல்லது பார்த்தாலும் அந்தனர்களின் சாபத்தால் பிள்ளைகள் எல்லாம் இறந்து போகும்.

இயம்பியவைந்தோன்சேயோ டணுகிடவினியவாறோன்
னயம்படநோக்கநல்லோர் நாட்டங்களில்லையாகின்
மயங்கியசத்துருக்கள் வருத்தியதோடத்தாலே
முயங்கியமைந்தர்சாவா மென்றனர்மோகமாதே. 39

ஐந்தாம் அதிபதி செவ்வாயுடன் கூடி ஆறாம் அதிபன் பார்வை பெற்று இருந்து சுபக்கிரகங்களின் பார்வை இலாது இருந்தால் எதிரிகளால் தனது புத்திரவர்க்கம் அழிந்து போகும்.

மோகித்துநான்கிற்பாபர் மொய்த்திடநான்கோனேகி
வேகித்தசநியைச்சேர வேறுளபாபக்கோட்க
டாகித்தபனிரண்டெட்டிற் சார்ந்திடத்தாய்தோடத்தாற்
போகித்தகுழவியெல்லாம் புவியினினாசமாமே. 40

நாலாமிடத்தில் பாபக்கிரகங்களிருக்க, இவ்வதிபன் சனியுடன் கூடி நிற்கவும் மற்ற பாபக்கிரகங்கள் 12மிடத்தில் இருக்கப் பெற்ற தாயினுடைய தோசங்கள் மூலமாய் (தாயால்) புத்திர புத்திரிகள் மாண்டு போவர்.

புவியினின்மிக்கப்பாபர் பொருந்தியொன்பதிலேநிற்கச்
சவியுறுமைந்தின்கோள்போய்ச் சநியுடன்சார்ந்துநிற்கக்
குவியுமைந்துடனொன்பானிற் குளிகன்போய்க்கூடுமாகி
னவிலுறும்பிதிர்தோடத்தா னாடியமைந்தர்சாவே. 41

ஒன்பதாம் இடத்தில் பாபக்கிரகங்களிருக்க, 5ம் அதிபன் சனியுடன் கூடி நிற்க, 5,9 மிடத்தில் குளிகன் சேர்ந்து இருக்க பிதாவால் (தந்தையால்) மக்கள் அழிவர்.

நாடியராகுகேது நயம்பெறுமைந்திலாகத்
தேடியவைந்தைநோக்கச் சேய்பலவீனஞ்சாரக்
கூடியேயைந்தினின்ற கோள்பிலவீனமாகிற்
சாடியேசர்வதோடந் தங்கியேமைந்தர்சாமே. 42

ஐந்தாமிடத்தில் ராகு அல்லது கேதுவிருக்க அல்லது பார்க்க, செவ்வாய் பகை நீசம், 6,8,12ல் பலஹீனம் அடைந்து இருக்க 5மிடம் இருந்த கிரகம் பலமற்று இருக்க சகல தோஷங்களும் சாதகர்க்கு ஏற்பட்டு புத்திர வர்க்கம் மாண்டு போகும்

தங்கியமறையோனைந்தோன் றனித்தவேழுடையோன்மூவர்
பொங்கியேசேயினோடே பொருந்திடப்பொருத்தமில்லா

மங்கியதுட்டத்தெய்வ வாதையான்மைந்தர்சாவாஞ்
சிங்கிகொள்விழியினாளே தெளியுங்காற்செவ்விதாமே. 43

வியாழன், ஐந்தாம் அதிபன் ஏழுக்குடையவன் மூவரும் செவ்வாயுடன் கூடிட பிறந்த ஜாதகர்க்கு தெய்வ தோஷத்தால் மைந்தர்கள் இறந்து போவார்கள்.

செவ்வியவைந்தினின்றோன் செயிற்பிலவீனனாகக்
கொவ்வையாமைந்தின்கோளாற் குறித்தநோக்கில்லையாகிற்
கௌவியகுழவியில்லை காரணந்தெத்துப்புத்ரர்
மௌவலர்குழலினாளே வருகின்றபலனிதாமே. 44

5ம் இடம் இருந்த கிரகம் பலமிழந்து இருக்க, இவ்வதிபன் இத்தானத்தைப் பாராதிருக்க தனக்குப் புத்திரர் இல்லையாம். மாறாக தெத்துப் புத்திர் உண்டாம்

வருகின்றமதிபோய்ப்பாவர் மனையிலேவாழவைந்தோன்
பெருகின்றவொன்பதாகப் பிறந்தலக்கினத்தின்கோள்போ
யுருகின்றதிரிகோணங்க ளுற்றிடவுற்றபேர்க்குப்
பொருகின்றமைந்தர்தெத்துப் புத்திரனெனலாம்பூவாய். 45

சந்திரன் பாபர்கள் வீட்டிலிருக்க 5ம் அதிபன் 9ம் இடம் இருக்க, ஜென்மலக்கினாதிபதி 1,5,9ல் இருக்க தெத்துப்புத்திரர்கள் உண்டாம்

புத்திரத்தானமைந்தோன் போகவெட்டீராராசி
மித்திரமல்லானாலா மிடத்தினிலேனுஞ்சாரச்
சித்திரச்சநியினங்சஞ் சேர்ந்திடச்சிறந்தபோக்கின்
சூத்திரமுரைக்கின்மைந்த ருறுவதுதெத்தென்றோதே. 46

ஐந்தாம் அதிபன் 8, 12, 4 மிடம் இருக்கவும் சனி அங்கிஷம், பெற்றிருக்கவும் பிறந்த ஜாதகர்க்கு தெத்துப் புத்திரர் உண்டாம்.

ஓதியவைந்தின்கோட்போ யுயர்சநியங்சமேற
நீதிநூன்மறையோன்வெள்ளி நிற்பதுதங்கடங்க
ளாதியாகியசொட்சேத்ர வங்கிசமேறத்தெத்தாய்த்
தீதிலாக்குழவிபின்னஞ் சேர்க்கைவேறெனினுஞ்சேயே. 47

ஐந்தாமதிபன் சனியங்கிஷம் பெற்று இருக்க வியாழன் சுக்கிரன் சுய க்ஷேத்ரம் பெற்று தனது அங்கிஷத்திலிருக்க தெத்துப் புத்திரர்கள் உண்டாம்.

சேயுறுமென்றுசெப்புந் தினங்களையறியவேண்டி
லாயவைந்துடையோனொன்பா னந்தணன்மதியிற்கோட்கள்
போய்வருதிசையிலேனும் புரியபகாரத்தேனுந்
தோய்வுறுகுழலியுண்டாஞ் சொல்லியகுறியிதாமே. 48

ஐந்து, ஒன்பது அதிபர்கள் வியாழன், சந்திரன் இவர்கள் திசை, அபகாரங்களில் புத்திர வர்க்கம் ஏற்படும்.

சொல்லியதலத்தைந்தாங்கோள் சோதிடமைந்தைப்பார்த்தோ
னில்லெனுமைந்தினின்றோ னிவர்களிலெவனானாலுஞ்
சல்லியபிலவீனங்கள் சார்ந்தவன்றலமாறெட்டிற்
புல்லியதலமீராறிற் போனதான்மக்கள்போமே. 49

5ம் அதிபன், 5ம் இடத்தைப் பார்த்தோன், 5ல் இருந்தவன் இவர்கள் பலமற்று இருக்க அல்லது 6,8,12ல் மறைந்து இருக்கவும் பிறந்த ஜாதகர்க்கு மக்கள் இல்லையாம்.

போமெனமுன்புசொன்ன புண்ணியர்நாலுபேரு
மாமெனும்பிலவானாகி லவர்திசையபகாரத்தி
னேமமாம்புத்ரப்பிராப்தி நிகரிலாச்சம்பத்தோடே
கோமகன்சலுகையுண்டாங் கொடியிடைமடநல்லாளே. 50

5ம் அதிபன், 5ஐப்பார்த்தோன், 5ல் இருந்தவன், வியாழன் ஆகிய நால்வரும் வலுவடைந்து இருக்குமேயானால் இவர்களது திசா, புத்திகாலங்களில் புத்திர பிராப்தி உண்டாகி, செல்வம், சம்பத்து அரசர்களால் சலுகை முதலியன உண்டாகும்.

கொடியிலாவைந்திராசிக் குடையவன்சுபக்கோளாகக்
கடிதின்ன்மிக்கவெய்யோன் கலந்திடச்சுபர்களோடே
விடுதியாமைந்துதன்னின் மேவுவோர்சுபர்களாகிற்
றுடியினாவிவன்றந்தைக்குச் சுகமெனச்சொல்லலாமே. 51

ஐந்தாம் ராசிக்குடையவன் சுபக்கிரகமாயிருந்து சூரியன் சுபக்கிரகங்களுடன் கூடி இருக்க, 5ம் இடத்தில் சுபக்கிரகங்கள் இருக்க இவனது தந்தைக்கு சுகமுண்டாம்.

சொல்லுமைந்துடையகோளுஞ் சூரியன்றானுமிக்காய்
வெல்லும்பாராவதாங்ச மேறிட்டில்லையாகிற்
சொல்லுவதுச்சமாட்சி யங்கிசஞ்சேர்கன்றாலு
மல்லுறுபுயத்தான்றந்தை வலியதீர்க்காயுர்த்தானே. 52

ஐந்துக்குடையவன், சூரியன் இவர்கள் பர்வதாம்சம் பெற்று ஆட்சி உச்சம் பெற்றிருக்க அல்லது இவ்வங்கிஷம் பெற. இவன் தந்தைக்கு ஆயுள் தீர்க்கமுண்டாம்.

வலியவைந்துடையகோளு மற்றவாதித்தன்றானுங்
கொலுவிருப்பதுவெவ்வேறே கொடூரநீசாங்சமேற்க
கலியெனுங்குளிகன்காரி தன்னொடுங்கலந்துநின்றான்
மெலிவுறத்தந்தைசாவா மெய்யெனவிளம்பலாமே. 53

5ம் அதிபன் சூரியன் பாபர்கள், நீசர்களுடைய அங்கிஷம் பெற்றிருக்க சனி குளிகன் இவர்களுடன் கூடி இருக்க இவன் தந்தை மாண்டு போவான்.

மெய்யெனுந்தலமாமைந்தோன் விளங்கியசுபக்கோளாக
நெய்யவேநீசவஃத்த மனம்பகைராசியேறித்
தொய்யுமென்கொடூரச்சஷ்டி யங்கிசந்தோன்றுமாகிற்
றையலேயிவனைப்பெற்ற தந்தைதுக்கஞ்சார்வானே. 54

ஐந்தாமதிபன் சுபக்கிரகமாயிருக்க இவர் நீச, அஸ்த்தமனம் பகை, இவ்வீடுகளிலிருக்க பாபர்களுடைய சஷ்டியங்கிஷம் பெற்றிருக்க இவன் தந்தை துக்கத்தை அடைவன்.

தந்தைசென்மித்தராசி தனக்கைந்தினைச்சார்ந்தால்
விந்தையாங்குழவிதந்தை மேவியங்குணங்களாவான்
முந்தியதந்தைராசி முன்னிவன்செனனமாகின்
மைந்தர்கடந்தைசொற்கீழ் வசப்படுமென்னலாமே. 55

9ம் அதிபன் 5ம் இடம் இருக்க இவன் தந்தையின் குணம் உடையவனாவன். இவனது ஜென்மலக்கினமானது 9ம்இடத்துக்கு முந்தைய ராசியில் இருக்குமேயானால் இவனது புத்திரர்கள் இவனுக்கு அடங்கி வாழ்வர்.

வசப்படாதென்பர்தந்தை வந்தலக்கினத்துக்காறெட்
டிசைத்தவன்செனனமாகி லிவனைச்சத்துருவாமென்பர்
துசப்படத்தந்தைசென்மந் தோன்றியகுழவியெல்லா
நிசப்படத்தந்தைசொற்கீழ் நிற்குமென்றியம்பலாமே. 56

9க்கு ஆறு 8மிடங்களில் இவனது ஜென்மலக்கினமாய் இருக்குமேயானால் (தந்தையின் ஜென்மலக்கினத்திற்கு 6, 8, வது லக்கினம்) தந்தைக்கும் மகனுக்கும் எதிர்ப்புகள் உண்டாம். மாறாக தந்தையின் லக்கினமே ஜெனனமானால் தந்தையின் கீழ் சொற்படி நடப்பவராவர்.

நிற்குமென்றுரைத்தவைந்தோ னிலைபிலவீனமாகத்
திற்குசந்திரனாலின்கோள் செனித்தலக்கிநத்தின்கோளுந்
துர்ப்பிலவீனமாகச் சொல்லியநான்குதானுந்
தப்பியலக்கத்தானேற் றாய்கர்ப்பத்தோடுசாமே. 57

ஐந்தாமிடத்தான் பலகீனமடைந்து, சந்திரனும், ஜென்ம லக்கினாதிபனும் துர்ப்பலமடைந்து நிற்கவும், 4மிடத்தின் அதிபன் பலமற்று இருக்கவும் பிறந்த ஜாதகர்க்கு தாயின் கர்ப்பத்திலே குழந்தை இறந்து போகும்.

தாயுறுகதிரோனின்ற தானியங்கிசத்திலேனுந்
தீயுறுந்துக்கப்பாலாந் திரிகோணந்தன்னிலேனும்
போயுறக்கதிரந்நாளிற் பொருந்தியதாய்தந்தைக்கு
நோயுறுமுபாதியுண்டா மென்றனர்நோக்குங்காலே. 58

சூரியன் இருந்த அங்கிஷத்திலோ அல்லது சந்திரனுக்கு 1,5,9 மிடத்திலோ சூரியன் வரும் போது தாய் தந்தைக்கு நோயால் துன்ப மேற்படும்.

நோக்கியகதிரோனின்ற நொய்யவங்கிசத்தினான்றன்
றேக்கியநவாங்கிசத்து வாதசாங்கிசங்களென்னிற்
றாக்கியதவத்தைநோக்கிச் சந்திரன்வந்தகால
நாக்கினாற்றந்தைதாய்க்கு நலனிலாத்துயரந்தானே. 59

சூரியன் இருந்த அங்கஷாதிபதி நவாம்சத்தில் தனது சுய அங்கிஷம் பெற்று இருக்க இத்தானத்திற்கு சந்திரன் வரும் போது தனது வாயால் தந்தைக்கும் தாய்க்கும் துயரம் ஏற்படும்.

நலனிடநாலின்கோளு நல்லவைந்துடையகோளும்
பலனிலாவாறெட்டோடே பன்னிரண்டதனிற்பாய
விலையிலாத்தந்தையந்திய முகத்தினில்விழிக்கமாட்டான்
றலமதையன்றியைந்தோன் சாந்திடச்சமையஞ்சார்வே. 60

நாலாமாதியும் 5ம் அதிபனும், 6, 8, 12 மிடம் இருக்க ஜாதகனின் தந்தை முகத்தினில் விழிக்க மாட்டான். (தந்தையின் கடைசி இறப்புக் காலம்) இதுவும் 5ம் அதிபன் திசாபுத்தி காலங்களில் உண்டாம்.

சமைத்தவைந்துடையோனல்லோர் தங்களங்கிசங்களேறி
யிமைத்தநல்லோரைச்சேர விவன்றனைச்சுபர்கணோக்க
வுமைக்கரம்வளர்ந்ததென்ன வுலகினிலன்னதான
மமைத்திடுமெளிதோசொல்ல வைந்திறைப்பலனையம்மா. 61

ஐந்தாமதிபன் சுபர் அங்கிஷம் பெற சுபர்களைக் கூடிட சுபர்கள் பார்க்க அந்நதானம் செய்பவனாவன்.

ஐந்தாம் பாவம் – முற்றிற்று

ஆறாம் பாவம்

அஞ்சியவாறைநோக்கி யவதியாக்கினைகள்புண்கண்
மிஞ்சியசத்ருவோடே வினைசெயுநோய்களெல்லா
நெஞ்சினிலாகத்தேர்ந்து நிலைநின்றகோளைநோக்கி
வஞ்சியின்கொடிநல்லாளே வகுத்துரைக்கின்றவாறே. 1

ஒரு ஜாதகனுடைய ஜென்ம லக்கினத்திற்கு 6ம் பாவகத்தால் ஆக்கினைகள், புண்புரைகள், சத்துரு, நோய், முதலியனவாகிய பலன்களை எடுத்து இயம்பலாம்.

வகுப்புடையாறின்கோளு மான்மதியிவர்கள்மூன்று
மிகுப்புடன்கூடலக்கனமேவு சம்மந்தமாகத்
தொகுப்புடைக்கோசந்தன்னிற் றோன்றியபுண்களாலே
யுகுப்புடையல்லியாவ ரொண்டொடிக்கிவனொவ்வாதே. 2

ஆறாம் அதிபனும், புதனும், சந்திரனும் ஆகிய இவர்கள் மூவரும் ஜென்ம லக்கினத்திலிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு கோசத்தில் (குறி) புண் உண்டாகி உடல் நலிந்து காணப்படுவன்.

ஒவ்வுமேழுடையோன்வெள்ளி யுரைத்தவாறிடத்திற்சேரச்
செவ்வியசநிசேய்பார்க்கச் சேர்வன்சத்துருவால்வாதை
யெவ்வுமாறிடத்தினற்கோ ளிருந்திடவில்லைநோக்க
நவ்வியாறினினின்றோரை நாடிச்சத்துருப்புண்ணாமே. 3

ஏழுக்கதிபன், சுக்கிரன் கூடி ஆறாமிடத்திலிருக்க, செவ்வாய், சனி இவர்களைப் பார்க்க எதிரியால் துன்பமடைபவனாவன். இத்தானத்தை ஆறாமதிபன் பாராதிருக்க அல்லது கூடாதிருக்க எதிரிக்குத் துன்ப முண்டாம்.

நாமமாறுடையோன்சென்ம நாயகன்கதிரோன்றானுந்
தீமையாம்பகைநீசங்கள் சேர்ந்திடப்பிலவீனத்தா
னேமமாறதனைச்சார நெறிநட்போர்சென்மஞ்சேரத்
தாமுறுதந்தைவங்சஞ் சத்துருபயத்தனாமே. 4

ஆறாமதிபன், ஜென்ம லக்கினாதிபன், சூரியன் இவர்கள் பகை நீசம் பெற்று பலஹீனமடைந்து ஆறாமிடத்திருக்க, நட்புக்கிரகங்கள் ஜென்ம லக்கினத்திலிருக்க, பிதாவினால் எதிர்ப்பை அடைவன்.

சத்துருவென்றுசொன்ன தானக்கோண்மூன்றுபேரும்
பற்றிநட்புச்சமாட்சி பதியவர்க்கோத்தமாக
வுற்றதாயாதிக்கார ருபாதியுமுடம்பிற்புண்ணு
மற்றலத்துடையோராலே வருமெனவகுப்பர்மாதே. 5

ஆறாமதிபன், ஜென்மலக்கினாதிபன், சூரியன் ஆகிய மூவரும் நட்பு, ஆட்சி, உச்சம், வர்க்கோத்தமம் பெற ஜாதகனின் தாய்க்கு உடம்பில் புண், முதலியன பிறரால் ஏற்படும்.

வருமெனவுரைத்தவாறோன் வக்கிராத்தமனநீசம்
பொருமெனவாறினிற்கப் புக்குந்தாயாதிதுன்ப
மருநிலத்தாறில்வெய்யோன் முதலெந்தக்கிரகமேனுஞ்
சருவுமேயவர்கண்மூலஞ் சத்துருபீடைதானே. 6

ஆறாமதிபன் வக்கிரம், அஸ்தமனம், நீசம் பெற்று 6ம் இடத்திலிருக்க தாய்க்கு துன்பம் உண்டாம். 6ம் இடத்தில் சூரியன் முதலாயுள்ள எந்தக் கிரகமிருந்ததோ அவர்க்கு உரிய வர்கள் மூலம் துன்பம் உண்டாகும்.

சத்துருத்தலமாயாறோன் சாரத்தீக்கோண்முக்கோளைக்
குத்திரர்பயம்பசும்பொன் கொடியநாசங்களாகு
மித்திராசுபர்மூன்றோடே மிகுந்திடப்பிலவானாகிற்
சித்திரப்பசுக்கள்பொன்க டிரவியங்குதிரைசாவே. 7

ஆறாம் இடத்துக்கு அதிபதி ஆகிய கிரகமானது பாபக்கிரகங்களுடன் கூடிட சூத்திரரால் பயம், பொன், பொருள் நாசம் உண்டாம். (சூரியன், சனி, செவ்வாய்)

திரவியவாறின்கோளுஞ் சேர்ந்துநிற்கின்றகோளு
நிரவியசுபக்கோளாக நிற்ககேந்திரத்ரிகோணம்
பரவியசத்ருதன்னாற் பயமிலைப்பயிற்றியாறோன்
குரவினின்றோனுமிக்கேல் கொஞ்சம்பொன்னாசங்கூறே. 8

ஆறாம் அதிபனும், இவருடன் சம்பந்தமுற்ற கிரகமும் சுபக்கிரக மாயிருந்து 1, 4, 5, 7, 9, 10 ஆகிய ஸ்தானங்களிலிருந்து பிறந்த ஜாதகர்க்கு எதிரியால் பயமில்லை என்க. மாறாக சிறிது பொருள் நாசமுண்டாகும்.

கொஞ்சமென்றியம்புகின்ற கோளிரண்டதின்மிக்கொன்றேல்
வஞ்சகர்பயமும்புண்ணும் வருவதுகொஞ்சமாகு
நெஞ்சினிலாறிலேனு நிற்கவன்னவனோடேனும்
பொஞ்சியபிலவீனத்தாற் பொருத்தினாலுபாதிபொன்னே. 9

ஆறாமதிபனும், இவருடன் சம்பந்தப்பட்ட கிரகமும் சுபக்கிரக மாயிருந்து இரண்டாமிடம் இருக்கில் எதிரியால் சிறிது பயம் உண்டாகும். மேற்சொன்னவர்கள் ஆறாமிடம் இருந்தாலும அல்லது கூடினாலும் எதிரியால் துன்பம் உண்டாம்.

பொருத்தியவேழின் கோட்போய்ப் புகழிலாப்பாபரோடே
மிருத்திலக்கினத்திலேற மேனியிற்புண்ணாமென்க
சரத்தியவைந்தொன்பானேற் சார்ந்தவைதீருமென்க
நெருக்கியதலங்கள்னேறே னீக்கியுள்ளோர்கடாமே. 10

ஏழாமதிபன் பாபக்கிரகத்துடன் கூடி லக்கினத்திலிருக்க உடம்பில் புண் உண்டாம். ஐந்து அல்லது 9மிடம் இருந்தால் புண் உண்டாகும் இக்கிரகமானது 5, 9, மிடம் இருந்தால் புண் உண்டாகி மாறும்.

நீக்கியதலமாறேனு நிகரிலாவேழின்கோளுந்
தேக்கியகதிரோனோடே சேர்ந்திலக்கினத்திலேற
நோக்கியசிரசிற்புண்ணாய் நொய்யவெண்மதியைச்சேரிற்
போக்கியமுகத்திற்புண்ணாம் பொலிவெனப்புகல்வர்பூவாய் 11

ஆறாமதிபதியும் ஏழாமிடத்தானும் சூரியனுடன் கூடி லக்கினத் திலிருக்க சிரசில் புண் உண்டாகும். மேற்சொன்ன கிரகமானது சந்திரனுடன் கூடி இருந்தால் முகத்தில் புண் உண்டாகும்.

பொலிவுறுசேயோடாகிற் புண்கழுத்தினிலாமென்க்
மெலிவிலாப்புதனோடாகில் வெடித்தபுண்ணாவிக்குள்ளே
வலிவிலாமறையோனோடே வாக்கியதலத்திற்புண்ணாங்
கலியிணப்பிருகோடேறக் கண்ணிலேபுண்ணுண்டாமே. 12

மேற்சொன்ன கிரகங்கள் செவ்வாயுடன் கூடி லக்கினத்தில் இருந்தால் கழுத்தில் புண் உண்டாம். புதனுடன் கூடினால் நாக்கில் புண் உண்டாம். வியாழனுடன் கூடினால் வாயில் உண்டாகும். சுக்கிரனுடன் கூடி இருந்தால் கண்ணில் புண் உண்டாகும்.

கண்ணிலாச்சநியைச்சேரிற் காண்பதுவாய்வுரோக
மொண்ணியராகுகேதுக் குதரத்தேவியாதியுண்டா

மண்ணிலக்கினத்தோன்மாலை மருவிமாலாலேநோக்கத்
தண்ணியர்கவியத்தானத் தலத்தெலாம்புண்கடானே. 13

சநியுடன் சேர்ந்தால் வாயு ரோகம் ஏற்படும் என்க. ராகு, கேதுவுடன் கூடினால் குதத்தில் (மூலம்) வியாதி ஏற்படும். லக்கினாதிபதி புதனுடன் கூடினாலும், பார்த்தாலும் வாயில் புண் உண்டாகும்.

தலமிலக்கினத்தோடெந்தத் தலங்கணேரிராகுதங்கி
யிலங்கியபுகரானோக்கி யியற்சநியுடனேகூடிப்
பலனிலாவாறோனோடு பதிந்திடப்பிறந்தபேர்க்குப்
பிலனுறுங்குதிரையாவாற் பேசியபயமுண்டாமே. 14

ஜென்மலக்கினத்தில் ராகு இருக்கவும், சுக்கிரனும், சநியும், 6ம் அதிபதியும் கூடி நிற்கவும் பிறந்த ஜாதகர்க்கு குதிரையால் பயம் ஏற்படும்.

பேசியவாறின்கோட்போய்ப் பிலமிலாவீனமாகக்
கூசியபாபர்பார்க்கக் கொடியகோடானுங்கூடத்
தேசிகன்றனக்குச்சார்வாந் தீதெனுஞ்சத்ருபீடை
மாசிலாதுரைக்கவேண்டின் மயிலியற்சாயன்மாதே. 15

ஆறாம் அதிபதி பலமற்று இருக்க, பாபர் கூட அல்லது பார்க்கவும் பிறந்த ஜாதகனுக்கு சத்ருக்களால் (எதிரியால்) பயம் உண்டாம்.

மயிலனனாய்த்தான்மாறோன்னு மெவாறெட்டீராறிற்
செயலிலாநீசவத்த மனங்களைச்சேருமாகில்
வியனிலாவிலக்கினத்தோன் வெகுபிலவானாய்நிற்கிற்
பயனிலாச்சத்ருவாலே பயமில்லையென்பர்பாவாய். 16

6ம் அதிபதி 6,8,12ல் நீச, அஸ்தமன கதியை அடைந்து லக்கினாதிபதி பலம் பெற்று இருக்க எதிரியால் பயம் இல்லையாம்.

பாவையேயாறின்கோட்போய்ப் பதிந்திடக்கோபுராங்சஞ்
சேவைசேய்கதிரோன்பார்க்கச் சென்மலக்கினத்தினாலும்
பூவையேபிலவானாகப் பொருந்திடச்சகலபேர்க
ளாவியைக்காப்பான்சொல்ல வரிதாறின்பலன்கடானே. 17

ஆறாம் அதிபதி கோபுராங்கிஷம் (தசவர்க்க கணிதங்களுள் ஒன்று ஆகும்) பெற்று சூரியன் பார்க்க ஜென்ம லக்கினாதிபதி பலம் பெற்று வலுத்து இருக்க, சகல ஜனங்களையும் காக்க வல்லவனாய் இருப்பான்.

ஆறாம்பாவம் - முற்றிற்று

ஏழாம் பாவம்

அரியதாமேழைநோக்கி யமையுறுதிரிகள்காமந்
துரியயாத்திரைசுகங்கள் புத்திரர்தோற்றந்தானு
முரியதாய்வருமைந்தர்க்கு முறுக்கமுள்ளதெல்லாந்
தெரியவையேழைநோக்கிச் செப்பலாஞ்செகத்தின்மாதே. 1

ஒருவருடைய ஜன்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவகத்தால் ஸ்திரீகள், காமம், தூரயாத்திரை, சுகம், புத்திரர் உற்பத்தி, இவருடைய சகம், இவைகளைச் சொல்லலாம்.

செகத்தினிலேழிலேழோன் சேர்ந்தசுக்கிரனும்பாம்பும்
பகுத்திடவிவனநேகம் பரத்திரிகமனந்தானாந்
தொகுத்திடுமேழிற்பார்ப்பான் றோன்றிடநோக்கத்தோய்வி
னிகழ்ச்சியாய்ப்பரத்தைவீட்டி னேமியானென்னலாமே. 2

ஏழாமிடத்தில் இவ்வதிபனும், சுக்கிரனும், ராகுவும், கூடி இருந்தால் இவன் பல ஸ்திரீகலுடன் இச்சை கொள்பனாவன். ஏழாமிடத்தில் வியாழன் இருந்தாலும் பார்த்தாலும், பரஸ்திரீகளின் வீட்டில் எப்போதும் இருப்பவனாவன்.

நேமித்தவேழின்கோட்போய் நிற்கவாறெட்டீராறிற்
காமித்தபாபநேழிற் கலந்திடநோக்குங்காரி
யூமித்ததிரில்லானா முரைத்தவேழுடையோன்வெள்ளி
தேமிக்கிற்பாபராகிற் றெகிட்டிடாக்கன்மிதானே. 3

ஏழாமதிபன் 6, 8, 12ல் இருந்து, 7ல் பாபக்கிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும் இவனுக்கு ஸ்திரீ சுகம் இல்லை. ஏழுக்கதிபன், சுக்கிரன் பாபர் வீட்டில் இருக்க அதிக காம இச்சை உடையவனாவன்.

தெகட்டிடாவேழின்கோளுஞ் செய்யசுக்கிரனுமாகப்
புகட்டிடாச்சுபர்கள்ராசி பொருந்திடச்சுபர்களானோர்
பகட்டிடாச்சுபர்கணோக்கிப் பாலகன்பிறக்குமாகின்
மிகுத்திடும்புவியின்மேலாய் வெண்குடைக்கிசமானாமே. 4

ஏழாம் அதிபனும், சுக்கிரனும், சுபர்கள் வீட்டில் இருக்க, சுபர்களால் பார்க்கப் பிறந்த ஜாதகர் வெண்சாமரமும், குடையும் உடைய அரசனாவன்.

வெண்குடையினில்வில்வாக்கோன் மிக்கவாறுடையோனேழோன்
கண்படுபுகரிந்நால்வர் கலந்துலக்கினத்திலேறத்

திண்படுபாவக்கோளுஞ் சேர்ந்திடப்பிறந்தமைந்தன்
பண்புறுகாமத்தாலே பசியதீதங்களாமே. 5

ஜென்மலக்கினத்திற்கு 2, 6, 7, அதிபதிகளும் சுக்கிரனும் ஆகிய நால்வரும் ஜென்மலக்கினத்தில் இருக்க இவர்களுடன் பாபக்கிரகங்கள் கூடிடப் பிறந்த ஜாதகர் அதிக காமாந்தகனாய் இருப்பான்.

பசியிலக்கினத்தின்கோளும் பாலகனாறின்கோளு
நிசிதமென்பாபரோடே நின்றிடக்கன்மியாவன்
சுசிதருமேழிற்றானே. துய்யவாறிரண்டோனொன்றோன்
பொசியுறவநேகம்பாவம் பொருந்தியேகன்மியாமே. 6

லக்கினாதிபனும், ஆறாம் அதிபதியும் பாபக்கிரகங்களுடன் கூடியிருக்க அதிக காமம் உடையவனாம், ஏழாமிடத்தில் 12க்கு அதிபதியும் லக்கினாதிபதியும் இருக்கப் பிறந்தவர் அநேக பாபசிந்தைகளை உடையவராய் காமியாய் இருப்பர்களாம்.

பொருந்தியவேழின்கோளும் புண்ணியவாக்கின்கோளு
நெருங்கியபாபராசு நேமித்தவிரண்டுபேரு
மிருந்திடவேழிற்றானே யிப்படிப்பிறந்தபேர்கள்
கருங்குழன்மடவார்தங்கள் காமத்தீயதிகமாமே. 7

ஏழாமாதி, இரண்டாமாதி ஆகிய இருவரும் பாபக்கிரகங்களாய் இருந்து ஏழாமிடம் இருக்கப் பிறந்த ஜாதகர் பெண்களின் மேல் அதிக ஆசை உடையவராய் இருப்பர்

காமத்தைக்களவிற்சேர்வன் கலந்தபத்துடையோன்வாக்கோன்
றேமொத்தவேழோன்கூடிற் சேர்ந்திடப்பத்தின்மீது
நேமித்தார்மறையோனேழோ னின்றிடவைந்தின்மீது
வாமற்றபாபர்நோக்க மக்களைக்கவனிப்பானே. 8

10,2,7க்கு அதிபதி இவர்கள் கூடி 10மிடம் இருக்கவும், வியாழன் 7மிடம் இருக்கவும், 5மிடம் பாபக்கிரகங்களால் பார்க்கப்படுமாயின் தனது புத்திர வர்க்கத்தரைக் கவனிப்பவனாவன்.

மக்கடன்னேழிற்பார்ப்பான் மான்மதிபிருகுநான்குஞ்
சிக்குமேலிவனநேக திரிகளைச்சேர்க்கையாவன்
சுக்கிரன்றேளிற்றோன்றிற் றோகையேபிலவானாகி
விக்கணமநேகம்பேரை யிச்சையாய்க்கவனிப்பானே. 9

ஏழாமிடம் வியாழன் இருக்க புதன், சந்திரன், சுக்கிரன் இவர்கள் கூடி நிற்கவும் பிறந்தவர் அநேகப் பெண்களைச் சேருபவனாவன். ஏழாமிடம் சுக்கிரன் பலம் பெற்று இருந்தால் அநேக பெண்களுடன் ஆசையாய் கூடுவான்

இச்சையாய்ப்பிருகுஞ்சேயு மேழினுக்குடையோன்றானு
மச்செனுமைந்துமேழு மமைந்திடவல்லால்வெள்ளி
துச்சிலாமதியுமாறிற் றோன்றிடப்பிறந்தோர்க்கெல்லா
முச்சிதமாகும்பேறு பிள்ளையுமென்னலாமே. 10

சுக்கிரனும், செவ்வாயும் ஏழாமதிபதியும், 5மிடத்திலும் ஏழா மிடத்திலும் இருக்கவும், அல்லது சுக்கிரனும், சந்திரனும். 6மிடம் இருந்தாலும் இவர்க்கு ஒரு பிள்ளை உண்டாம்.

ஒருதனமேழீராறி லுறைந்திடப்பாவக்கோட்க
டிருவுடைநெடியமாலுஞ் சேய்பிலவீநமாக
வருகளத்திரங்கடன்னை மலடியென்றுரைப்பர்மற்றுங்
கருகியதிரியில்லாத கணவனுமாமென்பாரே. 11

இரண்டு, பன்னிரண்டு, ஏழாமிடம் பாபக்கிரகங்கள் இருக்க புதனும், செவ்வாயும் பலமற்று இருக்க இவனுடைய ஸ்திரீக்கு குழந்தை இல்லையாம். மலடி என்று இவளை அழைப்பார்கள் இவளது கணவன் (ஜாதகன்) திடம் இல்லாதவனாவன்.

கணவனையன்றிவெள்ளிக் கதிரவனிரண்டுகோளு
மணமுறுவேழிலாக மலடிக்குப்புருடனாவ
ஹனுகலக்கினத்திற்சந்திர னுச்சமராசியாகக்
குணமெலாந்திரிருபங்கள் கொள்வரிக்குறியுள்ளோரே. 12

சுக்கிரனும், சூரியனும் ஏழாமிடத்தில் இருக்க மலடிக்கு கணவனாவன். ஜென்மலக்கினத்தில் சந்திரன் உச்சம் பெற்று இருக்க பெண்களின் உருவமும் பெண்ணின் குணமும் உடையவனாம்.

கொள்ளுமேழிராசியானாற் குறிப்பதுபுருடராண்கோள்
கள்ளுறுவர்க்கமாகிற் களத்திரம்புருடரூபம்
விள்ளுமத்திரத்திலாண்பெண் மேவியகிரகஞ்சாரத்
தெள்ளுறுசமரூபங்கள் சேர்கின்றதிரிகளாமே. 13

ஏழாமிடம் ஆண்ராசியாயிருந்து ஆண் கிரகமானது அதில் அமர்ந்திருக்க இவனது மனைவி ஆண்ரூபம் உடையவளாய் இருப்பாள்.

இவ்விடத்தில் ஆண்கிரகமும், பெண்கிரகமும் கூடி இருக்குமேயானால் ஆணும் பெண்ணும் சேர்ந்த சாயலை உடைய மனைவி வந்து வாய்ப்பாள்

ஆண்கிரகம் ; சூரியன், செவ்வாய், வியாழன்
பெண்கிரகம் : சந்திரன், சுக்கிரன், சனி,
அலிகிரகம் ; புதன், ராகு, கேது

சேரவேழிடத்திற்செவ்வாய் சேயினங்கிசங்களேனு
மாரவவ்வீடுசேய்வீ டாகினுமலதிலக்ன
நேரச்சேயந்தவேழி னீசாத்தமனக்கோணிற்கத்
தூரத்தாள்கணவனில்லா டொழும்பாபர்சோர்வாற்சாவே. 14

ஏழாமிடத்தில் செவ்வாய் இருந்தாலும், 7ம் அங்கிஷாதிபதி செவ்வாயே ஆனாலும், 7ம்வீடு செவ்வாயின் வீடாக இருந்தாலும், அல்லது ஜென்மலக்கினத்திற்கு 7ல் நீச, அஸ்தமனமடையப் பெற்றகிரகம் இருக்க கணவனில்லாதவளாம். இவளைப் புணரும் புருடர் மாண்டு போவர். (பெண் ஜாதகம்)

சோர்விலாவேழினற்கோ டோன்றிடச்சுபர்கள்பார்க்கச்
சேர்சுபராசியாகத் திரிவருஞ்சொரூபியாகச்
சாருமேழ்பிலவீனத்தாற் சந்திரனிருக்கச்சண்டை
கோதையர்வாய்க்குமிக்கேற் குணமுளதிரிவாய்ப்பாமே. 15

7மிடம் சுபக்கிரகமிருக்கச் சுபர் பார்க்க, இவ்வீடு சுபக்கிரக வீடாயிருக்க, நல்ல அழகுடைய மனைவி வாய்ப்பாள். 7மிடம் பலஹீன மடைந்து, இதில் சந்திரன் இருந்தால் சண்டை செய்பவள் வருவாள்.

குணவியாமேழில்வெய்யோன் குறுகிடவுச்சமாட்சி
யணுகிடச்சுபர்கள்பார்க்க வவன்றிரிசாதுவாவா
ளுணர்வுறுமதியொன்றேழா றிறையவர்நீசச்சத்ரு
விணையிலாப்பரத்தையாவ ளிவன்றிரியென்னலாமே. 16

ஏழாமிடத்தில் சூரியன் ஆட்சி, உச்சம் பெற்றிருக்க, இவர்களைச் சுபக்கிரகமானது பார்க்க இவன் மனைவி சாதுவாயிருப்பாள். சந்திரன் 1, 7, ம் இருக்க இதுவும் நீசம், சத்துரு, வீடாயிருந்தால் பரத்தையாக இவனது மனைவி ஆகுவாள்.

இவனிலக்கினத்தோனேழா மிடத்தினிற்சுபரோடேகத்
தவநெறிகுலத்திற்பெண்ணா மந்தலக்கினத்தோனேழோன்
புவனியிற்பாபராகிப் பொருந்திடப்பிறந்தபேர்க்குக்
கவனியாயிழிகுலத்தின் காரிகைகைக்குள்ளாமே. 17

இவனது ஜென்மலக்கினாதிபதி ஏழாமிடத்தில் சுபக்கிரகங்களுடன் கூடி இருந்தால் நல்ல தவம் பொருந்திய குலத்தினில் பெண் உண்டாகும். ஜென்மலக்கினாதிபதியும், ஏழாமதிபனும் பாபக்கிரகமாகிக் கூடி இருந்தால் இழிந்த குலத்தில் (தாழ்ந்த ஜாதி) பெண்ணை அடைவான்.

கைக்குளாந்திரிகடங்கள் காந்தியின்குணஞ்சொருப
மெய்க்குளாகிருகியெல்லா மெய்ப்படவுரைக்கவேண்டின்
மைக்குளாம்விழியினாளே வாய்த்திடுங்கோட்கணோக்கு
மிக்கதாங்கிரகத்தாலே விதங்களையறியலாமே. 18

இப்படி வருகிற பெண்ணின் அழகு, குணம், உடலமைப்பு முதலியவற்றை இத்தான பலமறிந்து சொல்லவேண்டும்

விதங்கொளும்பாபர்மிக்கேல் விதவையாந்திரியாகித்தற்
கிதம்பெறாமலடிநட்ட மிந்துவேல்பரத்தைசேயேற்
சதங்கொளுஞ்சண்டியாவள் சாற்றியசனியிராகுச்
சதன்றனக்கேழினின்றோன் றோயமங்கிலியாஞ்சொல்லே. 19

ஏழாமிடம் பாபக்கிரகமானது இருந்தால் விதவைப் பெண்ணை மணம் புரிவான். இதுவும் சூரியனாகில் மலடியாம். சந்திரனாகில் பரத்தையாம். செவ்வாயானால் எப்போதும் சண்டை செய்பவளாம். சனி ராகுவானால் விதவையாம்

பொருபுதனேழிலைந்திற் புண்ணியர்பிலமாய்நோக்கின்
மருளுமாறுடையோன்கூட வல்லதுநோக்குமாகி
னுருகியகுழவிபெற்றோ ருடலாய்ப்பெறுவானன்னை
பெருகியதிரிகளுண்டாய்ப் பிள்ளையும்பிதாவுக்காமே. 20

புதன் 7, 5, மிடம் இருக்க சுபக்கிரகமானது பலம் பெற்று இவரைப் பார்க்க 6ம் அதிபன் இவருடன் கூடிட அல்லது பார்க்க ஜாதகனைத் தாய் வேறொரு புருஷனுக்குப் பெறுவாள். (வேசி) நிறையப் பெண்களும், பிள்ளைகளும் தந்தைக்கு உண்டாம்.

பிள்ளையினேழிற்பாபர் பேசியநீசமாகி
விள்ளுவார்திரிசாமொன்றேழ் மீனமாய்ச்சநியிருக்கத்
தள்ளுவார்திரிசாவாகச் சநிசெவ்வாயுடையராசித்
தெள்ளுறுநவாங்கிசங்கள் சேரப்பொன்பரத்தைசேய்க்கே. 21

7மிடம் பாபக்கிரகமானது நீசம் பெற்றிருக்க, இவனது ஸ்திரீ இறந்து போவாள். லக்கினத்துக்கு 1,7மிடம் மீனமாகி இதில் சநியிருக்க இவனைது ஸ்திரீ இறப்பாள். லக்கினத்திற்கு 7ம் வீடு, சனி, செவ்வாயுடைய நவாம் ஷமாயிருந்தால் இவனது ஸ்திரீ பரத்தையாவாள்.

சேயுடனேழிற்செவ்வாய் சேய்சநியிரண்டுபேரு
மாயுறத்திரிபரத்தை யந்தவேழெட்டிற்பாபர்
போயுறப்பன்னிரண்டிற் பொருந்தியசெவ்வாய்நிற்கப்
பேயுமேழுடையோனாறெட் டீராறிற்பெண்டீர்சாமே. 22

7மிடம் செவ்வாய், சனி இருக்க இவன் ஸ்திரீ பரத்தை ஆகும், 8மிடம் பாபக்கிரகமிருந்து 12ல் செவ்வாய் இருக்க, 6,8,12ல் 7க்கு அதிபன் இருக்க இவனது ஸ்திரீ மாண்டு போவாள்.

பெண்டிலாவிரண்டிற்பாபர் பெருத்திடப்பெருத்தோரோடே
பண்டையேழுடையோன்கூடப் பாபரும்பார்க்குமாகிற்
கொண்டிடும்பெண்டிர்மூன்றாங் குறிப்பதீக்கோட்களாலே
தண்டையின்காலினான்றன் சாதகப்பலனிதாமே. 23

இரண்டாமிடம் பாபக்கிரகங்களிருக்க, 7ம் அதிபன் இவருடன் சம்பந்தமுற்றிட பாபக்கிரகத்தால் பார்க்கப்படுமாயின் இவனுக்கு 3 ஸ்திரீகள் சம்பந்தமுண்டாயிருக்குமாம்.

சாதகனேழின்கோட்போய்ச் சார்ந்திடவுச்சமாட்சி
யோதுகெந்திரத்ரிகோண முற்றிடப்பத்தோன்பார்க்கக்
காதலாலிவனநேகங் களத்திரந்தன்னைச்சேர்வன்
றீதிலாக்களத்திரங்கள் சேருமென்றியம்பலாமே. 24

ஏழாமாதி ஆட்சி உச்சம் பெற்று இருக்க், இது கேந்திர திரிகோணமாகிய வீடாயிருந்து (1,4,5,7,9,10) பத்தாமிடத்தான் பார்வை பெற்றால் இவன் அநேக களத்திரங்களுடன் நன்றாய் இருப்பவனாகும்.

சேருமேழுடையோன்கெந்திரஞ் சேர்ந்திடச்சுபர்கள்பார்க்கச்
சோருமென்றுரையாநல்ல சுபர்கடன்ராசியேற
வாருமென்சுபக்கோடங்க ளங்கிசமேறுமாகி
னேருறுமனைவியொன்றே நிலவாமென்னலாமே. 25

7ம் அதிபதி 1, 4, 7, 10 ஆகிய ஸ்தானங்கள் இருந்து சுபக்கிரகம் பார்வை பெற அல்லது சுபர்களுடைய வீடாய் இருக்க, அல்லது சுபக்கிரக அங்கிஷம் பெற்று இருக்க இவனுக்கு ஒரு மனைவி உண்டாம்.

நிலையிலேழுடையோன்மாலு நின்றிடப்பாபரோடே
மலைவுறுநீசச்சத்துரு வர்க்கமாய்வாழ்கின்றாலுஞ்
சிலையுறுபாபர்கூடிற் றீயவனோக்குமாகிற்
குலையுறுகளத்திற்றங்கள் குலங்களுநாசமாமே. 26

ஏழாமாதியும் புதனும் கூடிப்பாபக்கிரகத்துடன் சம்பந்தமுற, அல்லது நீச, சத்துரு கிரகத்தின் வர்க்கத்தில் இருந்தாலும் (சாரம்) பாபர்களுடன் கூடிப் பாபக்கிரகத்தின் பார்வை பெற்று இருந்தாலும் இவனுக்கு வருகின்ற மனைவியர்களும் இவன் குலமும் அழிந்து போகும்.

குலமகனேழோனல்ல கோட்களங்கிசங்களேறி
நலனுறுகோட்கணோக்கி னல்லவங்கிசத்திற்பெண்ணாஞ்
சிலைநுதலேழோன்பாபர் சேர்ந்திடந்தீயோர்நோக்கப்
பலனிலாவங்சமேறப் பழித்தவங்கிசந்தாம்பொன்னே. 27

ஏழாமாதி சுபக்கிரகங்கனின் அங்கிஷம் பெற்றிருக்க சுபக்கிரகங்களின் பார்வை பெற்று இருந்தால் நல்ல குலத்தில் பெண் உண்டாகும். ஏழாமாதியும் பாபக்கிரகமும் கூடிடவும் பாபக்கிரகத்தின் பார்வை பெற்று இருக்க அல்லது நீச சத்துரு அங்கிஷம் பெற்று இருக்கவும் பாபகாரிய மாகிய தொழிலைச் செய்கிற ஈன சாதியில் பெண் உண்டாகும்.

பழித்திடாவேழிற்கூடிப் பதிந்ததெத்தனைபேருண்டோ
நெளித்திடப்புகரினோடே நிற்பதெத்தனைபேருண்டோ
களிப்பினாலிவரையெண்ணிக் களத்திரசங்கைசொல்ல
வழுத்தலாங்கோட்களின்னம் வகுப்புவேறென்னலாமே. 28

ஏழாமிடத்தில் எத்தனை கிரகமிருந்ததோ, அல்லது சுக்கிரனுடன் எத்தனை கிரகமிருந்ததோ அவர்களை எண்ணிக் களத்திரமாகிய மனைவியர்கள் எத்தனை பேர் இச் சாதகனுக்கு உண்டாகும் என்று கூற வேண்டும்.

வகுத்திடுமேழினுச்சமாக வெத்தனைபேருண்டோ
வுகுத்திடும்வெள்ளியோடே யுச்சமெத்தனைபேருண்டோ
தொகுத்திடுந்திரியாமேழோன் சுக்கிரவீடாய்வாக்கி
லகத்தியகோளாய்வெள்ளிக் கணுகுவோரமைத்தவீடே. 29

ஏழாமிடத்தில் உச்சம் பெற்ற கிரகம் எத்தனையோ என்றும் சுக்கிரனுடன் எச்சம் பெற்றகிரகம் எத்தனை உள்ளதென்றும் உணர்ந்தும் அப்பால் ஏழாமிடம் சுக்கிரன் வீடாய் இருந்து சுக்கிரன் பெற்ற நிலையை உணர்ந்து களத்திரம் எத்தனை என்று கூற வேண்டும்.

அமைத்தவேழுடையோனோடே யமந்தகோட்தன்னிலேனு
மிமைத்தவாக்குடையோனோடே யிருந்தகோட்களிலேயேனு
நமைப்பிலவீநமெண்ணி நாசமாந்திரியைச்சொல்லச்
சுமைப்பிலமுடையோரெண்ணிச் சுகத்திரிதுகைசொல்வாயே 30

ஏழுக்குடையவனோடு இருக்கின்ற கிரகத்தைக் கொண்டும் 2க்கு அதிபனோடு இருந்த கிரகத்தைக் கொண்டும் பலம், அபலம் முதலியன் அறிந்து வருகின்ற மனைவியரின் தொகையை நிர்ணயம் செய்து கூற வேண்டும்.

துகையிலோர்கிரகமிக்கேற் சுகத்திரியொன்றேயாகுந்
திகையிலக்கினத்தோனேழோன் சேர்புடமொன்றாய்க்கூட்டி
வகையுறுராசிப்பார்ப்பான் வருமெனின்மணநாளாகு
நகைமதிராசிபாபர் நண்ணுமேலிவர்களாலே. 31

மேற்சொன்னவாறு சம்பந்தப்பட்ட கிரகமானது ஒன்றானால் ஒரு ஸ்திரீ என்றும் கணக்கிட்டும் சொல்லவும். லக்கினாதிபதியின் புடமும். 7க்குடையவன் புடமும் ஒன்றாய்க்கூட்டி. (புடம் என்பது கிரகம் நின்ற பாகை, கலை, விகலை ஆகும்) வருகின்ற ராசி எதுவோ அவ்விராசியில் வியாழன் கோசாரத்தில் வரும் போது மணமுண்டாகும்.

நண்ணியகலியாணங்க ணட்புக்ரேழோனேழின்
புண்ணியருடனின்றோரேழ் பொருந்தினோர்புகழ்ந்தவாக்கோ
னெண்ணியவாக்கினின்றா னீரைந்தொன்பானின்கோட்கள்
பண்ணியதிசைவிசித்ரம் பாரிற்கல்யாணமாமே. 32

ஒருவருடைய ஜனன ஜாதக விதிப்படி சுக்கிரன், 7க்கு அதிபன் 7க்குடைய வனோடு சம்பந்தமுற்ற கிரகம் இரண்டாம் அதிபதி, இரண்டில் நின்றவன், 9க்குடையவன், இவர்களுடைய திசா புத்தி காலங்களில் திருமணமுண்டாகும் என்று கணக்கறிந்து சொல்லவும்.

பாரினிற்சகலபேர்க்கும் பாக்கியம்பவிசுநற்கோன்
சேர்திசையாதிமாறத் தீயவர்சுபருங்கூடிற்
சார்வதுசேரும்பின்னோர் தன்றிசைமத்தித்ன்னிற்
சோர்விலாக்கலியாணங்க டடங்குமென்றுரைப்பாதோகாய். 33

இவ்வுலகில் பிறந்த எல்லோருக்கும் பாக்கியம், கல்யானம் பவிசு, முதலியன சுபக்கிரகங்கள் முதலிலும் மற்றும் சுபர் பாபர் சம்பந்தமுற்றால் மத்தியிலும் உண்டாகும்.

துடங்கலக்கினத்தோனின்ற தூய்நவாங்கிசத்தோன்ராசி
யடர்ந்துபார்ப்பான்வெண்டிங்கள் ஆகுநாள்விவாகமாகு
மிடங்களேழுடையோன்வெள்ளி யிவர்தன்னிராசிதன்னிற்
றடங்கணாய்மறையோன்றிங்கட் சாரிற்கல்யாணந்தானே. 34

ஜென்மலக்கினாதிபதி நின்ற நாவங்கிஷாபதிராசியில் வியாழன் சந்திரன் வரும் காலங்களில் திருமணமுண்டாகும். ஏழுக்கதிபதி, சுக்கிரன் இவர்கள் வலுப்பெற்றுத் தனது ராசியில் அமர்ந்து வியாழன், சந்திரன் வரும்காலம் திருமணமுண்டாம்.

சார்கின்றவாக்கில்பாபர் தரித்திடஸ்திரீசாவாகும்
பாரென்றதிரிக்கும்வாக்கிற் பாவரெற்பரிவாம்பாரி
சீர்கொண்ட்வேழில்வெய்யோன் சேர்ந்திடமலடிசேர்வா
ணேர்கின்றமதியோனிற்கில் னிருத்தஞ்செய்பெண்ணாவாளே. 35

இரண்டாமிடத்தில் பாபக்கிரகமிருந்தால் பெண் இறந்துபோவாள் ஒரு பெண்ணுக்கு தனது லக்கினத்துக்கு 2மிடம் பாபக்கிரகமிருந்தால் கணவனை இழப்பாள், ஏழாமிடம் சூரியன் இருந்தால் மலடி ஆயிருப்பவள் சேருவாள். சந்திரன் ஏழாமிடம் இருந்தால் நாட்டியம் ஆடுகின்ற பெண் வந்து சேருவாள்.

நிருத்தமாஞ்செவ்வாய்புந்தி நிகரில்லாமறையோன்வெள்ளி
தரித்திரச்சநியிராகு தத்தியகேதுசார்கிற்
பெருத்திடும்விவாகம்வேசை பிராமணத்திரிகட்சூலி
துரத்தியுநிராகத்தாள்பின் சேரரையாந்துரத்தாளே. 36

செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது இவர்கள் 7ல் இருந்தால் வேசி, பிராமண ஸ்திரீ, நீசசாதிப் பெண்இவர்களுடன் பந்தம் உண்டாகும்.

தூரம்போய்வனத்திற்றொய்வான் றூய்வெள்ளிகதிரோனாகில்
வீரத்தான்மதியேனல்ல வீடுசேய்க்கிடிந்தவீடாம்
வாரத்தால்புதனேல்சித்ர வன்னத்தான்மச்கவீடாந்
தீரத்தான்மறையோனாகிற் றேவராலயங்களாமே. 37

7ல் சூரியன் இருந்தால் வனத்திலும், சந்திரன் ஆகில் நல்ல வீட்டிலும் செவ்வாயானால் இடிந்த வீட்டிலும், புதன் ஆகில் நல்ல வண்ணம் தீட்டப்பட்ட மச்சு வீடும் (மாடி வீடு) வியாழனாகில் தெய்வ ஆலயமும் இவன் சேருவான்.

தேவனும்புகரேழாகிற் சிலம்பொருந்தியதிற்சேர்வான்
கேவறாசநியேன்மைந்தன் கீரிடைபாழ்மடங்களாகுந்
தாவியபாம்பேல்விஷ்ணு தலஞ்சிவதலங்களாகும்
பாவியசுபரேலிந்தப் படிதலம்பகர்வர்மாதே. 38

சுக்கிரன் 7மிடத்தில் இருந்தால் ஜலமுள்ள இடத்திலும், சனி இருந்தால் பாழ்மடத்திலும், ராகு, கேது ஆனால் விஷ்ணு சிவ ஆலயங்களிலும் ஸ்திரீயுடன் சம்போகம் செய்பவனாவன். இவ்வாறு பாபர் சுபர் சம்பந்தமுற்ற நிலை அறிந்து போக நிலை கூறவும்.

படிமகனானசேயே வதிந்திடப்பதியில்வெள்ளி
யடியினங்கிசங்களேற வைந்துமேழுடையோனாகத்
துடியிடையார்சொற்கேட்பான் சொற்றிருவெய்யகோளாங்
கொடிதுகள்பலன்கள்சாவு கூறலாங்குணங்கொண்மாதே. 39

ஏழாமிடத்தில் செவ்வாய் கிரகமானது சுக்கிரன் அங்கிஷம் பெற்று 5, 7க்கு அதிபதியாயிருந்தால் பெண் சொற்படிக் கேட்டு நடப்பவனும் 7ம் அதிபதியால் கொடிய பலன்களையும் சாவு முதலியனவும் கூறலாம்.

கூறுமேழுடையோன்வெள்ளி கொடிதிவாச்சுபர்களாக
மீறியபிலவானாக மிக்கவேழிடத்தேநிற்க
நீறியபாபர்கூட நின்றியபாபர்நோக்க
சீறியகுழவிக்கான திரியனுமரணமாமே. 40

ஏழுக்குடையவன், சுக்கிரன் ஆகிய சுபக்கிரகமாயிருந்து 7ல் நிற்க இவருடன் பாபக் கிரகமானது சம்பந்தப்பட அல்லது பார்க்கப் பிறந்த ஜாதகர் மனைவி இறந்து போவாள்

திரிதருமேழிற்கெட்டோன் றிசையபகாரந்தன்னின்
மரிபடும்வெள்ளியட்ட வர்க்கங்கூடியராசிக்குங்
கருவியசநிவந்தக்கால களத்திறமாணமாகுங்
குறியதுதப்பாதென்றார் கோதறவுணர்ந்தமேலோர். 41

ஜென்ம லக்கினத்திற்கு ஏழுக்கு எட்டாம் இடத்ததிபதி (ஏழுக்கு எட்டாமிடம் என்பது இரண்டாமிட மாகும்) திசா, புத்தி காலம் சுக்கிரன் அஷ்ட்ட வர்க்கத்தில் நின்ற ராசிக்கு சனி வரும் போது களத்திர மரணமாகும் என்பது நிச்சயம்.

கோதறவேழோன்பாரி சாதாகவர்க்கங்கூட
வேதியன்சேரநோக்க மென்சுபராசியாகச்

சாதகன்றயிர்நெய்பாற்றேன் றருபழம்பருப்போடுண்டு
பூதலந்தனிலூகத்தாற் போகபோக்கியமுமாமே. 42

7க்கு அதிபன் பாரிசாதாங்கிஷவர்க்கம் பெற வியாழன் பார்க்க அல்லது கூடிட இது சுபர்வீடாய் இருக்குமேயானால் ஜாதகன் தயிர், பால், நெய், தேன், பருப்பு, பழம் முதலியன அருந்தவல்ல போக பாக்கியம் உடையவனாய் இருப்பான்.

போகஞ்செய்யேழோனோடே புக்கவேபுகரேழாக
வேகமாய்நோக்கியேழா மிடம்புகர்வீடதாகத்
தோகையர்நிதம்பந்தன்னைச் சும்பநஞ்செய்வன்பின்னுந்
தாகஞ்செய்வாக்கோனோடேற் சார்ந்தவிப்பலன்கடானே. 43

ஏழாமிடத்தானுடன் சுக்கிரன் கூடி 7ல் இருந்தாலும், 7மிடம் சுக்கிரன் வீடாயிருந்தாலும் பெண்ணின் குறியை சும்பனம் (முத்தம்) செய்பவனாம். இவ்வாறு இரண்டாமிடத்தானும் கூடினாலும் இப்பலனே ஆகும்.

சரியிலாப்பத்தின்கோளுந் தயங்கியபுகருமாகப்
பரிவினாலேழினிற்கப் பாலகன்பிறக்குமாகிற்
சுரிகுழன்மடவார்த்தன்னைச் சும்பனஞ்செய்வனென்பர்
தெரிவுறுமறைவல்லோர்கள் செப்பியபலனிதாமே. 44

10ம் அதிபதி சுக்கிரன் இவர்கள் 7ல் இருக்கப் பிறந்த ஜாதகர் பெண்ணை முத்தம் இடுபவராம் என்று வேதம் உணர்ந்த பெரியோர்கள் சொல்லுவர்.

செப்பியவேழோனேனுஞ் சிறந்தடும்புகரோனேனுந்
தப்பியேபார்ப்பானேனுந் தஷ்பரத்திரியைச்சார்வன்
வைப்பிலேழுடையோனேழில் வரடிமேலிச்சையாவ
னிப்படிமதியேன்மோகி யென்பர்சம்பத்தினாட்கே. 45

ஏழுக்கதிபனோ சுக்கிரனோ, சூரியனோ, இவ்விடம் இருந்தால் பரஸ்திரியைப் புணருவான். 7க்குடையவன் 7ல் இருந்தாலும் இவ்விடம் சந்திரன் இருந்தாலும் அதிகமோகமுடையவனாவன்.

என்பவவேழின்கோட்போ யிருந்திடச்செலராசிக்கு
னன்புறுபுகரோனேனு மமைந்திடச்செலராசிக்குண்
மின்பெறுதீர்க்கரூப மிகுபகைதகையுளாளர்
முன்புகரேழோனோக்க மோகநீர்நிதம்பத்தாட்கே. 46

ஏழுக்கதிபன் சலராசியில் அமர்ந்து (மீனம், கடகம்) நிற்கவும், சுக்கிரன் ஜலராசியில் இருந்தாலும் சுக்கிரனும், ஏழாமதிபனும் பார்த்தாலும் பெண்ணின் குறியில் அதிக காமநீர் சுரக்கும் என்க.

மோகமாமேழிற்பாவர் மொய்த்திடப்பாபர்நோக்கிற்
போகமேசெய்யவேண்டாள் புருடனையிகழ்ச்சியாக
மேகநீர்நிதம்பத்தில்லாள் விறுவிறுப்புடையார்பேரிற்
றாகமாயிச்சையாவன் றருபலனெல்லாஞ்சாற்றே. 47

ஏழாமிடம் பாபக்கிரகம் இருந்தாலும், பார்த்தாலும் இவனது மனைவியானவள் மோகம் செய்ய எண்ணமில்லாதவளாய் பெண்குறியை சும்பனம் செய்பவனாய் இருப்பான்

ஏழாம்பாவம் – முற்றிற்று

எட்டாம் பாவம்

தருபலனெட்டினாலே சார்வதையுரைக்கவேண்டிற்
கருகியவ்வாயுளோடே கருதியவரிட்டந்தானும்
பெருகியரெணங்கள்சார்வு பிழைகளுமெட்டின்கோளான்
மருவலர்குழலினாளே வருபலனறியலாமே. 1

எட்டாம் பாவகத்தினால் ஆயுள், அரிஷ்டம், புண்கள், குற்றம் முதலிய பலன்களைத் தெரிந்து சொல்லலாம்

அறிவினாலெட்டின்கோட்போ யமைவதுபனிரண்டேனு
நெறியினாலாறிலேனு நின்றிடப்பாபரோடே
செறிவிலாவற்பவாயுள் சேர்ந்திலக்கினத்தானோடே
மறிபடப்பனிரண்டாறின் மகவுக்கற்பாயுவரமே. 2.

எட்டாம் அதிபதி 12ம் இடத்திலோ ஆறிலோ இருந்து பாபர்சேர்க்கை பெற்றால் அற்பாயுளாம். இவ்வட்டமாதிபதி லக்கினாதிபதியுடன் கூடி 12, 6ல் இருந்தாலும் அற்பாயுளாம்

மகவினுக்கெட்டோனெட்டேன் மதலைக்குத்தீர்க்கவாயுள்
சுகவிலக்கினத்தோனோடே தோன்றிடவெட்டின்கோளு

முகவிலாவாறின்கோளு மூவருமொன்றாய்க்கூடிப்
புகுவதுபனிரண்டாகிற் புதல்வன்றீர்க்காயுவாமே. 3

அட்டமாதிபதி 8லேயே இருக்கில் ஆயுள் தீர்க்க முண்டாம் ஜென்மலக்கினத்துக்கு அதிபதியும், எட்டாமாதியும் ஆறாம் அதிபனும் ஒன்றாய்க் கூடிப் பன்னிரெண்டிலிருந்தால் தீர்க்காயுளாகும்.

புதல்வன்றன்பத்தின்கோளும் பொருந்துலக்நத்தின்கோளு
மிதமுடையெட்டின்கோளு மிருக்கக்கெந்திரத்ரிகோண
மதலைக்குத்தீர்க்கவாயு ளவர்பிலவீநமாக
நிதியிலாச்சநியுந்தீதே னிலவரமற்பவாயுள். 4

10ம் அதிபனும், லக்கினாதிபனும் அட்டமாதிபனும், ஆகிய இவர்கள், 1, 4, 5, 7, 9, 10 ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் தீர்க்காயுளாகும். மேற்சொன்ன கிரகநிலையில் நீச, அஸ்தமன பகை பெற்று துர்ப்பல மடைந்து சனி கெட்டு இருந்தால் அற்பாயுளாகும்.

நிலவரம்பத்தோனெட்டோ னிலக்கினத்துடையோன்மிக்கேன்
மலைவிலாத்தீர்க்கவாயுண் மத்திபமிரண்டுமிக்கேற்
பிலமொன்றேலெண்ணான்காகும் பிலவீனர்மூன்றுமாகி
விலையென்றார்வயதுமெத்த வீராறுக்குண்டென்பாரே. 5

10, 8, 1ம் அதிபர்கள் பலமடைந்திருந்தால் ஆயுள் தீர்க்கம் மேற்சொன்னவர்களின் இருவர் வலுப்பெற்று இருந்தால் 32 வயதும் மூன்று கிரகமும் பலமற்று இருந்தால் 12வயதும் ஆயுளாம்.

ஈரமிலெட்டோன்பாப ரிராசியிற்பாபரோடே
சார்வதாறெட்டீராறேற் சாதகனற்பவாயுள்
சோரவட்டமனற்கோளாய்ச் சுபர்வீட்டிற்சுபர்களோடே
சேரவிக்குழவிக்கெல்லாந் தீர்க்காயுளென்னலாமே. 6

எட்டாமாதி பாபக்கிரகத்துடன் கூடிப் பாபர் ராசியாக ஆறு, எட்டாமிடமாயும், பன்னிரண்டாமிடமாகவும அமர்ந்தால் அற்ப ஆயுளாகும். எட்டாமாதி சுபக்கிரகமாகிச் சுபர் வீட்டில் சுபர்களுடன் கூடி இருக்க தீர்க்காயுளாகும்

தீர்க்கலக்கினத்தோனாறெட் டீராறிற்சேரவல்லா
லார்க்குமட்டமத்தோனேனு மாறெட்டுபனிரண்டாகப்
பார்க்குங்கோள்பாபராகப் பாபர்கள்கூடவல்லாற
கூர்க்கத்தமனநீசங்கள் கொடியவீடற்பவாயுள். 7

ஜென்மலக்கினாதிபதி 6, 8, 12ல் இருக்க அல்லது 8மாதி 6, 8, 12ல் ஆயிருக்க, பாபர்கள் இவருடன் கூட அல்லது பார்க்க, நீச அஸ்தமனமடைந்து இருந்தால் அற்பாயுளாம்.

கொடிதிலாவிலக்கினக்கோள் கேரதிலாவட்டமத்தோ
னெடியவுச்சங்களாக நிற்கவல்லதுநிற்போர்க
டடியினாற்கெந்திரகோணந் தோன்றியேநிற்கின்றாலும்
வடியினிற்றீர்க்கவாயுள் பலனிவர்க்கென்னலாமே. 8

லக்கினாதிபன், எட்டாதிபதி, உச்சம் பெற்று இருக்க அல்லது கேந்திர திரிகோணம் ஏறி வலுப்பெற்று இருக்க ஆயுள் தீர்க்கமுண்டாகும்.

என்னபன்னிரண்டோன்பன்னி ரண்டினின்மிகத்தீர்க்காயுள்
பின்னிலக்கினத்தோனெட்டோன் பிலன்செய்கேந்திரத்திற்காயிற்
றுன்னியொன்பதுமூறொன்றில் லுறைந்திடச்சுபர்கள்பார்க்கச்
சொன்னமென்சரீராரோக்யந் தோன்றுதீர்க்காயுட்டானே. 9

12மிடத்தில் இவ்வதிபதியே வலுப் பெற்று இருக்க ஆயுள் தீர்க்கம். லக்கினாதிபதி, அட்டமாதிபதி கேந்திரம் பெற்று வலுவடைந்திருந்தால் ஆயுள் தீர்க்கம், 9,3, 1ம் இடம் இவற்றில் 12ம் அதிபன் இருந்து சுபர் பார்வை பெற்றால் ஆயுள் தீர்க்கம், ஆரோக்கியம் உண்டாம்.

தோன்றியவட்டமத்தோன் சுவரவாறெட்டீராறி
லூன்றிடத்திசைவிசித்திர முற்றநாண்மரணமாவன்
மேன்றகுசநிபோய்நின்ற வீட்டுக்கோட்டிசையிலெட்டோன்
போன்றிடுமபகாரத்திற் புதல்வர்க்குமரணமாமே. 10

எட்டாமாதி 6,8, 12ல் இருக்க இவர்களது திசா, புத்தி காலம் வரும் போது மரணமடைவான். சனி இருந்த வீட்டிற்கு 8ம் அதிபதி திசா புத்தி காலம் வரும்போது இவனது புத்திர வர்க்கத்தார்க்கு மரண முண்டாகும்.

புதல்வர்க்குமரணமெட்டோன் புரிதிசையபகாரத்திற்
கதவித்தங்கெட்டோனோடே கலந்தகோட்டிசையிலேனு
மிதமித்தவிரண்டுபேரி லெவர்பிலவீனத்தாரோ
பதறிச்செய்திசைவிசித்ரம் பாலகன்மரணமாமே. 11

எட்டுக்குடையவன் திசா, புத்தி காலம் புதல்வர்க்கு மரணமுண்டாம் அல்லது 8க்குடையவனோடு சம்பந்தப்பட்ட கிரகத்தின் திசா புத்தியிலோ ஏற்படும், இதில் கிரகவலுவறிந்து பலனை நிர்ணயம் செய்து கூறவும்.

பாலகன்லக்கினக்கோள் பதியவாறெட்டீராறிற்
கோலியராகுகேது கூடுமேற்றிசையிற்கொல்லுஞ்
சாலலக்கினத்தோனெட்டோன் றன்னுடன்கூடிநின்றான்
மேலுமத்திசைவிசித்ர மிவனுக்குமரணமாமே. 12

லக்கின அதிபன் 6,8,12ல் இருக்க, ராகு, கேது சம்பந்தம் ஏற்பட்டால் இவர்களது திசா காலம் மரணமுண்டாம் லக்கினாதிபன். அட்டமாதிபன். இவருடன் கூடி இருந்தால் இவர்களது திசாபுத்திகாலம் மரணமேற்படும்.

இவனுக்கெட்டுடையகோட்போ யிருந்திடவக்கோளேனுங்
கவனித்துச்சொன்னகோட்போய்க் கலந்தராசிக்கோளேனும்
புவனிக்குளிவர்கணோக்கிற் பொருந்திசையபகாரத்திற்
றவனித்துமரணமாவன் றையலேயிவனென்பாரே. 13

ஜென்மலக்கினத்திற்கு எட்டாமாதிபதி இருந்த வீட்டாதிபதி திசா புத்தியிலோ அல்லது எட்டாமதி இருந்த வீட்டாதிபதி இருந்த அதிபன் திசா புத்தியிலோ மரணமுண்டாம்.

தையலேபத்தோனெட்டோன் றனித்தலக்கினத்தோன்காரி
மெய்யரிந்நான்குபேரில் வெகுபிலவீநமாரோ
தொய்யுமக்கோளைநோக்கிச் சூழ்திசையபகாரத்தில்
வையகந்தனிலேபெற்ற மதலைசாவாகுமாதே. 14

10, 8, 1, இவ்வதிபர்களும், சனியுமாகிய இவர்கள் நான்கு பேரில் யார் மிகவும் பலமற்றநிலையில் உள்ளனரோ அவர்களது திசா புத்தி காலம் குழந்தை மாண்டு போகும் . (ஜாதகனுக்கு)

மதலையெட்டுடையோனெட்டேல் வருதிசையபகாரத்தி
லுதவியசரீரவாதை யுண்டென்பருண்மையெட்டோ
னதிதிசையபகாரத்தி லகமிகவருத்துமென்பர்
பதிவதுபிலமேவாதை பயனிலாநிவர்த்தியாமே. 15

எட்டாமாதி எட்டாமிடம் இருந்தால் இவர்கள் திசா, புத்தி காலம் வரும் போது உடல் உபாதை உண்டாகும். எட்டுக்குடையவன் திசைவரும் போது மிகவும் சரீர துன்பம் உண்டாகி நிவர்த்தியாகும்.

பயின்றநாள்சென்மராசிப் பதிபிலவீனமாகி
வியன்றலக்கினத்தோனெட்டோ னிவர்திசைகேட்டகால
முயன்றலக்கினத்தோனெட்டோன் முழுபிலவான்களானா
னயன்றராத்திசைகள்போனா னன்மைகள்பின்னுண்டாமே. 16

ஜென்ம ராசியாதிபதி பலஹீனமடைந்து (சந்திரன் இருந்த வீட்டாதிபதி) லக்கினாதிபதி, அட்டமாதிபதி இவர்கள் பலம் பெற்று இருந்து இவர்களது திசா புத்திகாலம் கழிந்த பின்னால் நன்மை உண்டாகும்.

நன்மைலக்கினத்தினாலு நாடியவெட்டின்கோளுந்
தின்மையில்லாதமிக்காய்ச் சொட்சகெந்திரகோணந்
துன்மையாயிவரைச் சேர்ந்தோர் சூழ்திசையபகாரத்திற்
றன்மையில்ரோகஞ்சாருந் தருமபவாதந்தானே. 17

ஜென்ம லக்கினாதிபதியும், அட்டமாதியும் சுபக்கிரகத்துடன் கூடி இருக்க இவ்வீடானது கேந்திர, திரிகோணமாயிருக்க இவர் சம்பந்தமுற்ற கிரகத்தின் திசா, புத்திகாலம் வரும்போது நோய் அபவாதம் முதலியன உண்டாகும்.

தருமலக்கினத்தோனெட்டோன் சாரக்கெந்திரத்ரிகோண
மிருவருமல்லாலெட்டி லிருந்தவர்திசையிலேனும்
வருமபகாரத்தேனு மரணங்கடிட்டமாகுந்
திருவருளுடையமேலோர் செப்பியபலனிதாமே. 18

லக்கினாதிபதி, எட்டாமதிபதி இவர்கள் கேந்திர, திரிகோணம் ஆகிய 1, 4, 7, 9, 10 ஆகிய வீட்டிலிருக்க, எட்டில் இருந்தவன் திசா புத்தி காலத்திலே மரணம் உண்டாகும்.

செப்பியவெட்டின்கோட்போய்ச் சேரலக்கினத்தின்மீது
மெப்பிலாச்சநிபோய்லக்க மேவிடமேவுவோர்க
ளொப்பியதிசையிலேனு முறுமவகாரத்தேனுந்
தப்பிதமில்லைமாதே சாவதுதிட்டமாமே. 19

எட்டாமதிபன் லக்கினத்திலிருக்க, இவருடன் சநிகூடிட இவருடன் சம்பந்தப்பட்ட கிரகத்தின் திசை, புத்திகாலம் மரணமுண்டாம்.

சாவதாமெட்டோனோடுந் தனித்தலக்கினத்தானோடு
மேவியகிரகத்தாறில் வெகுபிலவீனமென்பர்
போவதாந்திசையிலேனும் புரியபகாரத்தேனு
மோவியமனையமாதே யுயிர்வதையாமென்பாரே. 20

ஆறாமிடத்தில் லக்கினாதிபதி, எட்டாமதிபனும் பலமற்று இருக்க இவரது திசா, புத்தி காலம் வரும் போது மரணம் ஏற்படும்.

உயிர்தருமைந்தோனோடே யுற்றிடுங்கிரகத்தாறில்
வெயிலவன்றன்னைநீக்கி மிக்ககோட்டிசைவிசித்ரந்
தயிரியவானாமென்ற சாதகன்மரணமாவன்
மயிலியற்சாயைபோன்ற வஞ்சியின்கொம்பனாளே. 21

ஐந்துக்கதிபனோடு சம்பந்தப்பட்ட கிரகத்தில் சூரியன் தவிர மற்றக் கிரகங்களின் திசை புத்தி காலம் மரணமுண்டாம்.

வஞ்சியேயைந்தோனோடே வாழுங்கோட்டிசையிலேனு
மிஞ்சிலக்கினத்தினோடே மேவுங்கோட்டிசையிலேனுங்
கொஞ்சியவபகாரத்திற் குறித்ததிங்களுக்குமுன்னோ
னொஞ்சியவங்கவீந முறுமெனவுரைக்கலாமே. 22

ஐந்துக்குடையவனோடு சம்பந்தப்பட்டவன் திசையிலோ லக்கினாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையிலோ அல்லது புத்தியிலோ ஒரு மாதத்திற்கு முன்பே அங்ககீனம் உண்டாகும்

உறுபிதிர்த்தானமாங்கே யுற்றலக்கினத்தினானும்
பெறுவரேற்கெந்திரகோணம் பிறிதிசையபகாரத்தின்
மறுகியசோபத்தாலே வருமனுமரணபென்ப
ரிறுதியிற்காலந்தேர்ந்தா ரியம்பியபலனிதாமே. 23

9க்குடையவனோ, லக்கினாதிபதியோ கேந்திர, கோணம் பெற இவர்கள் திசா, புத்திக் காலம் சோபமுண்டாகி மரணம் ஏற்படும் என்ற காலம் உணர்ந்த பெரியோர் கூறுவர்

இயம்பியசெவ்வாய்காரி யிரணியனிராகுவிந்து
நயம்படாதிவர்களெட்டி னண்ணுமேன்மரணாந்தத்திற்
பயன்படவறியார்மையல் பயித்தியங்கொண்டுசாவர்
முயங்கிதிசையிற்சாகு முல்லைமென்னகையினாளே. 24

செவ்வாய், சனி, வியாழன், ராகு, சந்திரன், இவர்கள் 8மிடம் இருந்தால் மரணத்தின் கடைசிக்காலம் பைத்தியம் உண்டாகி மரணம் ஏற்படும்.வறுமையும் உண்டு

முல்லைமென்னகையாயிந்து மோசித்துவாக்கிலாக
வல்லதுவெட்டிலாக வானதோர்புதனுஞ்சேயுஞ்
சொல்லியபத்தினாலார்கடவுகந் தெந்தநாளும்வாழ்வன்
வில்லெனுநுதலினாள் விதிவழிப்பலனிதாமே. 25

சந்திரன் இரண்டாமிடத்தில் அல்லது 8மிடம் இருக்க புதனும் செவ்வாயும் 10, 4, 6ம் இருக்க எந்நாளும் நல்லவாழ்வு உண்டாகும்.

விதியெனுமெட்டிற்பாபர் மேவிடப்பாபர்நோக்கக்
குதிகொளுந்தோநோய்கள் கோதையேபின்னுமந்தப்
பதியெனுமெட்டினற்கோள் பதியநல்லோர்கள்பார்க்கி
லதிகவான்வெட்டாலாகு மவர்பிலமமைத்தவாறே. 26

எட்டாமிடம் பாபக் கிரகமானது இருந்து பாபர் பார்வை பெற்றால் தேகத்தில் நோய் உண்டாகும். 8மிடம் சுபக்கிரகம் இருந்து சுபர்பார்வை பெற்றால் நல்ல ஆயுளும், சுகமும் உண்டாகும்.

எட்டாம்பாவம் – முற்றிற்று

=-=-=-=-=-=-=

ஒன்பதாம் பாவம்

அமைத்தவொன்பதினாற்சொல்ல வானபாக்கியங்களாகான்
சமைத்தபொன்றிரவியங்க டந்தைதன்றவசினோடு
விமைத்திடுஞ்சுகங்களெல்லா மியம்பலாமென்பதாகு
நமைப்பிலாமறையோனாலு நாடியபலன்சொல்வாமே. 1

ஒன்பதாம் இடத்தால் பாக்கியம், ஆசான், பொன், திரவியம் தந்தையின் தவம், சுகம் முதலியன எடுத்துச் சொல்லலாம். இன்னும் குருவின் நிலையை அறிந்து பலன் கூறவும்.

நாடியவொன்பதாங்கோ ணண்ணியமறையோன்றானு
நீடியகபவர்க்கங்க் ணின்றவொன்பதினின்றோனுங்
கேடிலாச்சுபர்களானாற் கிட்டுமேபாக்கியங்க
ளோடியதிசையினாலே யுறுமெனவுரைக்கலாமே. 2

ஒன்பதாம் அதிபதி, வியாழன் சுபகிரக வர்க்கம் பெற்று இருக்க 9ம் இடம் சுபர்கள் இருக்க இவர்களது தசா காலம் சகல பாக்கியம் சேரும்.

உரைத்தவொன்பதிலேபாவ ருறையநீசங்களாக
நிரைத்தவத்தமனமாக நின்றிடத்தர்ம்மஞ்செய்யார்
தரித்தவொன்பதிலேபாபர் சார்ந்திடமுச்சமாட்சி
பாக்கிய சுபரும் கூடில் பாக்கியவானாவானே. 3

9ம் இடம் பாபக்கிரகமானது இருக்க இது இவர்களுக்கு நீச வீடாயிருக்க அல்லது அஸ்தமன வீடாய் இருந்தால் தர்மம் செய்ய மாட்டார்கள். 9ம் இடம் பாபக்கிரகம் ஆட்சி உச்சம் பெற்று இருக்க சுபர் சம்பந்தப்பட்டிருந்தால் பாக்கியவானாக இருப்பார்கள்.

சொல்லுமொன்பதிலேநின்றோன் றோன்றியபத்தின்கோளு
மெல்லவுச்சாட்சியங்ச மேறியேயிருக்கின்றாலு
மொல்லையைந்திலக்கினத்தா னுச்சாட்சியங்சமாக
நல்லதுராசயோக நால்வருமிக்கேனன்றே. 4

9ம் இடம் இருந்த கிரகமும், 10ம் அதிபனும் ஆட்சி, உச்சம் பெற்று இருந்தாலும் அல்லது லக்கினாதிபதியின் அங்கிஷம் பெற்று இவ்வீடு இவருக்கு ஆட்சி, உச்சவீடாய் இருக்குமேயானால் பாக்கியமுண்டாம்.

நன்றோன்பானொன்றதாக நலனுறநோக்கிநின்றா
லொன்றொன்பானிடத்திற்பாப ருறைந்திடப்பிருகுங்கூட
வன்றொன்பான்மதியோன்கூடி லவன்குருத்திரிசம்போகி
நின்றோன்பான்மறையோன்பார்க்கி னிகழ்ராசபுத்தியாமே. 5

9ம் அதிபன் லக்கினத்திலிருக்க, அல்லது பார்க்க, 1, 9ம் இடம் பாபக்கிரகம் இருக்க, இவருடன் சுக்கிரன் கூடி நிற்க 9ம் அதிபனும், சந்திரனும் கூடி நின்று பிறந்த ஜாதகர் குருஸ்திரீயை சம்போகம் செய்பவனாம். 9ம் அதிபனும் வியாழனும் பார்க்க ராஜ புத்திரியை போகம் செய்வான்

நிகரொன்பான்செவ்வாய்நோக்க நிலங்கள்சேத்திரங்களுண்டாம்
பகரொன்பான்புந்திநோக்க பாக்கியமிகுதியாகும்
புகரொன்பானோக்கமாகிற் புரவிகட்கிசமானாவ
னிகரொன்பானிந்துநோக்க நன்றியல்சுகவானோமே. 6

9ம் அதிபனும், செவ்வாயும் பார்க்க நிலம், சேத்ரம் முதலியன உண்டாயிருப்பன். 9ம் அதிபதியும், புதனும் பார்க்க மிகுந்த பாக்கியம் உண்டு, 9ம் அதிபனும் சுக்கிரனும் பார்க்க குதிரைகளுக்கு அரசனாவன். 9ம் அதிபனும் சந்திரனும் பார்க்க நல்ல சுகம் உடையவனாம்.

நன்றியல்சநிபோயொன்பான் ராசியைநோக்குமாகி
லொன்றியமதலைவாயி லுதடுகள்பருத்துக்காணு
மென்றவத்தலத்தைவெய்யோ னிறையவன்றிங்கணோக்கக்
கன்றுகள்பசுக்கள்வாசிக் கனகங்கள்வித்தையாமே. 7

9ம் இடத்தைச் சநி பார்த்தால் சாதகனின் வாயில் பருத்த உதடுகள் உண்டாகும். இவ்விடத்தைச் சூரியன், வியாழன், சந்திரன் பார்க்க ஆடு, மாடு, முதலிய கன்றுகாலிகளும் பொன், பொருளும் வித்தையும் உண்டாம்.

கனகனுங்கதிருஞ்சேயுங் கருதியொன்பதனைநோக்க
வினையவன்சேனைகாப்பா னென்றும்வாகனமுமுண்டாம்
புனையுமாற்றனங்கள்சேரும் புதனொடுவத்தநோக்கி
லனையவன்வினோதவித்தை யாக்கமாம்விதைவித்தாலே. 8

வியாழனும், சூரியனும், செவ்வாயும், 9ம் இடத்தைப் பார்க்க ஜைனியங்களுக்கு (சேனை) அதிபதியாய் ஏறுகின்ற வாகனத்தை உடையவனுமாய் இருப்பான். மேலும் தனமும் வினோதவித்தைகளும் விதை வித்துக்களால் லாபமும் உண்டாகும்.

ஆக்கியமறையோன்வெள்ளி யாதித்தன்மூன்றுபேரு
நோக்கவொன்பதனைவித்தை லோகத்திலதிகமாகுந்
தேக்கியசநியாதித்தன் செய்யவொன்பதனைநோக்கப்
பாக்கியங்குணங்கணல்ல மதிபுத்தியவன்பண்பாமே. 9

வியாழன், சுக்கிரன், சூரியன் ஆகிய மூவரும் 9ம் இடத்தைப் பார்க்க இவ்வுலகில் பிறந்த ஜாதகனுக்கு அநேக வித்தைகள் (கல்வி) உண்டாம். சநியும் சூரியனும் 9ம் இடத்தைப் பார்க்க நல்லபாக்கிய, குணமும், புத்தியும் உண்டாம்.

பண்படுதலமொன்பானைப் பனிமதிமறையோன்செவ்வாய்
திண்படநோக்கிற்சேனைத் திரள்சுகந்திரியநேக
நண்புறுமதியுமாலும் ராசியொன்பதனைநோக்கிற்
கண்பெறுதிரியும்வீடுங் கட்டின்மெத்தைகளுமாமே. 10

ஒன்பதாம் இடத்தை சந்திரன், வியாழன், செவ்வாய் இவர்கள் பார்த்தால் சேனையுண்டாம். ஸ்திரீ சுகம் அதிகம் உண்டாகும். சந்திரனும், புதனும் 9ம் இடத்தைப் பார்த்தால் நல்ல ஸ்திரீயும் வீடும் கட்டில், மெத்தைகளும் உண்டாகும்.

அன்னியதலமொன்பானை யந்தணன்பிருகுமாலு
முன்னுமேலதிகவித்தை யொக்குமெல்லாருநோக்கின்
மன்னனாய்த்தனவானாகு மைந்திடச்சுபர்கள்வேந்தா
லின்னதெல்லாருஞ்சாரி லிவனுக்கொப்பில்லையம்மா. 11

9ம் இடத்தை வியாழன், சுக்கிரன், புதன் இவர்கள் பார்க்க அதிக வித்தை, தனம், அரச வாழ்வு முதலியன உண்டாம்.

ஒப்பிலொன்பதிலேதிங்க ளுறைந்திடப்புந்திகாரி
பொற்புறநோக்குமாகிற் பூபதியாவனென்ப
வப்பியுச்சாட்கியாங்கோ ளமைந்திடச்சுபர்கணோக்கச்
செப்பியவேந்தனாவன் றேசத்துக்கென்னலாமே. 12

9ம் இடம் சந்திரன் இருக்கப் புதனும், சனியும் இவரைப் பார்க்க பூபதி போல் வாழ்வன். இவர்கள் நட்பு ஆட்சி, உச்சம் பெற்று இருந்தால் அரசனாவன்.

தேசத்துக்கதிர்வெண்டிங்கள் சேர்ந்தொன்பதினிலேநிற்கப்
பூசித்தபாக்யவானாம் பொருந்தியகண்ணோக்காடா
நேசித்தசேயேற்றுக்கம் நிற்கச்சேய்கதிரோன்கூடிப்
பாசித்தசகராசர்க்குப் பற்றியபிரியனாமே. 13

9ம் இடத்தில் சூரியன் சந்திரன் இருக்க பூசிக்கத் தக்க பாக்கியம் உடையவனாம். இவனுக்கு கண்ணில் நோயுண்டு. இத்தானத்தில் செவ்வாய் இருந்தால் துக்க முண்டாம். செவ்வாயும் சூரியனும் இருந்தால் அரசர்க்குப் பிரியனாவன்.

பற்றியகதிர்வெண்டிங்கள் பாலகர்க்கொன்பதாகச்
சித்தியாமேழிலேயுஞ் சேர்வதுவேகுகோளாகி
னித்தியதுக்கியாவு னிற்பதுமறையோன்கூடி
னத்தியதந்தைசொற்கீழ் நடந்திடும்பொருளுமாமே. 14

ஒன்பதாம் இடத்தில் சூரியன், சந்திரன் இருக்க, 7மிடம் அநேக கிரகங்கள் இருக்க தினமும் துக்கம் ஏற்படும். இவர்களுடன் வியாழன் கூடி இருந்தால் பிதாவின் சொற்படி நடப்பவனாம்.

நடந்திடுங்கதிர்வெண்டிங்க ணண்ணியசேயொன்பானேற்
கடந்துபோய்தந்தைதாயார் கதிர்மதிபுதன்வியாழ
முடந்தையேல்வானப்பேரோ டுடுக்கணுவானுமாவான்
றிடம்படுந்திசைகளாலே செப்பியபலன்சேர்வானே. 15

ஒன்பதாம் இடம் சூரியன், சந்திரன் செவ்வாய் இருந்தால் தாய், தந்தையரை விட்டு பிரிந்து போவான். (இடமாற்றம்) சூரியன், சந்திரன், புதன், வியாழன், இவர்கள் இருந்தால் வாகன பாக்கியம், சுகம் இவை உண்டாகும். இவைகள் இவர்களது தசா புத்தி காலம் ஏற்படும்.

வானுறுபுகர்வெண்டிங்கண் மற்றவாதித்தன்கூடி
தானமொன்பதிலேநிற்கச் சண்டையாந்திரியினோடே
போனவொன்பதிலாதித்தன் புகழ்சநியிருந்ததானா
னீனவெள்ளாட்டியால்போக் கிகலியவிரோதியாமே. 16

சுக்கிரன், சந்திரன், சூரியன், இவர்கள் 9ம் இடம் இருந்தால் ஸ்திரீயுடன் சண்டை செய்பவனாம் (மனைவி). இவ்விடம் சூரியன், சநி, இவர்கள் இருந்தால் ஸ்திரீயுடன் விரோதம் ஏற்படும்.

இகலியகதிர்சேய்புந்தி யிவர்களொன்பதிலேநின்றான்
மகவினைச்சுகவானென்பர் மறையவனொன்பதாகிற்
செகமதிவிவன்றந்தைக்குத் தீர்க்கவாஞ்சையனுமாவன்
சகலமாம்விரைவித்துக்க டங்கரிப்பானுமாமே. 17

சூரியன், செவ்வாய், புதன், இவர்கள் 9ம் இடம் இருந்தால் சுகமுடைய வனாவன். வியாழன் 9ம் இடம் இருந்தால் இவன் தந்தைக்கு தீர்க்கமுண்டு. விதை வித்துக்களால் நன்மையுண்டு.

தங்கியகதிர்சேய்வெள்ளி சார்வதொன்பதிலேயாகில்
வெங்கடுங்கோபியாக விகாதத்தாற்பிரியனாவன்
மங்கையையடிப்பன்பொல்லா வன்சநியொன்பதாகி
விங்கிவன்றந்தையில்லா னியல்வேந்துக்கோத்திடானே. 18

சூரியன், செவ்வாய், சுக்கிரன் இவர்கள் 9ம் இடம் இருந்தால் கடுங்கோபம், விவாதம், மனைவியை அடிப்பவன் பொல்லாதவன் ஆகிய குணங்களை உடையவனாம். சனி 9ம் இடம் இருந்தால் இவனது தந்தை இல்லை. பிறரால் தூசிக்கப் படுபவனாம்.

ஏர்த்தவாதித்தன்புந்தி யிறையவனொன்பதாகிற்
கார்த்தராசாக்கணோக்குங் கனகமுமிகுதியாகுங்
கூர்த்தவெஞ்சநியொன்பானேற் கொடியபாதகனுமாகித்
தூர்த்தைகளிடத்திற்சார்வான் சுகமில்லையென்னலாமே. 19

சூரியன், புதன், வியாழன், இவர்கள் 9ம் இடம் இருந்தால் அரசர் பார்வை மிகு கனகம் இவைகளுண்டாம். சனி 9ம் இடம் இருந்தால் கொடிய பாதகம் செயல் உடையவனாய் வேசியை சார்ந்து சுகமில்லா திருப்பவனாம்.

சுகந்தருங்குருவாதித்தன் சுக்கிரனொன்பதாகிற்
செகந்தனிற்பரத்தைதோயுஞ் சிறந்தபண்டிதனுமாவன்

மகிழ்ந்திடும்பொருளுமுண்டா மதிகதிர்சநிவியாழம்
புகுந்தவரொன்பதாகிற் பொருங்கல்விக்காரனாமே. 20

வியாழன், சூரியன், சுக்கிரன் இவர்கள் 9ம் இடம் இருந்தால் விபசார ஸ்திரீயை உடையவனும், சிறந்த பண்டிதனும், பொருளும் ஆகிய இவைகளுண்டாம். சந்திரன், சூரியன், சநி, வியாழன் இவர்கள் 9ம் இடம் இருந்தால் நிரம்பக்கல்வி உண்டு.

பொருதெழுங்கதிரோன்வெள்ளி பொருந்தியொன்பதிலேநின்றாற்
செருவுறுவேந்தராலே தெண்டனைப்படுவன்றீர்க்கன்
றருமதிசெவ்வாய்புந்தி சார்வதொன்பதிலேயானான்
மருமலர்க்குழலினாளே மனதுசஞ்சலத்தனாமே. 21

சூரியன், சுக்கிரன், கூடி 9ல் இருந்தால் அரசரால் தண்டனை உண்டாகும். செவ்வாய், புதன் 9ம் இடம் இருந்தால் மனசஞ்சலம் ஏற்படும்.

மனந்தருமதியுஞ்சேயு மறையவனொன்பதாகிற்
றினங்களுந்தொழுவான்றேவைச் சேய்பிருகிந்துவாகிற்
கனங்குழல்திரிசாவாகுங் கடுஞ்சநிமதிசெவ்வாயேற்
றனங்களையழித்துப்பெற்ற தாயார்க்குத்திரத்தாற்சாமே. 22

சந்திரனும் செவ்வாயும் வியாழனும் 9ல் இருந்தால் தினமும் தெய்வத்தை வழிபடுபவனாவன். செவ்வாய், சுக்கிரன், சந்திரன் இவர்கள் இருந்தால் ஸ்திரீயை இழப்பன். சநி, செவ்வாய், சந்திரன் இருந்தால் தனமில்லாத தாயை உடையவனாய் அவளையும் இழப்பன்.

தாயெனுங்குருசேய்மாலும் சாதகனொன்பதாகிற்
சேய்தனைத்தனவானாசா ரியனெனச்செப்பலாகுந்
தூய்மதிவெள்ளிபுந்தி தோய்குவதொன்பதாகி
லாயவன்றந்தையானாற் கிரண்டுதாரங்களாமே. 23

வியாழன், செவ்வாய், புதன், 9ம் இடம் இருந்தால் தனவானாம் செல்வமுடையவன். இத்தானத்தில் சுக்கிரன், சந்திரன், புதன் இவர்கள் இருந்தால் இவன் தந்தைக்கு இரு மனைவிகள் உண்டு.

இரண்டருமதியுமாலு மியற்சநியொன்பதாகின்
முரண்டரும்பாவியாகு முழுவிகாதத்தனாகுந்
திரண்டெழுமறையோன்வெள்ளி செழுமதியொன்பதாகிற்
புரண்டெழுங்குழலிவேந்தாய்ப் பூமியைப்புரக்குமாதே. 24

சந்திரன், புதன், சநி இவர்கள் ஒன்பதாம் இடம் இருந்தால் பிடிவாதமுடைய பாவியாவன், இவனை விடச் சிறந்த பாவிகள் இல்லை எனலாம். வியாழன், சுக்கிரன், சந்திரன் 9ம் இடம் இருந்தால் அரசனாவன்.

பூமியிற்கதிரோன்காரி பொருந்தியொன்பதிலேநின்றா
னேமமுநிட்டையாக நித்தியகருமஞ்செய்வ
னாமவெஞ்சநிமால்வெள்ளி நண்ணியவொன்பதாகிற்
கோமகன்றனக்குசோரம் குறித்திடும்விதியிதாமே. 25

சூரியன், சநி இவர்கள் 9ம் இடம் இருந்தால் நேம, நிஷ்டை உடைய ஆசாரவிதிகள் உடையவனாவன். சநி, புதன், சுக்கிரன் இவர்கள் இருந்தால் சோரம் செய்பவனாம்.

குறித்தபொன்செவ்வாயிந்து கூடியொன்பதிலேநின்றா
னெறித்தசாத்திரிகனாவ னின்றிடமறையோன்மாலும்
பிறித்திடுஞ்சொல்லினாலே பேர்படவித்துவானா
யறிக்கையுந்தனமுமிக்க வான்வாசிரியனாமே. 26

செவ்வாய், சந்திரன், 9ம் இடம் இருந்தால் சாஸ்திரம் அறிந்தவன் ஆவன். வியாழனும், புதனும் இருந்தால் வித்துவான் ஆகி செல்வமும், தனமும் உடைய ஆசிரியனாய் இருப்பன்.

ஆனபொன்புகர்மாலிந்து வாகவிந்நான்குபேருந்
தானமொன்பதிலேநின்றாற் றர்ம்மராசாவேயென்பா
ரூனமில்கதிர்செவ்வாய்பொன் னொடுசநியொன்பதாகிற்
சேனைசாகசங்கள்செய்வன் றிரவியவானுமாமே. 27

வியாழன், சுக்கிரன், சந்திரன், புதன் இவர்கள் 9ல் இருந்தால் தர்மம் உடைய அரசனாவன். சூரியன், சனி, செவ்வாய், வியாழன், இவர்கள் இருந்தால் சேனைக்கு அதிபனும் சாகசம் செய்பவனும், திரவியம் உடையவனுமாவன்.

திரளுமொன்பதிலேவெள்ளி சேயிந்துமறையோன்சேரிற்
றரணியிற்குணங்கண்மிக்காஞ் சாருங்கோளாறைந்தேனும்
புரளுமொன்பதினான்கேனும் பொருந்துவோர்மூன்றினாலு
காருலகாளும்வேந்தாய் நன்மைகள்பலனுமாமே. 28

9ம் இடம் சுக்கிரன், செவ்வாய், சந்திரன், வியாழன் இருந்தால் நல்ல குணமுடையவன். மேற்சொன்ன கிரகங்கள் 6,5,4,3ம் ஆனால் இவ்வுலகை ஆளும் வேந்தனாவன்.

நன்மையாம்புதன்வியாழ நரருக்கொன்பதிலேநிற்கத்
தின்மையில்லாதபாக்கியஞ் சேருமொன்பதிற்சேர்வாகில்
வன்மையின்மறையோன்மாலு மருவநோக்கில்லையாகிற்
றுன்மையில்வியாதிபொல்லாத் தூக்குணவானுமாமே. 29

புதன், வியாழன் 9ம் இடம் இருந்தால் திடமில்லாத பாக்கியம் உண்டு. இத்தானத்தை வியாழன், புதன் பார்வை இல்லாதிருந்தால் வியாதி உண்டு. துர்க்குணமேற்படும் என்க.

துர்க்குணப்பட்டொன்பான்கோட் டோன்றவாறெட்டீராறிற்
சத்துருநீசர்பார்க்கத் தான்கொடூராங்சமேறத்
தெத்தியநீசராகிற் சேர்ந்திடப்பிறந்தபேர்க்கு
முத்தியபாக்கியங்கண் முழுதுநாசங்களாமே. 30

ஒன்பதாம் இடத்துக்கு அதிபன் 6,8,12ல் சத்துரு மற்றும் நீசக் கிரகங்களின் பார்வை பெற்று பாபர் அங்கிஷம் பெற்று இருக்கவும், நீச ராசியில் சம்பந்தமுற்று இருக்கவும் பிறந்த ஜாதகனுக்கு சகலபாக்கியமும் அழிந்து போகும்.

முழுதுமவ்வொன்பானோடே மோகமாஞ்சுபர்கள்கூடப்
பழுதிலாச்சுபர்கள்பார்க்கப் பாலகனொன்பான்ராசி
தொழுதியாய்ச்சுபர்கணிற்கச் சோர்விலாச்சுபருநோக்கிற்
றழுவியமதலைக்கெல்லாஞ் சகலபாக்கியமுண்டாமே. 31

ஒன்பதுக்கதிபதியோடு சுபக்கிரகம் சேர்ந்து இருக்க சுபக்கிரகமானது இவர்களைப் பார்க்க 9ம் இடம் சுபக்கிரகம் இருக்க இத்தானத்தைச் சுபர்கள் பார்க்க சகல பாக்கியம் உண்டாகும்.

சகலருமொன்பான்சிங்கா சனமெனுமங்சமேறப்
பகரிலக்கினந்தோனேனும் பத்தின்கோளேனும்பார்க்க
மிகுதியாய்த்தானஞ்செய்வன் வெகுதிரவியமுஞ்சேரு
மகவிடக்கீர்த்திபாரில் வகுக்கரிதென்னலாமே. 32

ஒன்பதுக்கதிபன் சிங்காசனாங்கிஷம் ஏற இவரை லக்கினாதிபதி அல்லது பத்துக்கதிபன் பார்க்க அதிக தானம் செய்பவன் ஆவன். வெகுதிரவியம் இவனுக்குண்டு.

வகுத்திடுமொன்பான்கோளு மன்னுகோபுராங்சமேறப்
பகுத்தலக்கினத்தின்கோளும் பத்துடைக்கோளும்பார்க்கத்
தொகுத்தவந்தணனுமாவன் சொற்புரோகிதனுமாவன்
மிகுத்ததானங்கட்கெல்லா மிவனதிகாரியாமே. 33

9க்கு அதிபன் கோபுராங்கிஷம் பெற்று இருக்க லக்கினாதிபதியும் பத்துக்கு அதிபனும் பார்க்க இவன் அந்தணனும், வேதம் ஓதுபவனும், தானம் செய்பவனாயும் இருப்பான்.

அதிகவொன்பதிலேநிற்க வந்தணனமைந்தராசிப்
பதிநவாங்கிசத்தின்கோளைப் பார்ப்பதுசுபர்களாகி
விதமொடுதந்தையாசா னிவர்களைப்பத்திசெய்வன்
புதுமதிநுதலினாளே பொருந்துசெல்வத்தனாமே. 34

வியாழம் ஒன்பதாம் இடம் இருக்க இவர் இருந்த அங்கிஷத்தின் கோளை சுபக்கிரகங்கள் பார்க்க, தந்தை ஆசிரியர் இவர்களைப் பத்தியுடன் பூஜித்து செல்வனாய் இருப்பான்.

பொருந்திடச்சுபரொன்பானிற் பொன்னுடன்வாக்குமாகத்
திருந்தியவொன்பதாங்கோள் சேர்ந்திடப்பொன்னவாங்ச
மருந்தவஞ்செய்யுமாசா னடியிணைப்பத்தியாவன்
கருங்குழன்மாதேகேளாய் கனபவிசவனுக்காமே. 35

9ம் இடம் சுபக்கிரகமிருக்கவும், 2ல் வியாழன் இருக்கவும், 9ம் அதிபன் வியாழன் அங்கிஷம் பெற தவம், பத்தி ஆகிய செயல்களை உடையவனும் அதிக செல்வந்தனுமாவன்.

கனகன்மால்வெள்ளிமூவர் கருதியொன்பதிலேநிற்க
வினையதையொன்பானோக்க விவர்சுபர்மத்தியாக
வனையவன்றர்ம்மவானா மதிகபாக்கியமுஞ்சேரும்
புனைமயிலனையமாதே புண்ணியவிதியானாமே. 36

புதன், வியாழன், சுக்கிரன் ஒன்பதாம் இடம் இருக்க, இவர்களை 9ம் இடத்துக்கு அதிபன் பார்க்க, இவர் சுபக்கிரகத்தின் மத்தியில் இருந்தால் இச் சாதகன் தர்மவானாயும், அதிகபாக்கியம் உடையவனும், புண்ணியம் உள்ளவனுமாவன்.

விதித்திடுங்கோட்களெல்லா மேவியொன்பதிலேநிற்கக்
கதித்திடுஞ்செல்வக்கோளுங் கதிரொடொன்பானிற்கோளு
முதித்திடவாறெட்டீரா றொப்பிலாக்கொடியோர்நோக்கிற்
கெதிக்கிவன்றந்தையந்தியங் கிடைப்பதாகாதென்பாரே. 37

மேற்சொன்ன கிரகங்கள் 9ம் இடம் இருக்க, செல்வக் கோளாகிய வியாழனும், 9க்கு அதிபனும் 6, 8, 12ல் இருந்து பாபர் பார்வை பெறுமேயானால் கடைசிக்காலம் இவன் தந்தையுடன் இருக்கமாட்டான்.

கிடைப்பதாங்கதிரோனொன்பான் கெந்திரகோணங்களாகப்
படைப்பதாமைந்தொன்பானிற் பதிவதுசுபர்களாகத்
தடுத்திடாச்சுபர்கணோக்கிற் றகப்பனந்தியத்திற்சாவா
மொடுக்கநாட்கிடைக்குமென்ப துண்மையென்றுரைக்கலாமே. 38

சூரியன், 9ம் இடத்ததிபன் இவர்கள் 1, 4, 5, 7, 9, 10 ஆகிய ஸ்தானங்களில் இருந்து 5, 9ம் இடம் சுபக்கிரகம் இருக்க சுபர் பார்க்க, இவன் தந்தை அந்திய காலத்தில் இவன் இருப்பான்.

உரைக்குமேல்வெள்ளியிந்து முற்றநான்குடையகோட்போய்
நிரைக்கவாறெட்டீராறி னிசியிலேமரணந்தந்தை
புரைக்குமைந்துடையோனொன்பான் போகக்கெந்திரத்ரிகோணந்
தரச்சுபர்கூடநோக்கத் தந்தைக்குப்பகற்சாவாமே. 39

சுக்கிரன், சந்திரன், 4க்கு அதிபன் 6, 8, 12ல் இருந்தால் இவன் தந்தை நிசியில் (இரவில்) சாவான். 9க் குடையவன் 5க்கு உடையவன் கேந்திர திரிகோணம் ஏறி இருந்து சுபர்கள் சம்பந்தம் உற்றிட அல்லது பார்க்க பகலில் இவன் தந்தை இறப்பான்.

தந்தையொன்பதின்கோண்மிக்காய்ச் சார்வதுஞ்சுபர்வீடாகிற்
சிந்தையாற்சுபருநோக்கச் செபதபத்தியானியாவ
னிந்தனைசெய்யான்றேவை நெறிநிலைதவமுமாகுஞ்
சந்தயமன்றிமேலாந் தவங்களையிவன்சார்வானே. 40

9ம் இடத்துக்கு அதிபன் சுபர் வீட்டில் இருந்து சுபர்கள் பார்த்தால் ஜெப, தபங்களையும், தியானங்களையும் செய்யக் கூடியவனாயும், தெய்வத்தை நிந்தனை செய்யாதவனாயும், தவத்தினை நெறிமுறையுடன் செய்ய வல்லவனும் ஆவன்.

ஒன்பதாம்பாவம் - முற்றிற்று

பத்தாம் பாவம்

வெகுபிலன்றரும்பத்தாலே விதித்ததுவித்தைஞாந
நிகுதியாபாரமார்க்க நித்திரைநெறிசேர்கீர்த்தி
புகுதுமாக்கினைகள்கர்ம்மம் பூடணம்புவிவேளாண்மை
தகுந்தவிமானமெல்லாஞ் சாதகர்க்கியம்பலாமே. 1

பத்தாம் இடத்தால் வித்தை, ஞானம், நித்திரை, கீர்த்தி, தண்டனை, கீர்த்தி, கன்மம், பூசணம் (திரவியம்) வோளண்மை இவை முதலிய பலன்களைச் சொல்லலாம்.

சாதகர்க்குரைத்தபத்தோன் சநிபுதன்மறையோனோடே
யாதவனவர்களாலு மமைந்திடும்பத்தினாலுந்
தீதறவுணர்ந்துபோன சென்மத்தின்பலனுஞ்செப்பிச்
சோதனைக்குச்சென்மத்தின் சுகபலன்சொல்லலாமே. 2

பத்தாம் அதிபன் சநி, புதன், வியாழனுடன், சூரியன் ஆகிய இவர்களால் முன்ஜன்மபலனால் ஏற்படும் இச்சன்ம பலனைச் சொல்லலாம்.

சொல்லுதற்கரியபத்தோன் றூய்பலவீனமானா
லல்லல்செய்மனத்தனாகி யதிதுராசாரஞ்செய்வன்
வெல்புதன்புகர்வியாழம் வெயிலவன்பிலவீனத்தாற்
செல்லவாறெட்டீராறிற் றீதுகன்மஞ்செய்வானே. 3

10 ஆம் அதிபன் பலமற்று இருந்தால் மனசஞ்சலம், தூராச்சாரம் உண்டு புதன், சுக்கிரன், வியாழன், சூரியன் இவர்கள் பலமற்று 6, 8, 12ல் இருந்தால் தீய கன்மம் செய்பவனாம்.

தீதெனும்பரவாதித்தன் சேர்வதுபத்திலாகிற்
சாதகன்கெங்கைக்கேகுந் தனக்குப்பத்தாமிராசி
கோதிலாவீனமாகக் குளிர்மதியிருக்குமாகின்
மேதினிகடந்தபோது வெகுமோச்மடைவதாமே. 4

10ம் இடம் ராகு, சூரியன் இருந்தால் சாதகன் காசியாத்திரை போவான். 10 இடம் சந்திரன் இருந்து பலமற்ற நிலையில் இருந்தால் நடக்கும் போது மோக்ஷமுண்டு.

வெகுபத்தோன்வெள்ளியோடே மேவியுச்சங்களாகப்
புகுதுற்றகெந்திரமாகிற் போவதுகங்காஸ்நானம்
மிகுதுற்றபுதனீராறின் மேவவீராறோனுச்ச
மகுதுற்றபுதனைநோக்கி னறங்கணல்லது செய்வானே. 5

10ம் அதிபன் சுக்கிரனுடன் கூடி உச்சம் பெற இதுவும் கேந்திர ஸ்தான மாயிருந்தால் கங்கா ஸ்நானம் செய்வன். புதன் 12ல் இருந்து இவ்வதிபன் உச்சம் பெற்று இவரைப் பார்த்தால் வரம் பெற்று மோற்ட்சமடைவன்.

வரம்தரும்பத்திலேதான் மன்னவன்மதிப்பதாகப்
பிறந்தவன்கெங்கைக்கேகும் பிலன்கனாய்ப்பாபர்நின்றாற்
சிறந்தசாகசங்கள்செய்வன் சேர்வதுசுபராய்ப்பக்தி
னறும்பிலவீநமானா னல்லகன்மஞ்செய்வானே. 6

10ம் இடம் வியாழன் இருந்தால் ஜாதகன் கெங்கை செல்வான். இவ்விடம் பாபக் கிரகமானது இருந்து பிறந்தால் சாகசம் செய்வன். சுபர் இருந்து பலகீனமடைந்தால் கன்மம் செய்வன்.

நல்லபத்துடையோன்புந்தி நான்மறையோன்மிக்கோனாய்ச்
சொல்லயாகாதிகன்மந் தோன்றிலக்கினத்தோன்பத்தோ
னில்லுறக்கூடத்தாங்க ளேகாதிபத்தியமாகிற்
செல்லுதற்கிவன்கைப்பேோன்னாற் செய்வதியாகமாமே. 7

10 இடத்துக்கதிபன், புதன், வியாழன், இவர்கள் கூடி இருந்தால் யாககன்மம் உண்டு. லக்கினத்துக்கு அதிபன், 10ம் இடத்துக்கு அதிபன் இவர்கள் ஒரே ஆதிபத்யமாய் இருந்தால் இவன் தனது பொருளில் யாகம் செய்வன்.

செய்கதிர்லக்கிநத்தோன் சிறந்தபத்துடையோன்கூடி
லையாமின்சூத்ரர்பொன்னை யளித்தியாகங்கள்செய்வன்
கொய்யுமவ்வரவுங்கூடிற் சூத்ரமந்திரங்களாலே
மெய்யெனப்பொருளைத்தேடி மிக்கயாகஞ்செய்வானே. 8

சூரியன், செவ்வாய் லக்கினாதிபன், 10ம் அதிபன் இவர்கள் கூடி இருந்தால் சூத்திரரின் பொன்னை அழித்து (எடுத்து) யாகம் செய்வான். இவருடன் ராகு கூடி இருந்தால் சூத்திர மந்திரங்களால் பொருளைத்தேடி யாகம் செய்வான்.

மிக்கதாய்முன்சொன்னோரில் வேதியன்கூடிநின்றா
லிக்கணம்வேந்தர்பொன்னா லிவனியாகங்கள்செய்வன்
றக்கபத்துடையோனேழோன் றன்னுடன்கூடிநின்றான்
மைக்கருங்குழலார்பொன்னை வழங்கியாகஞ்செய்வானே. 9

முன் சொன்ன கிரகத்துடன் வியாழன் கூடி இருந்தால் அரசர்களின் தனத்தால் யாகம் செய்வன். 10ம் அதிபன், ஏழாம் வீட்டதிபன், இவருடன் கூடி இருந்தால் பொன்னைத் தானம் செய்து யாகம் செய்வன்.

வழங்கியவெள்ளிபுந்தி மன்னியராசிக்கோட்கள்
விளங்கியித்தலத்தைநோக்க வெகுதிரவியங்கடேடி

யிளந்தையாமதலைவாச மேமனுமியாகஞ் செய்வன்
களங்கெனும்பிலவீநத்திற் கன்மநாட்டங்களாமே. 10

சுக்கிரன், புதன் இருந்த இராசிக்கு அதிபன் இத்தலத்தைப் பார்க்க வெகு பொருள் தேடி குழந்தைகளுக்கு எல்லாம் யாகம் செய்பவன். இவர்கள் பலமற்று இருந்தால் செய்கிற கன்மம் பலியாது.

கன்மஞ்சேர்மதிக்குங்பத்திற் கருதியேசுபர்மிக்காக
நன்மையாமுச்சவர்க்க நண்ணிடமறையோன்கூடத்
துன்மையாய்மறையோன்பார்க்கத் துயரிலாக்கீர்த்திமானாய்ச்
சென்மனார்மதலையாகஞ் செய்யவல்லவனல்வாக்கே. 11

சந்திரனுக்கு 10ιரிடம் சுபர் இருக்க இவர்கள் உச்ச கிரகவர்க்கம் பெற, வியாழ் கூடி இருக்க பார்க்க கீர்த்தி உடையவனாய் மதலை யாகம் செய்து வல்லவனாய் இருப்பன்.

வாக்கியபத்தின்கோட்போய் வந்தருஞ்சநியைச்சேர
நோக்கியட்டமத்தோன்பார்க்க நுண்கொடூராங்சமேறப்
போக்கிலக்கிநமேசேரிற் புதல்வனையதிகொடூர
நீக்கியவாக்கினைக்கே நின்றுடல்பதைக்குமாதே. 12

10ம் அதிபன் சநியுடன் கூடி இருந்து அட்டமாதிபதி இவனைப் பார்க்க, கொடூராங்கிஷம் ஏறி லக்கினத்திலிருந்தால் இவன் அநேக கொடூரங்களுக்கு ஆட்படுவன். உடல்பதைக்கும்.

நின்றகர்க்கடகராசி நிலவுறநிலாவையந்த
நன்றியமறையோன்வெள்ளி நயம்படநோக்குமாகில்
வென்றியமதிபாராவ தாங்கிசமேறின்மீதாம்
பொன்றிடாக்கீர்த்திவானாய்ப் பொருளுமிக்காகுமாதே. 13

சந்திரன் கடகத்திலிருக்க, இவரை வியாழன், சுக்கிரன் பார்க்க சந்திரன் பருவதாங்கிஷம் ஏறி இருந்தால் அழியாத கீர்த்தி உடையவனாய் சம்பத்துடன் இருப்பான்.

பொருடரும்பத்தினான்போய்ப் புண்ணியருடனேகூட
வருடருஞ்சுபர்கண்மத்தி யாயினும்மாகவல்லாற்
றெருளுங்கற்கபக்கோளங்சஞ் சேர்ந்திருந்தாலுஞ்சேயை
யுருகியவபிமாநத்துக் குடையவனாமென்பாரே. 14

10ஆம் அதிபன் சுபக்கிரகத்துடன் கூடி சுபர் மத்தியிலிருக்க அல்லது

சுபர் அங்கிஷம் ஏறி இருந்தால் நல்ல அபிமானம் உடையவனாம் (மரியாதை)

உடையதாம்பத்திற்பாப ருறைந்திடப்பாபர்நோக்க
மிடையினாற்பத்தினாலு மிகுபிலவீநனாகி
லடைவதாமந்தவார்த்தை யகற்றியநாமத்தானாம்
புடைதருங்காந்திகீர்த்தி போய்விடும்பூவின்மாதே. 15

10ம் இடம் பாபக்கிரகமிருந்து பாபர் பார்வை பெற்று இவ்வதிபன் அதிக பலகீனமடைந்து இருந்தால் அபவாதம் உடையவனும் அகங்காரம் உடையவனும், கீர்த்தி இல்லாதவனும் ஆக இருப்பான்

பத்தாம்பாவம் – முற்றிற்று

பதினோராம் பாவம்

பத்தினற்பலன்யாபாரஞ் சீவனம்பதிந்தகீர்த்தி
வித்தையாக்கினைவேளாண்மை மிகுந்தயாகஞ்ஞாநங்க
ணித்ரைபூடணமிமாந நீதியாய்நிதியோடெல்லாம்
பெற்றவன்கதிர்மானீலன் குருவையும்பேணிப்பாரே. 1

பத்தாம் பாவக பலத்தால் வியாபாரம், ஜீவனம், கீர்த்தி, வித்தை, ஆக்கினை, வேளாண்மை, யாகம், நித்திரை, பூஷணம், நிதி இவைகள் பற்றிக் கூறலாம். இத்துடன் சூரியன். புதன் வியாழன் இவர்களின் நிலை அறிந்து பலன் சொல்லலாம்.

முந்தினசென்னச்செய்தி மொழிவதும்பற்றிப்பார்க்க
வந்திடுங்கன்மக்கோடான் வருபிலவீனமாகச்
சிந்தைசஞ்சலவானாகுஞ் செய்தொழிற்றுராசாரங்கள்
சொந்தமாயவனிடத்திற் றோன்றிடும்வகையைச் சொல்லே. 2

முன் ஜென்மபலன் பற்றிப் பார்க்க 10க்கு அதிபதி பலகீனமடைந்து இருக்க சஞ்சலம் உடையவன். துராசாரம் முதலியன உண்டாம்.

குருபுகர்கதிர்மாலின்னோர் குணபிலவீனமாக
வொருபனிரண்டிலாறி லெட்டினிலாறினின்றால்
வருவதுபொல்லாக்கன்மம் வணங்குவன்பத்தில்ராகு
வெரிகதிர்கூடிக்காசி யாத்திரையிவனேபோவான். 3

வியாழன், சுக்கிரன், சூரியன், புதன் பலகீன மடைந்து 6, 8, 12ல் இருந்தால் கொடிய செயல்களைச் செய்பவனாவன். ஈனத்தொழில்

வாய்க்கும். 10ம் இடம் ராகு, சூரியன் கூடி இருந்தால் காசியாத்திரை போவான்.

மீனமாய்த்தானம்பத்தாய் விளங்கிடுமதியாய்மோட்சந்
தானவனங்சனோடு கூடிசொட்சேத்ரஞ்சார்ந்து
வானகெந்திரத்திலேற வன்கங்காஸ்நாநமாடப்
போனவனென்றுதானே பூமியிற்போற்றுவாரே. 4

10ம் இடம் மீனமாயிருக்க. 12ல் சந்திரனிருந்து இவனிருந்த அங்கிஷாதிப்தியும் கூடி இருக்குமேயானால் (இதுவும் சொந்த வீடாய் இருந்தாலும்) கேந்திரம் பெற்றாலும் இச்சாதகன் கங்கா ஸ்நானம் செய்தவனாம்.

வியனிலாமாலாயந்த வியபதியுச்சமாகி
நயமுடன்புதனைப்பார்க்க நல்லபுண்ணியங்கள்செய்வன்
றயையொடுபத்திற்பூர்ணச் சந்திரனிருந்துவாழ்ந்தா
லயனிடவதிகாரத்தா லடவிகாசிக்கேபோவான். 5

12ல் புதன் இருந்து இவ்வதிபதி உச்சம் பெற்றுப் புதனைப் பார்த்தால் நல்ல புண்ணியம் செய்பவனாம். 10ம் இடம் வழற் பிறைச்சந்திரன் இருக்க காசியாத்திரை செல்வன்.

பாவர்கள்பிலர்களாகப் பத்தினிற்சாகசங்கள்
சீவர்கள்பிலவீநங்க டிருந்தநற்கருமஞ்செய்வான்
கோவமில்பத்தின்கோடான் குருபுதனிவரைக்கொண்டே.
யாவதேயாககன்ம மழிக்கச்சிந்திக்கலாமே. 6

பாபக்கிரகங்கள் பலம் பெற்று 10ல் இருந்தால் சாகசம் செய்வன். சுபர்கள் பலஹீன மடைந்து 10ல் இருந்தால் நற் கருமம் செய்யான். 10ம் அதிபதி வியாழன், புதன் இவர்கள் ஒருவருடைய தொழிலைப் பற்றிச் சொல்லலாம்.

பத்தினுக்குடையோன்லக்ந நாதனும்பதிந்தேகாதிப்
பத்தியமாகத்தானே பணமுண்டாய்ப்பண்ணும்யாக
மெத்தகன்மத்தோன்லக்ந நாதனுமெழிலாய்வேய்யோன்
முத்தவேளாளன்பொன்னா வியாகங்கண்முடிப்பனென்னே. 7

10ம் அதிபன், லக்கினாதிபதி இவர்கள் ஒரே கிரகமாயிருந்து (ஏகாதிபத்யம்) பிறந்தால் பணம் உண்டு. லக்கினாதிபதியும் 10ம் அதிபனும், சூரியனும் இருக்க விவசாயம் , பொன், யாகம் முதலியன உடைய வனாம்.

பத்திரமாகவிக்கோன் பதிந்திடவாவிதீண்டக்
குத்திரத்தேழின்பொன்னாற் கொண்டவனியாகம்பண்ணா
னுத்தமவியாழங்கூடி லுயர்ந்தராசாக்கள்கையான்
மெத்தவுந்திரவியங்கள் வேண்டியேயாகம்வேட்பன். 8

மேற் சொன்ன கிரகங்களானவை லக்கினத்திலிருக்க, 7ம் இடம் வியாழன் இருக்க யாகம் செய்யமாட்டான். இவ்விடம் வியாழன் இருந்தால் அரசர்களிடம் இருப்பான். திரவியம் உண்டாக யாகம் செய்வன்.

பத்தினுக்குடையோனேழிற் பதியனுமொன்றாய்க்கூடிற்
சொற்றிரிதிரவியங்கள் சுகமொடியாகந்துய்ப்பன்
வித்தகன்புந்திசங்கன் விளங்கியராசிக்கன்னோ
னொத்துடனொக்கயாக முண்டெனுமவர்க்குத்தாமே. 9

10ம் அதிபன் 7ல் இருக்க, இவ்வதிபனும் கூடிஇருக்க, திரவியம் சுகம், யாகம் முதலியன உண்டாம். வியாழன், புதன், சுக்கிரன் இருந்த ராசிக்குடையவர்கள் இவர்களைப் பார்க்க யாகம் செய்பவனாம்.

சந்திரன்றனக்குப்பத்தா மிடத்தினிற்சுபரேசார
வந்தியவுச்சவர்க்க முண்டெனவியாழங்கூடச்
சிந்தையால்வியாழம்பார்க்கச் செய்பவன்யாகமெல்லாம்
வந்தவனென்னுங்கீர்த்தி வழங்கிடுமகிமையானாம் 10

சந்திரனுக்கு 10 இடம் சுபர் இருக்க, வியாழன் உச்சம் பெற்று இவர்களுடன் கூடி இருக்க அல்லது பார்க்க நல்ல கீர்த்தியோடு யாகம் செய்வன்.

புதன்குருசுங்கனிந்தப் புண்ணியரிருக்கும்ராசிக்
கதிபனெட்டீராறேழி லமைந்தநல்லக்நமன்ன
விதியுடன்பண்ணியந்த விதங்களாற்கீர்த்தியாகிற்
பதியும்லட்சுமியாளன்ளோன் பாரிசம்படருவானே. 11

புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் இருந்த இராசிக்கு அதிபன் 6, 8, 12ல் இருந்து லக்கினாதிபதி சம்பந்த முற்றால் கீர்த்தியும் லட்சுமிகடாட்சமும் உண்டாம்.

குருபுதன்பத்தின்கோடான் கூடியேபிலவானாக
முருகுடனாகமான சக்கரமுழுதுமுய்ப்பர்
னிருவருந்தானக்கோளி லிருந்திடராகுதானு
மருவியேகூடிநின்று வாழ்ந்திடிற்றுன்மத்தானே. 12

வியாழன், புதன், 10க்கு அதிபன் கூடிப்பலம் பெற்று இருக்க அரசன் ஆவன். இருவரும் கூடி இருந்து இவருடன் ராகு சம்பந்தம் ஆனால் உன் மத்தம் உண்டாகும். (கிரிகை)

புதனுச்சமாகிக்கோது தன்னோடும்பொருந்தவல்லா
விதமுடன்வந்தோன்கூட விணங்கிடப்பத்தின்கோளும்
பதமுடனிவர்கள்கூடிப் பதிந்திடப்பிறந்தபிள்ளை
விதம்விதமானயாகம் யாவையும்விளைப்பனாமே. 13

புதன் உச்சம் பெற்றுக் கேதுவுடன் கூடி, இவருடன் 10க்கு அதிபனும் கூடி இருக்க பலவிதமான யாகம் செய்பவனாம்.

அதியுச்சமாகப்பத்தோ னதிபனோடழகாய்ப்புந்தி
மதியுடனேழிற்கூடி வாழநிச்சயமேயாகம்
புதனுடனிராகுகூடிப் பொருந்தவேபத்திலானா
விதமுடனல்லகன்ம மிணங்கிடான்றூஷிப்பானே. 14

உச்சம் பெற்ற 10க்கு அதிபனுடன், புதன், சந்திரன் இவர்கள் கூடி 7ம் இடம் இருக்க, நிச்சயம் யாகம் செய்வான். புதன், ராகு கூடிப் 10ம் இடம் இருந்தால் நல்ல செயல்களைச் செய்யாமல் தூஷணம் செய்பவனாம்.

பத்தினுக்குடையரோனாறி லெட்டினிற்பன்னிரண்டின்
முத்திடவிரோதகன்ம மென்னவுமொழியலாகு
முத்தமன்பத்துக்கோடா னுடன்புதனிராகுகூடி
லொத்திடக்கன்மத்தேக வுயர்ந்தநேரஞ்செய்வானே. 15

10ம் அதிபன் 6, 8, 12ல் இருக்க விரோத கன்மம் உண்டு. 10ம் அதிபன், புதன், ராகு கூடி 10ம் இடம் இருக்க நல்ல கன்மமும் நட்பும் உடையவனாம்.

நவமதிற்பத்துக்கோடா னாடிடப்பாக்கியத்தோன்
றவகுருலக்நநாதன் றன்னோடுகன்மக்கோளு
மவர்களும்பிலவானாக விருந்திடக்குணவான்றன்மம்
பவமிலாசாரன்கன்மம் விதியொடும்பண்ணுவானே. 16

9ம் இடம் 10க்கு அதிபதி இருக்க. இவ்வதிபதியும் லக்கினாதிபதியும் கன்மாதிபனும் பலமுடன் இருந்தால் குணம் உள்ளவனாம். தர்ம சிந்தனையாளனும், ஆசாரம், நற்கற்மம் முதலியன உண்டாம்.

பாக்கியத்ததிபன்பத்துக் குடையவனிலக்நநாத
னூக்கமாம்வியாழம்புந்தி யிடதிசையபகாரத்தி

லாக்கமாஞ்சற்கன்மங்க ளாசாரமியாகஞாநந்
தீர்க்கமாம்வித்தையெல்லாந் திட்டமாய்ப்பிலக்குந்தானே. 17

9, 7, 10, 5, 1, இவ்விடங்களைப் பாபர் பார்க்க 2ம் அதிபன் பலம் பெற்று இருக்க சகலதத்துவங்களும் உடைய வித்தனாகி யாகம் செய்வன். 9, 10, 1 க்குடையவர்கள், வியாழன், புதன் இவர்களுடைய திசை, அபகாரத்தில் நற்கன்மம், ஆசாரம், யாகம், ஞானம் வித்தை இவை முதலியன உண்டாகும்.

சந்திரற்குமூன்றாந் தானமேசலராசியாகி
லெந்ததன்மங்களாலு மிடிந்துடன்விழுந்துபோனா
லந்ததன்மங்கடன்னை யழகொடுபுதிதாய்க்கட்டி
வந்தபேர்தனக்குவேண்டும் பொருளெல்லாமைந்தன்செய்வன். 18

சந்திரனுக்கு 3ம் இடம் சலராசியாகி இருந்தால் எத்தொழிலால் கெட்டுப் போனதோ அதே தொழிலால் (கன்மம் = புண்ணியம்) புதியதாய் வலுப்பெற்று தனக்கு வேண்டிய பொருள் எல்லாம் உண்டு பண்ணுவன்.

பத்தினுக்குடையோன்கோபு ராங்கிசம்பரிவாயேற
மெத்தநற்குளமும்வாவி கிணறுடன்வெட்டிவைப்பு
னொத்தநற்கன்மத்தானோ டுயர்நவராசிக்கோட்கண்
மற்றொருபிலமாயாறு சாத்திரம்வகையாய்ச்சொல்லே. 19

10ம் அதிபன் கோபுராங்கிஷம் பெற, குளம், ஆறு, கிணறு முதலியன வெட்டி வைப்பவன் ஆவன். 10ம் அதிபனோடு 9ம் அதிபன் சம்பந்தமுற்றால் ஆறுசாஸ்திரம் கற்ற அறிஞனாய் இருப்பன்

ஐந்துகோணாலிற்கோடா னமர்ந்தொன்றாய்க்கூடிக்கெந்திர
முந்திடத்திரிகோணத்தி னுயர்பிலனாகிவாழ்ந்தாற்
புந்திசந்திரன்வியாழம் புகர்கதிர்சேயிலக்கிற்
சந்தவானபிறந்தானென்னு மல்லதுதவசியாவன். 20

5, 4ம் அதிபர்கள் கூடிக் கேந்திரம் திரிகோணத்தில் பலம் பெற்று இருக்க, புதன், சந்திரன், வியாழன், சுக்கிரன், சூரியன் இவர்கள் லக்கினம் இருக்க தவசியாவன்.

உரைத்திடுஞ்சாதகர்க்கு முறுபிலன்சொன்னதல்லால்
விருத்தனாய்மலைகடன்னில் விரும்புவன்குகைசஞ்சாரந்
தரித்துமேபிச்சைசன்னி யாசியாயேகதெண்டம்
பெருத்தஞாநங்கள்பார்ப்பான் பெரியவன்ராசயோகன். 21

முன் சொன்ன கிரக அமைப்பினை உடையவன் வயதில் மூத்தவனும், மலை, குகைகளில் சஞ் சாரம் செய்யப் பிரியம் உள்ளவனும், பிச்சை ஏற்றுச் சந்நியாசியாகித் தண்டம் முதலியன உடையவனாய் ஞானியாகி யாகம் செய்யவல்ல ராசயோகத்தை உடையவனாவன்.

பத்தினின்மூன்றுகோட்கள் பரிவுடனுச்சவர்க்க
மொத்துடன்கன்மக்கோடா னுயர்பிலமாய்ச்சந்நியாசி
யுற்றபத்ததிபனுக்கு முடையவனீனமானாற்
சற்றுமாசாரமில்லா னென்னவுஞ்சாற்றலாமே. 23

10ம் இடம் 3கிரகங்கள் உச்ச வர்க்கம் பெற்று இருக்க, 10ம் அதிபன் பலம் பெற்று இருந்தால் சந்நியாசியாகி ஆசாரமுடையவனாவர். 10ம் அதிபன் பலம் பெறாமலிருந்தால் ஆசாரம் இல்லாதவனாம்.

ஆக்கமாய்ப்பத்தின்கோடா னருள்பிலவீனமாகி
வாக்கினுக்குடையோனேழின் மன்னவனவர்களோடு
தாக்கிடச்சந்தியாசி தப்பிதமில்லையொன்னோர்
பாக்கியத்திரிகள்கைம்பெண் டன்னொடும்பரிவாய்க்கூடும். 24

10ம் அதிபன் பலகீனமடைந்து, 2ம் அதிபன் 7ல் வியாழனுடன் இருக்கச் சந்நியாசியாம். பாக்கியம் உடைய ஸ்திரீகளுடனும் விதவையுடனும் சேருபவனாம்.

சூரியன்சநிசெவ்வாயுந் துடர்ந்துபோயிரண்டிற்கோடான்
காரியமைந்தினாதன் றன்னொடுங்கலந்துநின்றால்
வீரியந்தன்னைநீக்கி வெறுத்துசந்நியாசியாவன்
சீரியதிரிகள்கைம்பெண் டன்னையுந்தீண்டானென்னே. 25

சூரியன், சநி, செவ்வாய், இவர்கள் கூடி இருக்க, 2ம் அதிபன் 5ம் அதிபனும் கூடி இருந்தால் (வேறிடம்) போக சுகம் இல்லாதவனாய் சந்நியாசி ஆவான். ஸ்திரீகளையும், கைம்பெண்ணையும் தொடாதவனாய் இருப்பான்.

ஆதித்தன்சுபர்களஞ்ச மாயுச்சவர்க்கமல்லாற்
பேதித்தகிரகமெல்லாம் பின்னையுங்கதிரைப்பார்த்தாற்
சாதித்தான்வாலிபத்திற் சந்நியாசியாகச்சார்ந்து
போதித்தஞாநயோகம் பொருந்துபுண்ணியவானாமே. 26

சூரியன் சுபர்கள் அம்சத்திலிருந்து உச்சவர்க்கம் பெறாமல் இருந்து

மற்றக் கிரகங்கள் சூரியனைப் பார்த்தால் வாலிப வயதில் சந்நியாசியாவன். ஞானயோகம் செய்பவனுமாயிருப்பான்.

சுக்கிரன்சந்திரலக்ந நாதனைத்துடர்ந்துபார்த்தால்
மிக்கசந்நியாசியாகித் திரவியம்விரும்பான்சற்று
மிக்கவருச்சமாக விருந்திடமதியாற்பார்க்கத்
தக்கசந்நியாசியாவ னன்றியுந்தனவானாமே. 27

சுக்கிரன் சந்திராலக்கினாதிபதியை பார்த்தால் சந்நியாசியாயும், திரவியங்களை விரும்பாதவனும் ஆக இருப்பான். இவர் உச்சம் பெற்று சந்திரனால் பார்க்கப்படுமாயின் தனமுடைய சந்நியாசியாவன்

சொன்னவிம்மூன்றுபேருங் கூடியேசுகமாய்வாழ
வன்னவர்தன்னைமற்றக் கிரகமுமடவாய்ப்பார்க்கத்
தன்னிசையபகாரங்க டன்னிற்சந்நியாசியாவ
னென்னவேயுரைத்தார்நூலோ ரெழில்கெழுதனத்தினாளே. 28

முன்சொன்ன மூவரும் கூடி இருக்க, மற்றக் கிரகங்கள் இவர்களைப் பார்க்க இவர்களது திசை, புத்திகாலம் சந்நியாசி ஆவான்.

சந்திரன்மைந்தனின்றோர் சார்ந்திடுமிராசிதன்னை
வந்தலக்கினத்துநாதன் பார்க்கத்தீட்சதனாமென்னு
மந்தன்றிரேகாணராசி மண்மகனிருக்குமோரை
யந்தத்தானத்திற்காரி யம்புலியுறச்சந்நியாசி. 29

புதன் இருந்த வீட்டாதிபதியை லக்கினாதிபதி பார்க்கத் தீட்சிதனாவன். சனியின் திரிகோண ராசியில் செவ்வாய் இருந்து இவர் இருந்து ஓராதிபன் இராசியில் சனி, சந்திரன் இருந்தால் சந்நியாசியாம்.

குருசநிசெவ்வாயின்னோர் கூடுமோராசிதன்னைப்
பரிவுடனிவர்கள்பார்க்க வல்லதுபதிந்துகூட
வருநவமதிலேபொன்னன் வந்திடராசனல்லாற்
பெரியசந்நியாசியாவ னென்றுநாம்பேசலாமே. 30

வியாழன், சநி, செவ்வாய், இவர்கள் கூடி இருந்து ராசியை பார்க்க அல்லது இருக்க, 9ம் இடம் வியாழன் இருக்க அரசனாவன் அல்லது பெரிய சந்நியாசி ஆவன்.

மதிநவமதிலேவாழ மறந்திடக்கிரகப்பார்வை
யதிசெயராசயோக மாகியேகோட்கள்வாழ்ந்தால்
விதியொடுகன்மஞ்செய்து மிகுந்ததீட்சதனாமென்ன
விதுவலால்ராசனாவ னென்பதையியம்பலாமே. 31

9ம் இடத்தில் சந்திரன் இருந்து பிறகிரகம் பாராதிருந்து ராசயோகம் பெற்று இருந்தால் அநேக கன்மம் செய்து தீட்சிதினாவன் அல்லது அரசனாவன்.

சந்திரன்வியாழமிலக்கனந் தன்னையேசநிதான்பார்க்கச்
சொந்தமாயொன்பான்பத்திற் றோன்றிடுங்குருவேயானால்
விந்தையாய்ராசயோகம் விளங்கிடராசனல்லால்
வந்தசந்நியாசியாகி மனைதொறும்பிச்சையேற்பான். 32

சந்திரன், வியாழன், லக்கினம் இவற்றைச் சனிபார்க்க 9ம் இடம் 10ம் இடத்தில் வியாழன் இருக்க ராசயோகம் உண்டாம். அரசனாவன் அல்லது சந்நியாசியாகிப் பிச்சை ஏற்றுத் திரிவன்.

நவமதினீலன்வந்து நாடிடமற்றக்கோட்க
டவமொடுவன்னோன்றன்னைச் சசியிலுநோக்கயின்றிப்
பவமறராசயோகம் பதியதீங்கதனாய்ராசாச்
சிவன்செயலெவர்க்கானாலுந் தெரியுமோசிந்தைநோவன். 33

9ம் இடம் சநிஇருக்க, மற்றக் கிரகங்கள் இவரைப் பார்க்க ராசயோகம்

பத்தினுக்குடையோனாலு பேருடன்பரிவாய்க்கூடி
யுற்றகெந்திரத்திரிகோணந் தன்னிலேயுலாவிநின்றாற்
பெற்றசாதகன்சந்நியாசிப் பெருமையால்மோசனாவா
னுற்றகன்மத்தினாலு கோளுநின்முனிவன்றானே. 34

10ம் அதிபன் 4கிரகத்துடன் கூடி 1, 4, 5, 7, 9, 10ல் இருக்க சந்நியாசி ஆவன். மோட்சமுண்டு. 10 இடம் 4 கிரகம் இருந்தால் முனிவனாவன்.

சனியைலக்கினத்தினாதன் சதிரொடுமவரைப்பார்த்து
புனிதமாய்க்கோட்களெல்லாம் பொருந்தவேபாராதாகி
யினியகன்மத்திலக்ன நாதன்றானிருக்கவல்லான்
மனதொடுபத்துக்கோடா னாயிற்சந்நியாசியாவன்.' 35

சனியை லக்கினாதிபதி பார்க்க, மற்றக்கிரகங்கள் இவரைப் பாராமல் இருந்து 10 இடம் லக்கினாதிபன் இருக்க. அல்லது 10ம் இடம் இருக்கச் சந்நியாசி ஆவன்.

சந்திரன்றன்னைநீலன் சுபரொடுபார்க்கமந்தன்
வந்திடுதிரேகாண்போக மோட்சசந்நியாசியாவன்

வந்தனன்மாற்றானோடு மந்திரிராகுகூடில்
விந்தையாய்க்கொடுரவங்ச மேவச்சந்நியாசியாவன். 36

சந்திரனைச் சனியும் சுபரும் பார்க்க சனிக்கு திரிகோணம் போக சந்நியாசி ஆவன். மற்றக் கிரகங்களோடு வியாழன், ராகு கூடிக் கொடுரோங்கிஷம் பெறச் சந்நியாசி ஆவன்.

கன்மத்தானீசவத்த மனங்களாய்க்கண்டுநிற்க
வன்மத்தாற்பத்திற்செவ்வா யாவதுமந்தன்வாழச்
சென்மசாதகனாய்வந்தோன் செகத்திற்சந்நியாசியாகி
யின்பத்தாற்சுரபானங்க ளியல்புடன்செய்வானன்றே. 37

10ம் அதிபன் நீச அஸ்தமனம் பெற, 10ல் செவ்வாய், சனி இருக்க, சந்நியாசி ஆவன். இருப்பினும் சுரபானம் (மது) செய்பவனாம்.

பதிந்தசீவனங்களெல்லாம் பகலவன்முதலாய்த்தந்தை
யிதந்திரிசகோதரங்க ளியல்புடைத்தாயார்மற்று
மதந்தருலக்கினத்தை மதியொடுபத்தின்கோடான்
முதிர்ந்தவங்கிசங்கள்பார்த்து முயலுஞ்சீவனங்கள்சொல்லே. 38

ஒரு ஜாதகருனடய தொழில் முதலியன சொல்ல வேண்டுமாயின் தந்தை, சகோதரம், தாய், லக்கினம், 10ன் கோன் முதலிய அங்கிஷம் பார்த்துச் சொல்ல வேண்டும். (9, 3, 4, 1, 10)

கன்மத்தானத்தினாதன் கதிர்நவாங்கிசத்திலேறத்
தன்குணத்திருகுதாள சமுத்திரயாபாரத்திற்
பொன்றிரவியங்கண்முற்றும் பொருந்தியயாபாரங்க
ளன்புறுசிநேகந்தூது மானசீவனமாய்வாழ்வன். 39

10ம் அதிபன் சூரியன் அங்கிஷம் பெற்று இருந்தால் திருகு தாள (எதிலும் அகப்படாதவன்) முடையவனாய் கடல்கடந்து வியாபாரம் செய்து, தூது முதலியனவும், நட்பும் உடையவனாய் பொருளீட்டி வாழ்வன்.

சந்திரனவாங்கிசத்திற் சதிரொடும்பத்தின்கோடான்
வந்திடச்சிலதுர்ப்புத்தி யாய்வருபதார்த்தத்தாலும்
விந்தைவோளண்மைமன்னால் விநோதமாம்வித்தைதன்னாற்
றந்தராசாக்களானோர் தமையநுசரித்துவாழ்வன். 40

சந்திரன் நாவாங்கிஷத்தில் 10ம் அதிபன் இருந்தால் துர்ப்புத்தியும், புசிக்கக் கூடிய பதார்த்தங்களாலும், விவசாயம், விநோதவித்தை, அரசர் நேசம் இவற்றால் ஜீவனம் உண்டு.

பத்தினுக்குடையோன்செவ்வா யங்கிசம்பதிந்துவாழ்ந்தாற்
சத்தியாய்ப்பூமியாலே சண்டையின்விபரத்தாலு
மற்றுளகுணத்தாலங்கிசம் வாதத்தாற்கனவினாலு
மெத்தவேகலகத்தாலும் விளங்குசாகசத்தாற்சீவன். 41

10ம் அதிபன் செவ்வாய் அங்கிஷம் பெற்று `சண்டையின் மூலம் வருவாய் தேடுபவனும், களவாடிச் சீவனம் பண்ணுபவனும், விவேக முடையவனுமாய் இருப்பான்.

புதனவாங்கிசத்திற்பத்துக் குடையவன்பொருந்திவாழ்ந்தால்
விதமொடுசிற்பவித்தை விதியொடாமங்களாலு
மிதமிகுகணக்கான்ஞாந வேதத்தின்வகையானெய்யாற்
சிதநாதசேரதிஷத்தாற் சொல்லும்புரோகிதத்தாற்சீவன். 42

புதன் நவாங்கிஷத்தில் 10ம் அதிபன் இருந்தால் சிற்பம் செய்ய வல்லவனும், ஹோமம் செய்பவனும், கணக்குத் தொழில் செய்பவனும், வேதம் ஓதுபவனும், நெய், சோதிடம், புரோகிதத்தொழில் முதலியவற்றால் ஜீவனம் உண்டு

குருநவாங்கிசத்தாற்கன்மன் கூடவேதியனாத்தெய்வத்
திருவுளப்பொருட்டான்மிக்கச் சிவபுராணங்களாலு
மருவுசாத்திரத்தால்வேத வகையாகமத்தாற்றானம்
பெருமையாலுபதேசத்தாற் பேசமார்க்கத்தாற்சீவன். 43

வியாழன் நவாம்ஷத்தில் 10ம் அதிபன் இருந்தால் தெய்வசிந்தனை. சிவ புராணம், சாத்திரம் ஓதுதல், வேதம் பேசுதல், உபதேசம் முதலியவற்றால் ஜீவனம் உண்டு.

வெள்ளியினவாங்கிசத்தில் விளங்கிடப்பத்தின்கோடா
னுள்ளதாய்ப்பொன்மாணிக்க முயர்பரிகரியாலிந்தக்
கள்ளயாபாரங்கண்டு சர்க்கரைதயிர்வங்கத்தாற்
பள்ளிகொளீலைதன்னாற் பெண்களின்பத்தாற்சீவன். 44

சுக்கிரன் நாவம்சத்தில் 10ம் அதிபன் இருந்தால் பொன், மாணிக்கம் முதலிய ரத்னங்களாலும், யானை, குதிரை முதலியவற்றாலும் தயிர், நெய், சர்க்கரை லீலையாலும் பெண்ணின்பம் முதலியவற்றாலும் ஜீவனம் ஏற்படும்.

சனிநவாங்கிசத்திற்கர்ம்மன் சார்ந்திடக்கபடுமார்க்கத்
தினிமரம்வேடம்விற்றுச் சினத்துடனதட்டியாலு

மினியநற்கணக்காயன்ய வன்னியத்தியல்வாயாலு
மனிதரைப்போட்டிசெய்து வயிரத்தால்வாழுஞ்சீவன். 45

சனி நவாங்கிஷத்தில் கர்மாதிபன் சார்ந்திட கபடுமூலம் ஜீவனம், (கபடு - ஏமாற்று) மரம், வேட்டுவத்தொழில், கோபம், அதிகாரம் அன்னியர் சொத்தில் ஆசை, போட்டி இவைகளால் ஜீவனம் உண்டு.

ஒன்றுநான்கேழுபத்தி லுறுபவரோடும்வாழ்ந்தான்
மன்றினினீசத்தேழின் பகையினால்வாழுஞ்சீவ
னன்றியல்கேந்திரகோண லாபமேநண்ணுமாகில்
வென்றசூத்திரத்தால்ராசப் பிரியத்தால்வழங்குஞ்சீவன். 46

1, 4, 7, 10ல் இருந்தால் உறவினருடன் வாழ்வன், நீசம், 7இவை முதலிய ராசியானால் சத்துருக்களுடன் வாழ்வன். 1, 4, 7, 10, 5, 9, 11ல் இருந்தால் சூத்திரர்களால் அரசர்களினாலும் ஜீவனம் உண்டு.

சொன்னவித்தானந்தன்னிற் சுகமோடுசுபரேவாழ
மன்னவன்கீர்த்திமானாய் வணங்கியேகுணவானாகப்
பொன்னொடுந்திரவியங்கள் புகழ்மன்னர்பிரியத்தாலு
மின்னியகுணமதான வித்துவமதனாற்சீவன். 47

மேற்சொன்ன ஸ்தானங்களில் சுபர் இருக்க, இவன் குணமுடைய கீர்த்திமானாய் இருப்பான், மேலும் பொன், பொருள் தானியம் மன்னர் சேர்க்கை, வித்துவத்துவம் இவற்றால் சீவனம் ஏற்படும்.

பத்தினிலிருந்தோன்பத்தி லங்கிசம்பரிந்துவாழ்வோ
னுத்தமச்சுபராய்ப்புண்ய வானெனவுலகிலோது
மொத்தகன்மத்திற்பாப ருறுதியங்கிசமேயானாற்
சற்றுநற்றர்மம்பண்ணான் சகலரும்பவனேயென்பார். 48

10ம் இடம் இருந்த கிரகம் சுய அங்கிஷம் பெற இவர் சுபக்கிரகமாய் இருந்து பிறந்தால் புண்ணியவானாம். 10ம் இடம் இருந்த கிரகம் பாபர் அங்கிஷம் பெற தர்மம் இல்லாதவனாவன் எனப் பழிக்கப்படுவன்.

சந்திரலக்கனத்துக்கிந்தச் சங்கையாய்ப்பலனேதென்றான்
முந்தியேயுரைத்ததானப் பலனையுமொழியீரென்ன
வந்தபத்தாமிராசி யங்கிசத்ததிபன்பாபர்
வந்ததுமாதியோடே மருவமாபாவம்பண்ணும். 49

சந்திர லக்கினத்துக்கு மேற்சொன்னவாறு கிரகமமைந்து இருந்தால்

முன்கவியின் சொன்ன பலனே ஆகும். 10ம் ராசிக்குடைய கிரகத்தின் அங்கிஷாதிபன் பாபக்கிரகம் ஆகிப்பாருடன் கூடினால் கிரகத்தின் அங்கிஷாதிபன் பாபக்கிரகம் ஆகிப்பாருடன் கூடினால் பாபம் செய்பவனாவன்.

மதிதனக்கப்பால்பத்தில் வருகதிர்செவ்வாய்வந்தாற்
சதிரொடுபாவபுந்தி சாரச்சாகசமேசெய்யு
மதிசேய்வியாழத்தான மாகவேவித்துவானாய்ப்
பதியினில்ராசாவுக்குச் சரியெனப்பதிந்துவாழ்வார். 50

சந்திரனுக்குப் 10ம் இடம் சூரியன், செவ்வாய் வந்தால் இவருடன் பாபாதிபத்யம் பெற்ற புதன் சேர்ந்தால் சாகசம் செய்வன். சந்திரன் செவ்வாய், வியாழனின் இடத்திலிருக்க வித்துவானாவன். இவன் அரசனுக்குச் சமமாய் வாழ்வன்.

சந்திரன்றனக்குப்பத்திற் சதிரொடுசுங்கனானா
லெந்தெந்தபோகமெல்லா மியல்புடைத்துய்ப்பானென்ன
மந்தனேவந்துவாழ்ந்தால் வருத்தனாய்த்துக்கனாவன்
செந்திருவனையமாதே தெரிவதீதரிதுதானே. 51

சந்திரனுக்குப் 10 மிடம் சுக்கிரன் இருக்கச் சகல போகசுகம் உண்டு சனி மேற் சொன்ன விடத்தில் இருந்தால் துக்கமுண்டு.

அம்புலிதனக்குப்பத்தி லாதித்தன்செவ்வாயாகில்
வெம்பியமாதர்வேசைத் திரிகளைவிரும்பநல்ல
னம்பியேவியாழஞ்சுங்க னயமொடத்தாநஞ்சேரிற்
றம்பிதான்கோபப்பெண்டீர் தாவியுந்தனியேசேரும். 52

சந்திரனுக்கு 10மிடம் சூரியன், செவ்வாய் ஆனால் வேசியை விரும்புவன், வியாழன், சுக்கிரன் இருந்தால் கோபமுடைய பெண்களைச் சேர்ந்து வேறுபடுவான்.

திங்களுமப்பால்பத்திற் சேய்புதன்றிருந்திவாழ
மங்கவாயுதங்கடொட்டுச் சேவகமதனாற்சீவன்
சுங்கன்சேய்தான்பத்தானாற் றொழில்செய்வன்பரற்குக்கத்தன்
சங்கையாஞ்சநிபத்தானாற் றரித்திரன்றனியேவாழ்வன். 53

புதன், செவ்வாய் இருக்க ஆயுதங்களினால் சேவகம் செய்து ஜீவனம் சுக்கிரன், செவ்வாய் இருந்தால் தொழில் செய்வான். சனி இருந்தால் தரித்திரமும் தனிவாழ்வும் உண்டாகும்

சொல்லியபத்தில்ராகு சநிபுதன்றோன்றிநின்றா
லல்லியாமல்லான்மன்ன மன்னனென்றரசர்போற்று
நல்புதன்றிங்கள்சுங் னாடியேபத்தினண்ண
வில்லிடத்திரியும்வித்து வானெனவியப்பாய்ச்சொல்லே. 54

10 இடம் ராகு, சநி, புதன், இருந்தால் மன்னர் மன்னனும், புதன், சந்திரன், சுக்கிரன் இருக்க வித்துவானாய் இருப்பான்.

பத்தினின்மந்தன்வந்து பரிவிடனிருந்துவாழ்ந்தாற்
புத்தகமெழுதச்சேர்க்கப் புகழ்விசேடத்தைப்பூண்பான்
வித்தகமானவெள்ளி வியாழமும்விளங்கப்பத்தி
லுற்றபண்டிதனாய்ராசப் பிரியனாயுலகில்வாழ்வான். 55

10மிடம் சனி இருந்தால் புத்தகம் எழுதுவதும், புத்தகம் சேர்ப்பதும் பிரியமுடையவன் ஆவன். வெள்ளி ஆகிய சுக்கிரனும் வியாழனும் இருந்தால் பண்டிதனும் அரசர் பிரியனுமாவன்.

குருமதிநீலனொன்றாய்க் கூடியேபத்திலேற
வருபலசுகந்தநீல மன்னுசொர்ன்னத்தாற்செட்டு
மெரிகதிர்கன்மத்தேறி விடர்படுஞ்சனங்கள்சாடி
தெரிவதுகொஞ்சநெஞ்சந் தெளிந்தவனென்னுஞ்சீவன். 56

வியாழன், சந்திரன், சனி, இருந்தால் நறுமணமும், தங்கத்தால் ஆகிய வீடுகளும் உண்டு. சூரியன் 10ல் இருந்தால் சனங்களால் துன்பப்படுவன். சிறிது ஜீவனம் உண்டு.

பத்தினுக்குடையோன்வாழ்ந்து பதிந்திடுமோரைநன்றா
யுற்றநற்சுபராயன்னோ ருடன்சுபருடனேவாழ்நாள்
பத்தனற்சுபரேபார்க்க வரிற்சுபவங்சமேற
வெத்தனையேனுஞ்சேனைக் கிவனிசமானாவானே. 57

10ம் அதிபன் சுபர் வோரையிலிருந்து சுபக்கிரகமாயிருந்து பிறந்தால் சுபருடன் வாழ்வான். சுபக்கிரகம் பார்க்கச் சுபர் அங்கிஷம் ஏறி இருந்தால் சேனைகளுக்கு அதிபதியாவன். (தளபதி)

கன்மத்தானத்தானந்தக் காரியருடனேகூடி
வன்மத்தாலட்டமாதி பதியவனவரைப்பார்க்க
வன்பற்றகொடூரவங்ச கெந்திரமேறுமாகிற்
சென்மத்தாலதிகவாக்னை செய்திடுந்தேகனாவான். 58

10ம் அதிபன் சனியுடன் கூட, இவரை அட்டமாதிபதி பார்க்க கொடுரோங்கிஷ கேந்திரத்தில் இருக்குமேயானால் அதிக அரசதண்டனைக்கு ஆளாவான்.

சந்திரன்கடகந்தன்னிற் சார்ந்திடச்சதிராய்ச்சுங்க
னந்தணனிவர்களியாரு மழகுடன்மதியைப்பார்க்க
வந்தபாராவதங்ச மானதிலேறிவந்தான்
முந்தவேதிரவியங்க ளுதித்திடுங்கீர்த்திவானாம். 59

சந்திரன் கடகத்திலிருக்க, சுக்கிரன் கூடிட வியாழன் இவர்களைப் பார்க்க பர்வதாங்கிசம் ஏறி இருந்தால் திரவியம் உடைய கீர்த்திமானாய் வாழ்வன்.

பத்தினுக்குடையோனல்ல பரிசுபருடனேயல்லா
லுற்றநற்சுபர்கண்மத்தி யத்திலேயூறிவாழ
மெத்தநற்சுபர்களங்ச மேவவேகீர்த்திமானாய்
வைத்தவிமாநகத்த னென்னவேவழங்கும்லோகம். 60

10ம் அதிபன் சுபருடன் கூடி அல்லது சுபர்மத்தியில் இருக்க சுபர் அங்கிஷம் ஏறி இருந்தால் கீர்த்திமானாய் அபிமானம் உடையவனாய் இருப்பான் என உலகோர் சொல்வர்.

கன்மத்தானத்திற்பாபர் கலந்திடப்பாபர்பார்க்க
நன்பத்தாமிடத்துக்கோடா னற்பிலவீனமாக
வன்பற்றவறுபதத்தா னாகுந்தன்கள்மவீட்டி
லின்புறுகாந்திகீர்த்தி யில்லைசாமென்றுசொல்லே. 61

10ம் இடம் பாபர் இருக்கப் பாபர் பார்க்க, இவ்வதிபன் பலகீனமடைய, இவன் வீட்டில் அழகு செல்வாக்கு இல்லையாம்.

திருந்தியசெவ்வாயன்னோன் றன்னையேதிரும்பிப்பார்த்தோன்
பொருந்தியபிலவானாகப் புகழ்திரிகோணகேந்திரம்
வருந்திடப்பத்தின்கோளு மதியுஞ்சுக்கிரனும்பார்க்க
விருந்தவேளாண்மைலாப மடிமைமாடுடனேயாமால். 62

செவ்வாயும், இவரைப் பார்ப்பவரும் பலம்பெற்று இருக்க இது 1, 4, 7, 10, 5, 9 ஆக இருந்து 10ம் அதிபனும் சுக்கிரனும் பார்த்து வேளாண்மையால் லாபம், ஆளடிமை, ஆடு, மாடு முதலிய யோகம் உண்டு.

பத்தினுக்குடையோனெந்த நவாங்கிசம் பதிகின்றானோ
வுற்றனவாங்கிசத்துக் குடையவன்சநிசம்பந்தஞ்

சத்துருத்தானநாதன் சார்ந்திடவல்லார்பார்க்க
மெத்தவெள்ளாட்டியாட்க ளடிமையுமிகவுண்டாமே. 63

10ம் அதிபன் இருந்த நவாம்சாதிபன் சனியுடன் கூடி இருந்து 6க்கு அதிபன் இவருடன் கூட அல்லது பார்க்கப் பிறந்த ஜாதகர்க்கு அடிமையாட்கள் மிகவுண்டு.

11-மிடம் பலன்களாவன

சொல்லியலாபமந்த ராசியிற்றோன்றுங்கோளை
நல்லவெய்யோன்றாயாதி நலமிகுமதியாய்வர்க்க,
மல்லல்செய்பிறப்புபுந்திப் பவமானவழிவர்க்கத்தா
மெல்லவேபிலமாலாபந் திரவியவிதங்கள் சொல்லே. 64

11ம் இடம் இருந்த கிரகம் சூரியனாகில் பிதா, சந்திரன் ஆகில் தாய், புதன் ஆனால் அம்மான் வழியால் லாபம் உண்டு

அந்தணன்லாபமீதி லடையவேயாகச்சாரம்
வந்திடும்வேதசாத்ர வகைதிரவியமுஞ்சேயாங்
கந்தரச்சுங்கன்லாபந் தோன்றிடவலங்காரங்கள்
விந்தைநாடகஞ்சங்கீதம் வித்தைகாவியமாமார்க்கம். 65

வியாழன் 11ல் இருக்க ஆசாரத்தாலும், வேதசாத்திரவகையாலும், சுக்கிரன் இருந்தால் அலங்காரம், நாடக்ம் சங்கீதம் காவியம் முதலிய வற்றாலும் உண்டு

காரிலாபத்திற்றோன்றக் காலும்வேளாண்மைதான்ய
மூரிவெள்ளாட்டிபள்ளுப் பறையுடன்முயன்றுசொல்லச்
சீரியவசுவலாபத் திரவியஞட்சீராய்த்தேடுங்
கூரியபரிவாற்பாவங் கொண்டேன்றேடும்பொன்னே. 66

சனி 11ல் இருக்க விவசாயம், தான்யம், பள்ளுப்பறைசாதி, இவர்களாலும் குதிரை திரவியம், தேடுவன்.

பாபருஞ்சுபருமாக லாபத்திலிருந்துவாழ்ந்தா
லாலதேதிரவியங்க ளதமத்தாற்றனமற்றாலுஞ்
சீவன்மால்குருவும்லாபஞ் சென்றிடவித்தைபுத்ரர்
தாவியவேந்துதன்றன் கிரியையாற்றனமுந்தேடும். 67

பாபர்களும், சுபரும் லாபத்தானம் இருக்க, ஞாயமற்ற நிலையில் தனமும் உண்டு 11ல் புதன் வியாழன் இருக்க வித்தை, புத்ரவர்க்கம் அரசன், கிரியைகள், இவற்றால் தனம் தேடுவன்.

சொல்லியலாபமீதிற் றோன்றியகிரகந்தன்னின்
மெல்லியவிட்டகோட்கள் விளங்கியபிலத்தைப்பார்த்து
நல்லசாதகர்க்குப்புத்தி நற்குணம்வாகநங்க
டுல்லியாபரணம்பட்டுத் திரியுடன்சுகத்தைச்சொல்லே. 68

11ல் இருந்த கிரகத்தில் வலுவறிந்து புத்தி, குணம், வாகனம், ஆபரணம் பட்டு, ஸ்திரீசுகம் முதலியன கூற வேண்டும்.

வாக்கினுக்குடையோன்லாப மன்னவன்லக்நநாத
னாக்கமாயிட்டகோளா யமர்ந்திடத்திரவ்யலாபந்
தாக்குநற்கன்மந்தெய்வம் பிராமணன்றனக்குப்பத்திற்
போக்கிலேபாவம்போகம் பொருந்தவேதானஞ்செய்வன். 69

இரண்டாமதிபன், 11க் குடையவன், லக்கினாதிபன் இவர்கள் 11ல் இருக்க தனலாபம், நற்கன்மம், தெய்வம், பிராமண்ன் இவர்களால் லாபமடைவன். இத்தானம் பாபர்களிருந்தால் தானம் செய்வன்.

சொன்னலாபத்திற்கோட்க டோன்றிடப்பிலமோவீர
மென்னநீசம்மாம்ராசிக் கிரகமாயெட்டீராறு
முன்னமேயிருமூன்றுக்கு முதல்வனாய்ச்சாதகர்க்கு
மன்னமேரேகாயோக மாகவுந்தினமும்பிச்சை. 70

11ம் இடம் இருந்த கிரகம் பலகீனமடைய இவ்வதிபன் நீச அஸ்தமன கதி அடைந்து 6, 8, 12ல் இருந்த ஜாதகன் பிச்சை எடுப்பவனாம்.

லாபத்தான்லாபமீதுற் றிருந்திடவியல்பாய்வெய்யோன்
லாபத்தான்மதியுங்கூடி யூறிடப்பலனேதென்னிற்
சோபத்தினாலேராசா வென்னவுஞ்சொல்லலாமே
கோபத்தையனையாயிந்தக் குறியறிந்தினிதுகூறே. 71

11ம் அதிபன் 11ல் இருக்க, சூரியன், சந்திரன் சம்பந்தமுறப் பிறந்த ஜாதகர் அரசனாவன்.

திருந்தியசெவ்வாய்லாபஞ் சேரமந்திரியாம்புத்திப்
பொருந்தியேவிவசாயத்தாற் போதவேபணமுந்தேடு
மருந்தெனவியாழம்புந்தி வரலாபமீதுவிந்தை
வருந்தியவேந்துபுத்ரர் வணக்கமாஞ்சாதியாசான். 72

11ல் செவ்வாய் இருக்க, வியாழன், புதன் கூடி இருந்தால் விவசாயப் பலிதம் உண்டு இதனால் தனம் உண்டாகும். வியாழன், புதன் 11ல் இருக்க வித்தை அரசன் புத்திரர் இவர்களால் நன்மை உண்டு.

குருவுடன்சுங்கன்கூடிக் குணமொடுலாபங்கொண்டால்
வருபலனிரத்நம்யானை வலபரிபசுக்களெல்லாந்
தருநலதிரியுஞ்சாருஞ் சநிலாபந்தாண்டக்கண்டா
லருளிலாப்பொல்லாக்கன்ம மாகவேநடந்துகொள்வான். 73

வியாழன் சுக்கிரன் கூடிப் 11ல் இருக்க, ரத்தினம், யானை, குதிரை, பசு, ஸ்திரீ, முதலியன உண்டாகி இவற்றால் நன்மை அடைவான். சனி இருந்து பிறந்தால் பொல்லாத செயலை உடையவன் அவன்.

கெந்திரத்ரிகோணந்தன்னிற் கெழுமியேலாபக்கோடான்
சார்ந்திடுலாபமீதிற் றருபவரிருக்கவின்னோர்
வார்ந்திடுமுச்சவர்க்க மாத்திரவியங்களெல்லாஞ்
சேர்ந்தகோடங்கடங்க டிசைவரிற்சேருமாதே. 74

1, 4, 5, 7, 9, 10ல் 11க்குடைய கிரகம் இருக்க, 11ல் இவ்வதிபர்கள் இருந்து உச்சவர்க்கம் பெற இவர்கள் திசா, புத்திக் காலம் வரும் போது திரவியம் உண்டாகும்.

பதினோராம்பாவம் – முற்றிற்று

பனிரண்டாம்பாவம்

வியமதற்குடையநாதன் வியத்தையுஞ்சநியும்பார்த்து
நயமுறத்தூரதேச நடப்புநன்றில்லாக்கீர்த்தி
தயவுடன்றாதரவாகிக் கொடுப்பதுஞ்சயனந்தானும்
பயமுடன்றிரவியங்கள் செலவுடன்பரிவாற்சொல்லே. 1

ஜென்மலக்கினத்தற்கு 12க்குடையவன் 12ஐயும் சனியையும் பார்த்தால் தூர தேசம் நடந்து போவான். கீர்த்தியில்லாதவனும். நிராதரியாய் திரிபவனும், தூக்கமுடையவனும் செலவு செய்பவனும் ஆவன்.

சொல்லியபன்னிரண்டிற் சுகசாதகிரகமாக
வில்சரராசியாக வீராறாறெட்டாறுக்கு
நல்லவனதிலேவாழ நாடியேசநியுங்கூட
வல்லதானீலன்பார்க்க வவன்றேசங்காட்டுக்காவான் 2

12ல் சுபக்கிரகம் இருக்க, இவ்விடம் சரச்சேத்ரமாய் இருந்து 6, 8, 12ல் சுபர்கள் இருக்க, இவர்களுடன் சனி கூடிட அல்லது பார்க்கப் பிறந்தவன் காட்டுக்குப் போவான்.

வியமதிற்சுபரிருக்க விரும்பியேசுபருங்கூட
தயவொடுதிரவியத்தைச் சதிரோடுந்தியாகஞ்செய்வான்
பயவருட்டங்களான கிரகங்கள்பதியப்பார்க்க
நயமிலாத்துன்மார்க்கங்க ணாடியேசெய்வன்பொன்னே. 3

12ல் சுபர் இருக்க, சுபர் கூடிட தனது பொருளைத் தானம் செய்வன் பகைக்கிரகம் இருக்க, பார்க்க பிறந்தவர் துர்ச்செயல்களை உடையவன் ஆவன்.

சொல்லியபன்னிரண்டிற் றோன்றியகிரகத்துக்கு
வல்லகாரகனானாலும் வருபிலவீனமானா
னல்லசாதகருக்கன்னோர் நற்றிசையபகாரத்தின்
மெல்லவேதிரவியங்கள் வெகுசெலவாகுமென்னே. 4

12ல் இருந்த கிரகம் சுபக்காரகத்துவம் பெற்ற போதிலும் இவர்களது திசா புத்திக் காலம் வரும் போது திரவியம் நாசம் ஆகும்.

ஆறெட்டுக்குடையோன்பாவ ராய்ப்பிலவீநமாயீ
ராறில்வேளாண்மைதன்னா லுறுதிரவியங்கள்சேதங்
கூறியவியத்தினாலு கிரகங்கள்கூடமாகி
னீறெனவடியார்தாமு நிச்சயநாசமாமே. 5

6, 8க்குடையவன் பாபக்கிரகமாகிப் பலகீனமாகி 6ல் இருந்தால் விவசாயத்தால் பொருட் சேதமுண்டு. 12ல் இருந்தாலும் உண்டு.

வியந்தனில்வேதக்கோட்கள் விளங்கிடமிருந்தானென்ன
வியறிரிகிரகங்கூடி யிருந்திடவியத்திலல்லாற்
றயவினாற்கோள்பன்னி ரண்டினிற்சாதகர்க்கு
நயமிகுமந்நியோந்நிய மவர்களாற்றிரவ்யநாசம். 6

12ல் வியாழன், சுக்கிரன் இருக்க, 3கிரகம் கூடி இருக்க அல்லது 12ல் நற்கோள்கள் இருக்க மிகவும் நெருங்கியவர்களால் திரவியம் நாசம் ஆகும்.

சொல்லியதானந்தன்னிற் சுபர்வரிற்றியாகியாவ
னல்லுணவன்வேளாண்மை நன்மையாந்தன்மஞ்செய்வ
னில்லையாலவியத்திற்பாப ரிருந்திடவிவகாரத்தா
லல்லவேகிரகமாட்சி யாயபகாரியன்னோன். 7

12ல் சுபர் இருக்கத் தியாகியாம், நல்லுணர்வு, வேளாண்மைப்பலிதம், தர்மம் செய்தல், முதலியன உண்டு, பாபக்கிரகங்கள் இருந்தால் விவகாரம் உண்டு. இது ஆட்சி பெற்றால் சுபகாரியம்.

சூரியன்மதிதான்பன்னி ரண்டினிற்றோன்றிநின்றாற்
சீரியராசயோகஞ் சேரினுந்திரவ்யநாசங்
காரியச்செவ்வாய்திங்கள் கலந்துடனிருக்கப்பார்க்க
வீரியத்தாலுநானா விதத்தினுந்திரவ்யநாசம். 8

சூரியன், சந்திரன், 12ல் இருந்து பிறந்தால் ராச யோக ஜாதகமாய் இருந்தாலும் திரவிய நாசம் உண்டாம், செவ்வாய் சந்திரன் இருக்க அல்லது பார்க்க வீரியத்தாலும் (பகை உணர்வு) மற்றும் பல வழிகளாலும் பொருள் நாசம் உண்டாகும்.

அந்தணன்றிங்கள்சுங்க னறிவொடுவியத்திலேறச்
சிந்தையாற்றேடும்பொன்னைத் திருந்தரட்சிப்பனென்ன
விந்தையால்வியத்திற்சுங்கன் மேவிடசுபருங்கூடச்
சந்தமாய்ச்சுபரும்பார்க்கச் சயனத்திற்ககவான்சாற்றே. 9

வியாழன், சந்திரன், சுக்கிரன் 12ல் இருக்க, தனது பொருளை காக்கவல்லவனாகுவன். 12ல் சுக்கிரன் இருந்து சுபர் கூடிட சுபர்பார்வை பெற்றால் சயன சுகம் (தூக்கம்) உண்டு.

அதியுச்சபாகந்தன்னி லமர்ந்திடவியத்தானத்தோன்
பதியவேதூங்குமஞ்சம் பதிந்திடச்சயநஞ்செய்வ
னிதுவலாற்பாக்கியத்தோ னியல்புடனவனைப்பார்த்தாற்
புதுநவமணிகளாலே பூஷணமிகவுண்டாமே. 10

12ம் அதிபன் உச்சபாகையில் வலுப் பெற்றிருந்து கட்டிலின் மீது சயனம் செய்பவனாகுவன். மேலும் 9ம் அதிபன் இவரைப் பார்த்தால் நவரத்னங்களால் ஆன திரவியம் அதிகம் உண்டாம்.

இட்டமாய்ச்சுங்கன்மந்தன் மதியொடுமிவர்களாறே
லட்டமத்துக்குமப்பா லாகியதிரிகோணத்தின்
முட்டியேவந்தோர்க்கெல்லா மாவதேராசயோகந்
திட்டமாயிதனைப்பார்த்துத் திடம்படத்தேர்ந்துசொல்லே. 11

சுக்கிரன், சனி, சந்திரன் இவர்கள் 8க்கு 5, 9ம் இடம் ஆகிய திரிகோண ராசியில் இருக்க ராச யோகம் உண்டாம்

சுக்கிரன்பாபரோடுங் கூடியேவியத்திற்றோய்ந்தான்
மிக்கதாய்த்திரியுந்தானும் விரும்பியோசயநஞ்செய்வன்
மிக்கசேய்சுங்கனோடுங் கூடியேவியத்தில்வீழ்ந்தால்
வட்கையும்பலனுந்தானு மறந்துபோய்விழுந்துபோமே. 12

சுக்கிரன் பாபக் கிரகத்துடன் கூடிப் 12ல் இருந்தால் இவனும் இவனது மனைவியும் விருப்பமொடு சயனம் செய்பவராம், செவ்வாய் சுக்கிரன் 12ல் இருந்தால் வீரியம் இழந்து போகும்.

மந்தனும்ராகுவட்ட மாதிபன்வலுவதாக
வந்திடவியத்தானத்தின் மருவிடச்சாதகர்க்கு
முந்தவேநாகலோக மென்னவேமொழிவதல்லால்
விந்தையாய்ரவரவாதி நரகத்தில்வீழ்வான்மின்னே. 13

சனியும், ராகுவும், எட்டாம் அதிபனும் வலுவடைந்து 12ல் இருக்கப் பிறந்தவன் ரவரவாதி ஆகிய நரக லோகம் அடைவன்

உதயத்தானத்தின்விண்ணி னுடுபதிபார்த்தானாகிற்
பதியைத்தானிகழ்ந்துத்தந்தை பரகிரகத்திலன்பன்
விதியற்றகாமத்தெட்டி லொன்பதில்வெய்யோன்மேவிற்
பதியற்றாலுபயமொன்னார் சாரமயலூராமென்னே. 14

லக்கினத்தைச் சந்திரன் பார்த்தால் கணவனை இழந்து போவாள் தந்தை பிறர்வீடு செல்வன். 8, 9ம் இடம் சூரியன் இருந்தால் இது உபய மானால் அருகிலும் சரமானால் வெளியூரும் செல்வன் (பதி; கணவன், பதி; வீடு) எதுவெனத்தெரிந்து சொல்க.

சத்துருத்தானக்கோடான் றாண்டியேவியத்தானத்தைப்
பத்திடப்பார்க்கவந்தப் படிநரகத்திற்பாய்வார்
சொற்றமிழாகவிந்தச் சூத்திரஞ்செகத்திற்றோன்ற
வித்தகன்வேதலிங்கப் பட்டர்தாம்விளம்பலுற்றார். 15

6ம் அதிபன் 12ஐத் தாண்டி இருந்தாலும் அல்லது பார்த்தாலும் நரகத்தை அடைவன் என்பது பெரியோர்களால் சொல்லப்பட்டதாம்

புனிரண்டாம்பாவம் - முற்றிற்று

துய்யகேரளம் மூலமும் உரையும்

முற்றிற்று

எம்மால் வெளியிடப்பட்ட ஜோதிடநூல்கள்

ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் சோதிடகாவியம்
பனிரெண்டாயிரத்தில்

1.யோக பாவகம்	ரூ.40.00
2.புத்திர பாவகம்	ரூ.30.00
3.களத்திர பாவகம்	ரூ.60.00
4.ஆயுள் பாவகம்	(அச்சில்)

இதர நூல்கள்

5.சுந்தரானந்தர் சோதிட காவியம்	ரூ.135.00
6.சோதிடப்பேரகராதி	ரூ.60.00
7.சோதிட கணிதசாஸ்திரம், பஞ்சாங்க கணனம்	ரூ.60.00
8.பீராங்கி முனிவர் சோதிடம்	ரூ.15.00
9.மச்சமுனி சோதிடம்	ரூ.20.00
10.குமரக்கடவுள் அகத்தியருக்கு உபதேசித்த சோதிடஒயில்கும்மி	ரூ.35.00
11.திருவள்ளுவர் சோதிடசுந்தரசேகரம்	ரூ.35.00
12.சாதக சூடாமணி	ரூ.35.00

மற்றும்

ஆயுட்கால பலன் 12 லக்னங்களுக்கு 12 புத்தகங்கள் கணித்து எழுதியவர் பாலஷண்முகானந்தா. உங்களுடைய எதிர்கால பலன்களையும் அதிர்ஷ்டங்களையும் நன்மை தீமை நேரும் காலங்களையும் நீங்களே படித்துத் தெரிந்து கொள்ளலாம். சோதிடர்களுக்கு கையேடு போல் உதவக்கூடியது. பராசர ஓரை, சாராவளி, பலதீபிகை முதலிய நூல்களின் சாராம்சம் அடங்கியது. ஒரு லக்கினத்துக்குரிய புத்தகம் ரூ.20-00 மட்டும்



ஓம்சக்தி சிவமயம்
ஓம் அகத்தீஸ்வராய நமஹ

சித்தர்களின் தெய்வீக சாதனங்கள்

ஓம் ஆதி அகத்திய மஹாரிஷியின் திருவருளாலும் சித்தர்களின் அனுக்கிரகத்தாலும் நவக்கிரக தோஷம், செய்வினைக் கோளாறு, ஏவல், பில்லி, சூனியம், மாறுபாடு, மனக்கோளாறு, தரித்திரம், தனநஷ்டம், காரிய பங்கம், செய்தொழில் நட்டம், ஒற்றுமைக் குறைவு, ரோக உபத்திரவம், ஆண்மைக் குறைவு, புத்திர தோஷம், களத்திர தோஷம், செவ்வாய் தோஷம், சர்ப்ப தோஷம், திசாபுத்தி தோஷம், கோசார துர்ப்பல தோஷம், ஏழரைச் சனி, அஷ்டமத்து சனி, கண்டச் சனி முதலியவற்றால் ஏற்படும் தொல்லைகள் நீங்கவும், தொழிற்சாலை, வீடு ஆகியவற்றில் ஏற்படும் வாஸ்து குற்றம் நீங்கவும், கடன் வழக்கு தொல்லைகள் அகலவும், வாதம், ஆஸ்த்துமா குடல் புண், நீரிழிவு, தோல் நோய் முதலிய சகலவித நோய்கள் அகலவும், ஜோதிடம், தியானம், யோகாப்பியாசம் மாந்திரீகம் முதலியவற்றில் எளிதில் சித்தி பெறவும், பதவி, பணம், புகழ் பெறவும், சர்வ காரிய சித்தி தரும் "பஞ்சபூத ஆகிருஷ்ண" இராஜ வசிய மூல மந்திரங்களால் உருவேற்றி நல்ல சுபவேளையில் தயார் செய்யப்பட்ட மூலிகை, பாதரச மணிகளும், மாலைகளும், சிவலிங்கங்களும், இராஜ வசிய யந்திரங்களும் மற்றும் சகல தேவதா மந்திரயந்திர தாயத்துச் சக்கரங்களும், அஞ்சனமைகளும் (சுபகர்மம்), மூலிகை ரட்சா பந்தனங்களும், தெளிவான ஜெனன ஜாதகப் பலா பலன்களை அறிந்து சிறந்த பரிகாரம் செய்து நற்பயனடையவும், திருமூலர் "ஸ்ரீ புவனை சக்கிஷ" அஷ்டமாசித்து சக்கர அடைப்பு முறைகளைக் கற்று மாந்திரீகத்தில் தேர்ச்சி பெறவும் மற்றும் சகலவித பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்கும் இன்றே தொடர்பு கொள்ளவும். உள்நாடு, வெளிநாடு அன்பர்கள் எமது தொலைபேசியில் தொடர்பு கொண்டு நற்பலனடைய வேண்டுகிறோம். சுபமஸ்து.

<u>குறிப்பு :</u> நற்செயல்களுக்கு மட்டும் எம்மை அணுகவும்.

முகவரி:

ஞானயோகி Dr. **ப. இசக்கி,** I.B.A.M.R.M.P., D.I.S.M.,

மணி மந்திர வைத்திய ஜோதிடம்,

(18) 25பி/1, புலவர் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் - 627759.
நெல்லை மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி எண் : STD - 04633-243029